Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆவணி மீ 13 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 முகறம் பிறை 03 (29-08-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-34

## கருத்துக் கலசம் — மயூரா

### இசையின் சக்தி

இசையால் மயங்காதார் எவருமில்லை என்பது ஒரு கருத்து. அது உண்மையானதே இசை ஞானம் இல்லாதவனும், இசையில் ஆர்வம் இல்லாதவனும் கூட இசையில் மயங்குகிருன் வேறு எந்தக் கலைக்கும் இல்லாத கவர்ச்சி இசைக்கு உண்டு.

குயிற் குரலோ, கழுதைக் குரலோ எதுவானுலும் ஒவ்வொருவரும் குஷியாகஇருக்கும்போது தமது பாட்டில் ஒருபாட்டைப் பாடவே செய்கிருர்கள். குரலை வெளியே காட்டிப் பாடாதவர்கள் தமக்குள்ளே முணுமுணுத்துப் பாடுகிருர்கள்.

இசை கவலையை மறக்கச் செய்யும்; உடலுக்குத் தென்பு தரும்; உற்சாகத்தை உண்டாக்கும் இசையின் இனிமையில் ஊறித் திளைக்கும் போது உடலின் உணர்வுகள் ஒன்றித்து இன்பத்தை முழுமையாகத் துய்த்துக் கொள்கிறோம்.

இசையால் பயிர்கள் வளர்கின்றன. இசையால் பல நோய்கள் தீருகின்றன.

இறைவனை இசையால் துதிக்கும் பழக்கம் அனேகமாக எல்லாச் சமயங்களிலுமே உண்டு. இறைவனை மெய்மறந்து துதிக்க இசையைப் போன்று வேறு சாதனம் எதுவும் இருக்க முடியாது.

இசை அலைகள், உணர்வு அலைகளை கிளர்ந்தெழச் செய்கின்றன. இசை அலைகள் ஒலி அலைகளின் வடிவமே. ஒலி அலைகள் ஒன்றுபட்டு ஆர்க்கும் போது நாதம் பிறக்கிறது. நாதத்துக்கு நாற்சக்தி உண்டு என்று இசைவல்லாளர் கூறுவர்.

சென்னையில் அடையாறு பத்மநாபா ஆலயத்தில், 72 மணி நேரமாக இசை நோன்பு நடந்ததாக ஒரு செய்தி. அங்கு 150 இசை வல்லுநர்கள் கலந்து கொண்டு கானமழை பொழிந்தனர்.

சர்வதேசசமாதானம், சர்வதேசச் செழிப்பு, இயற்கையின் கோபத்தைத் தணித்தல், சமூகத்தில் நல்லொழுக்க நெறியை வளர்த்தல் ஆகியவற்றை நல்குமாறு இறைவனை வேண்டியே

(6ஆம் பக்கம் பார்க்க)

# உலக வங்கிக் குழு விரைவில் யாழ் வருகிறது

## றெனியும் கூட வருவார்

— அலுவலகச் செய்தியாளர் சண் ஜோண்சண் —

யாழ்ப்பாணம், ஆக. 29

**உலக வங்கியின் உயர் அதிகாரிகளைக்கொண்ட விசேஷ குழு ஒன்று மிக விரைவில் வடபகுதி வரவுள்ளது.**

**வடபகுதியில் 1983 தொடக்கம் கடந்த மாதம்வரை ஏற்பட்ட சேதங்கள், அழிவுகளை நேரில் பார்வையிடுவதற்காகவே இந்த விசேஷ குழு இங்கு வருகிறது.**

**செப்டம்பர் மாதத்தில் இந்தக் குழு யாழ்ப்பாணம் வரும்போது. நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டி மெல்லும் கூட வருவார்.**

இலங்கையில் யுத்தம் நீங்கி, அமைதி ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிர்மாணத்திற்கு உதவத் தயாராக இருப்பதாக உலக வங்கி இவ்வருடம் இலங்கைக்குக் கடன் வழங்கிய போது அறிவித்திருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர், இது விடயத்தைச் சுட்டிக்காட்டி, சமாதானம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தை நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் வலியுறுத்தி வந்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனர்நிர்மாணத்துக்கு நிதி உதவி வழங்குமாறு உலக வங்கிக்கு அவர் விண்ணப்பித்திருந்தார்.

அதனை உலக வங்கி ஏற்றுக்கொண்டு, எதிர்வரும் அக்டோபர்மாதத்தில் இலங்கைக்கு புனர்நிர்மாண உதவி வழங்குவதற்கான விசேஷ கூட்டம் ஒன்றை நடத்த இருக்கிறது.

அதற்கு முன்னோடியாக வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட அழிவு, சேத மதிப்பீடுகளை நேரடியாக மேற்கொள்வதற்காக உலக வங்கியின் உயர் அதிகாரிகள் கொண்ட விசேஷ குழு இலங்கை வருகிறது.

இந்தக் குழு வடக்கே விஜயம் செய்யும்போது நிதி மந்திரியும், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்ரின் பெர்னுன்டோவும் கூட வருவார்கள். (அ-7)

## மீனவர் நிவாரணம் திங்களுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக. 29

இராணுவக் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டிருந்த வடபகுதி மீனவர்க்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் யாவும் எதிர்வரும் முதலாம் திகதியுடன் (திங்கட்கிழமையுடன்) நிறுத்தப்படும்.

இதுபற்றி புனர்வாழ்வு அமைச்சு யாழ் அரசஅதிபருக்கு அறிவித்துள்ளது.

இதுவரைகாலமும் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத நிலையில் இருந்தனர்.

ஆனுல் இப்பொழுது கடல்வலயச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. ஆகையினுல் நிவாரணம் நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று நடைபெறுகின்றது.

யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் தம்பையா நடராசா தலைமையில் கைலாசபதி அரங்கில் இரு அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா நடைபெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் முதலாவது அமர்வில் விஞ்ஞான, வணிக, தொழில், நிர்வாக பட்டதாரிகளுக்கும்-

4 30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது அமர்வில் கலைப் பட்டதாரிகளுக்கும் பட்டம் அளிக்கப்படும்.

சுப்பிரமணியம் செபநேசன் என்பவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது. மற்றும் 512 பேர் இம்முறை பட்டம் பெறுகின்றார்கள்.

மருத்துவ பீட மாணவர்களின் இறுதித் தேர்வுகள் முடிவடையாமையால் அவர்களுக்கும், அவர்களோடு சித்த மருத்துவ பீட மாணவர்களுக்கும் பிறிதொரு தினத்தில்பட்டமளிப்பு நடைபெறும். (உ)

## தமிழ் மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 29

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நான்காவது அனைத்துலக மகாநாடு இன்று மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் ஆரம்பமாகின்றது.

மலேசிய தமிழர் தலைவரும் மலேசிய பொதுப் பணி அமைச்சருமான மாண்புமிகு டத்தோ. சாமிவேலு அவர்கள் மாநாட்டை தொடக்கி வைப்பார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மகாநாட்டில் நாற்பது நாடுகள் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கிருர்கள்.

மகாநாட்டிற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் இர. ந. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்குவார்.

### வெளியீடு

யாழ்ப்பாணம் ஆக. 29

4 வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டின் சிறப்பிதழை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆதீன முதல்வர் இன்று மாலை 4-30 மணிக்கு வெளியிட்டு வைப்பார். (உ)

## திருக்கோவிலில் நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஆக. 29

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களை மூடி, சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துமாறு கோரியும், பூசா முகாமில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்யக் கோரியும் நேற்றுக்காலை அம்பாறை திருக்கோயிலில்ஊர்வலம் [illegible]

புத்தம்பையில் உள்ள இராணுவ முகாம் வரை இந்த ஊர்வலம் நடைபெற்றது.

இதே கோரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 8 மணிக்கு வவுனியாவில் ஊர்வலம் ஒன்று நடைபெற ஏற்பாடாகி [illegible] (உ)

## சோஷலிச தமிழீழமே நிரந்தரத் தீர்வு:

# இணைப்பை வரவேற்கிறது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

யாழ்ப்பாணம், ஆக. 29

முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம், பாதுகாப்பு என்பவற்றிறகான உத்தரவாதங்களோடு வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி அறிவித்திருக்கின்றது.

இந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனுப் அஷ்ரப், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்த இருக்கின்ருர்.

பேச்சுக்களுக்கான திகதியை விரைவில் நிர்ணயித்து அறிவிப்பதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் திலீபன் கூறியிருக்கின்ருர்.

இத்தகவல்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட கொள்கை பரப்புச் செயலாளர் கவிஞர் மருதூர்க்கனி புலிகள் பிரமுகர்களுடன் நடத்திய பூர்வாங்கப் பேச்சுக்களின் முடிவில் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இணைப்பின் கீழ் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் - பாதுகாப்பு என்பவற்றுக்கான ஆலோசனைகள் உருவாக்கப்பட்டுப் போராளிகள் மத்தியில் முன்வைக்கப்படும்.

இன்றைய நிலையில் கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிவதை நாம் விரும்பவில்லை. பேரினவாத சக்திகளினுல் தொடரும் ஆபத்துக்களை நாம் புரியாமல் இல்லை.

இணைப்பில் நாம் சற்று நிம்மதியாக மூச்சு விட முடியுமே தவிர, ஒரு சோஷலிச தமிழீழத்தில் தான் தமிழர்களும் முஸ்லிம்களும் நிம்மதியான நிரந்தரமான மூச்சை விடமுடியும்.

இன்றைய இணைப்பில் அல்லது இடைக்கால நிர்வாகத்தில் மக்கள் கனவு காணும் சமத்துவமான இலட்சியங்களை அடைய முடியாது.

ஆயினும் மக்கள் தொடர்ந்து நடத்தும் போராட்டங்கள் மூலம் அதை அடையமுடியும்.

இப்போராட்டத்தைத் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் தான் சரியாகவும், விரைவாகவும் சாத்தியமாக்க முடியும்.

—இப்படி அவர் தெரிவித்திருக்கின்ருர். (உ-எ)




ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் நிறுவனம் நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு நடாத்திய அறிவுப் புதிர்ப் போட்டியில் சரியான விடையை எழுதியோர்களுள் அதிஷ்டசாலிகள் 13 பேரை யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் குலுக்கல் முறையில் தெரிவு செய்தார். முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் கூப்பனை ஷப்ரு பொது முகாமையாளர் திரு. வி. ஸ்ரீரங்கநாதனிடம் ஆணையாளர் கொடுத்த போது எடுக்கப்பட்ட படம்.

அருகில் ஷப்ரு பணியாளர்கள் காணப்படுகின்றனர். இப் போட்டியில் வெற்றிபெற்றோரின் பெயர்ப் பட்டியல் நாளைய உதயனில் வெளிவரும். (உ)

## ஈ. என். டி. எல். எவ். சர்ச்சை குறித்து ராஜன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக 29

சென்னையில் இருந்து ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்)என்ற பெயரில் வெளியான அறிக்கையில் எந்த வித உண்மையுமில்லை. இது எமது இயக்கத்திற்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் செல்வாக்கினைத் தடுக்க திட்டமிட்டுச் செய்யப்பட்ட சூழ்ச்சி நிறைந்த ஒரு சதிமுயற்சி என்பதை மக்களுக்கு அறியத்தருகின்றோம.

- இவ்வாறு ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் தலைவர் திரு. ஜீ.ராஜன் நேற்றுத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்

இதுதொடர்பாக நாம் சென்னையில் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தொடர்பு கொண்டு விசாரித்தோம் எவ்வித அறிக்கையும், யார் மூலமும் வெளியிடப்படவில்லை என அங்கு தெளிவாக்கப்பட்டது

கடந்த 7ஆம் திகதி தோழர்கள் ஈஸ்வரன், டக்ளஸ் தேவானந்த, அசோக், ரமேஸ், தங்கராசா ஆகியோர் இயக்க மத்தியகுழுவால் நான்கு காரணங்களுக்காகஇடை நிறுத்தி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்களது பெயரில் செய்யப்பட்ட சூழ்ச்சியே இச் சம்பவமாகும்- இப்படி அவர் தெரிவித்தார். (-119)

## புரட்சி

மணிலா, ஆக. 29

பிலிப்பின்ஸில்நேற்றுக் காலை ஜனுதிபதிமாளிகை மீது தாக்குதல் நடத்தி அரசைக்கவிழ்க்க 300க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மேற் கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

அரசு ஆதரவுப்படைகள் பலத்த எதிர்த்தாக்குதல்கள் நடத்தி கிளர்ச்சியை அடக்கினர்.

### சுபநேரம்

29-8-1987
சனிக்கிழமை
சுபநேரம்:
3.05 முதல் 4.35 வரை
ராகுகாலம்:-
9.05 முதல்- 10.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

முக்கிய அறிவித்தல்

இயேசுவே ஆண்டவர்

தேவகிருபையால் மீண்டும் 30-08-1987 [ஞாயிறு தினம்] இருந்து யாழ்ப்பாணம் 24, இராமையாச் செட்டியார் ஒழுங்கையில் அமைந்துள்ள "சீயோன் தேவாலயத்தில்" ஞாயிறு ஆராதனை காலை 9-00 மணிக்கு நடைபெறும். அனைவரும் வந்து தேவ ஆசீர்வாதம் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்ருேம்.

— போதகர்

விசேட அறிவித்தல்

R. B. BOOKING CENTRE

யாழ் — கொழும்பு — மட்டக்களப்பு செல்லும் பிரயாணிகளின் நன்மை கருதி இரவு பஸ் சேவைகளை 29-08-87 சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

புறப்படும் நேரம்
மட்டக்களப்பு — காலை 5-30, மாலை 7-30
கொழும்பு — காலை 6-30, மாலை 7-30

தலைமை அலுவலகம்:
R. B. BOOKING CENTRE
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கிளைகள் :
லக்கி - பேபி பிளாசா, சுன்னுகம் பஸ் நிலையம், கந்தரோடை ரோட், சுன்னுகம்.
ராஜா ஸ்ரோர்ஸ், மல்லாகம் சேவிஸ் நிலையம் அருகில், மல்லாகம்.
சேது ஸ்ரோர்ஸ், வின்ஸர் தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம்.

பிரயாணக் கட்டணம் :
கொழும்பு — 100/- மட்டும்
மட்டக்களப்பு, கல்முனை — 125/- மட்டும்

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹொண்டா மோட்டார் சைக்கிள் CB 125 மிக நல்ல நிலையில் உள்ளது. நேரில் வரவும். ''மலரகம்'' ஏழாலை வடக்கு, ஏழாலை. (1575)

மூன்று ஏக்கர் இருபோகம் செய்யக்கூடிய வயல் காணியும் இரண்டு ஏக்கர் தோட்டக்காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ. கனகையா, மரயடித்தகுளம், ஓமந்தை. (1565)

நாலடியார், பரிபாடல், புறநானூறு. சிலப்பதிகாரம், நளவெண்பா, சிவகசிந்தாமணி, குண்டலகேசி, சீருப்புராணம், திருக்குற்றாலக்குறவஞ்சிஆகிய புதிய நூல்கள் விற்பனையாகின்றன. கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

பற்றறி சார்ஜர் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்தியருகில்) (1579)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், Show-case, பற்றி சார்ஜர், Chopper சைக்கிள், சாப்பாட்டு மேசை கதிரைகள், கேக் மிக்சர், Baby cot, ஹோல்செற், பிளாஸ்ரிக் கதிரைகள் Meat sofe, Stand Fan, கிளாஸ் வகைகள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்தியருகில்) (1580)

மானிப்பாய் சுற்றுடலில் வீடுவளவு உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு விளம்பர எண்-66, மே/பா. உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1588)

### கல்வி

Sun Star Engineerig ng Centre, Radio, T.V Typing (இருபாலாரும்)- Welding, Wiring, Re-Winding. ஆரம்பம் 5-9-87 Th ory S. C. Emmanuvel B.sc (Cey) Practical:- K. Srithаran. இரு சான்றிதழ்கள் வசதியற்றவர்களுக்கு சலுகை உண்டு. விபரங்களுக்கு:-Director M.Ganash, Jegajothy Engineering Works, 41, Bazzar Lane, Jaffna. (1556)

### ரேனியோ

சகலவித அச்சு வேலைகட்கும், தட்டச்சு, ரேனியோ பிரதிகளை விரைவாகவும் சிறப்பாகவும் செய்துகொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். (1562)

### அறிவித்தல்

என்னுடைய அம்பாள் மஹோற்சவ பத்ததியை வைத்திருப்பவர்கள் தயவு செய்து உடன் கொண்டு வந்து தரவும். அவசியம் என் மாணவர்கள் இதைக் கவனிக்கவும். தா. மகாதேவக் குருக்கள், கண்ணகை அம்மன் கோவில், இணுவில். (1570)

### தேவை

அச்சகத்தில் பங்காளராகவும், முழுநேர ஊழியராகவும் பணிபுரிய ஆண்/பெண் இருபாலாரும் தேவை. முழுமையான விபரங்களுடன் 5-9-87க்குள் நேரில் அல்லது பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்கவும். 'மலரகம்' ஏழாலை வடக்கு. ஏழாலை. (1575)

நல்லூரில் சகல வசதிகளுடனும் இரண்டு அல்லது மூன்று அறை வீடு ஒன்று வாங்குவதற்குத் தேவை. விளம்பர எண் 64, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (1574)

### புத்தகம்

குடும்பத்தில் உள்ள பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மூன்று பிரிவினருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக உங்கள் அபிமான எழுத்தாளர்களின் முத்தான கதைகளுடன் OCTO-BER முதல் வெளிவருகிறது. 'முல்லை' மாதம் ஒரு நாவல் தபாலில் பெறுவதாயின் பத்து ரூபா முத்திரைகள் அனுப்பவும். இலங்கை முழுவதும் விற்பனையாளர்கள் தேவை. டேவிட் விகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1583)

உங்கள் பிறந்த திகதியிலும் பெயர் அமைப்பிலும் பொதிந்துள்ள துர் அதிஷ்டங்களைக் கண்டறிந்து பிறந்த திகதிக்கேற்ப பெயரை அதிஷ்டகரமாக அமைத்து மகிழ்ச்சிகரமாக வாழ வழி காட்டும் உன்னதமான நூல் 'வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி' தனிப்பிரதி 6/50. பூபாலசிங்கம் புத்தகசாலை, ராஜன் புத்தகசாலை, கிருஷ்ணசாமி புத்தகசாலை. யாழ்ப்பாணம். லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் நெல்லியடி, நாயகபாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். (1571)

### சேவை

உங்கள் தேவைகளை உடனுக்குடன் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் செய்து கொள்ள யாழ்நகரின் முதன்மை நிறுவனம் கிளின்கட். எங்களிடம் சகல அளவுகளிலான போட்டோ ஸ்ரட், தெளிவான ரேனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் எவ்வேளையிலும் பெற்றுக்கொள்ளலாம். உங்களின் திருப்தியே எங்களின் சேவை. ''கிளின்கட்'' இல. 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (763)

சங்கானை வெல்லில் முருகமூர்த்தி சிரணி நாகம்மாள் ஆலயதேர்த் திருவிழா வீடியோ காட்சிகளை 30 ஆம் திகதி ஞாயிறன்று வட்டுக்கோட்டை சிற்றிசன் ஒளிபரப்பில் கண்டு களிக்கலாம். சங்கானை ஸ்ருடியோ நித்யசித்ரா ஸ்தாபனத்தார் ஒளிப்பதிவு செய்து அளிக்கிறார்கள். சிறந்த வீடியோவுக்குஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை. (1506)

### மியாமியில் வெற்றிடம்

தையற் கலையில் தனியிடம் பெற்றிருக்கும் மியாமி காமென்ஸ் ஸ்தாபனத்தாருக்கு தையலில் அனுபவமுள்ளவர்கள் உடன்தேவை. மியாமி காமென்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (1566)

---

ஆயுத பரிகரணமும் - அபிவிருத்தியும்:

# வல்லரசுகளின் ஒத்துழைப்பு இன்றி எதையும் சாதித்துவிட முடியுமா?

சின்னஞ்சிறு ஈரான் அதிவேகப் படகுகளையும் சீனாவின் பட்டுப்பூச்சி (Silkworm) ஏவுகணைகளையும் வைத்துக் கொண்டு வளைகுடாவில் வல்லரசுகளையே கலக்கி வருகிறது.

அப்படியானால் தற்போது வல்லரசுகளின் கையில் இருக்கும் நாசகார ஆயுதங்கள் எத்தகைய அழிவை ஏற்படுத்



கோர்ப்பச்சேவ்

தக் கூடியவை என்பதை சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாது.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்து 40 வருடங்கள் கழிந்து விட்டன.

ஐரோப்பாவின் சில கேந்திர இடங்களில் இருந்து அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இன்னும் துருப்புக்களை விலக்கிக் கொள்ளத் தயங்குகின்றன.

ஒன்றுக்கொன்று உள்ள அவநம்பிக்கையே இதற்குக் காரணம்.

இந்த இருநாடுகளும் தங்கள் நாடுகளில் மட்டும் அல்ல தங்கள் நேச நாடுகளிலும் ஆயுதங்களைக் குவித்து முழு உலகிலுமே யுத்த மூட்டம் ஒன்றை உருவாக்கி வருகின்றன.

இரண்டாம் உலகமகா யுத்த முடிவில் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களில் அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளின் தாக்கங்கள் இன்னும் மறையவில்லை. அவற்றின் வடுக்கள் இன்னும் ஜப்பானில் இருந்து வருகின்றன.

40 வருடங்கள் கழித்தும் ஜப்பானிய மக்களைச் சந்ததி சந்ததியாக இந்த அணுகுண்டுகளின் தாக்கங்கள் பாதித்து வருகின்றன.

தற்பொழுது வல்லரசுகளிடம் உள்ள நூற்றுக்கணக்கான அணுசக்தி ஏவுகணைகளில் ஒரு ஏவுகணையே ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டைவிட பல நூறு மடங்குகள் சக்தி வாய்ந்தது என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ஜெனிவாவில் தூதுவர்கள் மட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் ஆயுதபரிகரணப் பேச்சுக்களின் பெறுபேறுகளும் வருட இறுதியில் நியூயோர்க்கில் கோர்பச்சேவ் - றேகன் சந்திப்பு நடைபெறும் வரை நிச்சயமானவை அல்ல.

## நியூயோர்க் மாநரடு

இந்த நிலையிலேயே தற்போது நியூயோர்க்கில் ஐ. நா. ஆதரவில் ஆயுதபரிகரணமும் அபிவிருத்தியும் தொடர்பான மாநாடு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

சர்வதேச அரங்கு ஒன்றில் நடக்கும் இதுசம்பந்தமான முதலாவது மாநாடு இதுவாகும்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த மாநாடு செப்டம்பர் 11 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நட்வர் சிங் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பது குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.

மாநாட்டை அமெரிக்கா பகிஷ்கரித்து வருகிறது.

ஆயுத பரிகரணத்துக்கும் அபிவிருத்திக்கும் முடிச்சுப்போடமுடியாது என்பது அமெரிக்காவின் வாதம்.

மாநாட்டில் சோவியத் யூனியன் பங்குபற்றியது மட்டுமல்ல ஆயுதங்களுக்குச் செலவிடும் பணத்தைக் குறைத்து அதை வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்குச் செலவிடவேண்டும் என்றும் யோசனை தெரிவித்துள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் ஆயுதபரிகரணமும் அபிவிருத்தியும் தொடர்பான ஐ.நா மாநாட்டின் முழு நோக்கமுமே இதுதான்.

ஆனால் ஆயுதஉற்பத்தியில் முழு அளவில் ஈடுபட்டுள்ள இருபெரும் வல்லரசுகளான அமெரிக்காவினதும் சோவியத் யூனியனதும்ஒத்துழைப்பு இன்றி இத்தகைய

உலக உலா

என்.பி. சிலன்

மாநாடுகளினால் பயன் எதுவும் ஏற்பட்டுவிட முடியாது.

வெறும் பொதுஜன அபிப்பிராயத்தை மட்டுமே இத்தகையமாநாடுகளினால் ஏற்படுத்த முடியும்.

## இரு பிரச்சினைகள்

உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள இரு முக்கிய பிரச்சினைகளில் ஒன்று ஆயுதக்குறைப்பு. மற்றது அபிவிருத்தி.

உலகில் இன்று நிமிடத்துக்கு 20 லட்சம்



றேகன்

டொலர் பணம் ஆயுதப் போட்டிக்குச் செலவிடப்பட்டு வருகிறது. அதே சமயம் உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர்வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவருகின்றனர். பத்துப்பேருக்கு ஒருவர் பட்டினியால் வாடுகின்றனர் அல்லது ஊட்டச்சத்துக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வல்லரசுகளினால் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் பணத்தில் ஒரு சதவீதத்துக்குக் குறைவான பணத்தை செலவிட்டாலேயே விவசாய உபகரணங்களை வாங்கி உணவில் உலக நாடுகள் தன்னிறைவு கண்டுவிடமுடியும்.

இன்று உலகில் இருந்து பெரியம்மை என்ற கொடிய நோயை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் 30 கோடி டொலரைச் செலவிட்டுள்ளது.

தற்போது வல்லரசுகளிடம் உள்ள அதிசக்தி வாய்ந்த நவீன அணு ஏவாயுதம் ஒன்றுக்கான செலவும் இதுதான்.

## வளர்முக நாடுகள

இப்படியான நிலையில் வளர்முகநாடுகளும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக்கொண்டு ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டிருப்பது வருந்தத் தக்கது.

வளர்முக நாடுகள் சில தமது தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை ஆயுதக்கொள்வனவுக்காகச் செலவிடுகின்றன என்று புள்ளிவிவர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வளர்முக நாடுகளின் முன்னேற்றம் தொடர்ந்து முட்டுக்கட்டை நிலையில் இருந்து வருவதற்கு இத்தகைய போக்கும் ஒரு காரணம் ஆகும்,

உலக கைத்தொழில் நாடுகளில் இன்று முதன்மை ஸ்தானத்தை வகித்து வரும் ஜப்பானின் முன்னேற்றத்துக்கு அதன் பொருளாதாரக் கொள்கையும் ஒரு காரணம்.

ஜப்பான் தனது தேசிய வருமானத்தில் ஒரு சதவீதத்தை மட்டும் நாட்டின் பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது.

ஆகவே இன்றைய நிலையில் உலகில் ஆயுதத்துக்காகச் செலவிடப்படும் பணத்தை அபிவிருத்திக்குத் திசை திருப்புவது அவசியமானதுதான்.

இதற்கு வல்லரசுகளின் ஒத்துழைப்பு இல்லாமல் எதுவும் சாத்தியப்படமாட்டாது.

★

---


★ கலர் பிலிம்சுருள்களை இரண்டு நாட்களில் Processing — Prinintg நவீனமுறையில் செய்து தருபவர்கள்

★ கொழும்பு ஸ்ருடியோ ★

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

★ ஐந்து(5) அதிஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர் பிலிம் சுருள் இனம்.



## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

★ பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் 30-08-1987 க்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.

★ குறைந்தபட்சம் 3 வருட அனுபவம்

★ 1. CLERKS SR 1200 (Graduate)
★ 2. COMPUTER OPERATOR SR 1500 (Diploma / Certificate)
★ 3, MECHANICS SR 1500 ,, (H. E. M./L. V. M.)
★ 4. MECHANICS SR 1500 , ELECTRICAL
★ 5. MECHANICS HYDRAULICS SR 1500 ,,
★ 6. MECHANICS A R CONDITIONING SR 1500 ,,
★ 7. MECHANICS (GENERATORS) SR 1500 ,,
★ 8. TYRE REPAIRMAN SR 1000
★ 9. LABOURER FUEL ATTENDENT SR 950
★ 10. LUBEMAN SR 950
★ 11. MECHANIST WELDER SR 1200
★ 12, AUTO BODY REPAIR SR 1200
★ 13, AUTO PAINTER SR 1200
★ 14, HEAVY DUTY DRIVER SR 1200

**1 SR. 7.45 R..**
**Labour Licence 96**
**Approval No. AL/96/13/87**

Head Office:
Construction
& Development
Company Ltd.
37, S. De S. Jeyasinghe Mawatha,
NUGEGODA.

தொடர்பு.-
**V. P. பாலசுப்பிரமணியம்**
**(V. P. BALA)**
C/o N.V. பொன்னுத்துரை
பாடசாலை வீதி.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.


---

# ஜயேந்திர சுவாமி - ரஜ்னிஸ் சுவாமி இருவருக்கிடையே மோதல்

கமண்டலத்தையும் தண்டத்தையும் காஞ்சி மடத்தில் விட்டுவிட்டு வெளியேறிவிட்டார் 69 ஆவது மடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

அண்மையில் அவருக்கும் ரஜ்னிஷ் ஸ்வாமிக்கும் ஒரு கருத்துமோதல் ஏற்பட்டது.

''மக்களின் முட்டாள்தனத்தினால் தான் ரஜ்னிஷ் போன்ற சாதாரணமானவர்கள் பிரபலம் பெறுகின்றார்கள்''



—இப்படி ஸ்ரீ ஜயேந்திரஸ்வாமிகள் கூறியதே, கருத்து மோதலுக்கான காரணம்.

உலகம் எல்லாம் சுற்றியடித்துவிட்டு மீண்டும் இந்தியாவில் தனது ஆத்மீகப்பணியை நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் ரஜ்னிஷ் ஸ்வாமி இப்படிக் கூறவிடுவாரா?

ரஜ்னிஷின் பூனா மடத் [illegible] ஆனந்த மைத்ரேய காஞ்சிக்குப் பதிலளித்தார்.

''காஞ்சி ஸ்வாமிகள் சொன்னது ரஜ்னிஷின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

ரஜ்னிஷ் சொன்னார்: ''காஞ்சி சொன்னது முற்றிலும் சரி. ஜயேந்திரஸ்வாமி போன்ற முட்டாள்தனமானவர்களுக்காகவே நான் இங்கு இருக்கின்றேன்.

''எவன் தன்னை அதிசிறந்தவனாகக் கருதுகின்றானோ, அவனே உலகில் சாதாரணமானவன்.

''என்னை சாதாரணமானவன் என்று காஞ்சியார் கூறியது சரியே.

''ஜயேந்திர ஸ்வாமி அதிசிறந்த ஒரு முட்டாள். எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளும் ஒன்றுமே தெரியாதவர்.

சோக்கிரட்டீஸ் சொன்ன ரகங்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

★ ஒன்றுமே தெரியாத எல்லாம் அறிந்தவர்கள் இருக்கின்றார்கள்.

- பிரசாந்தி -

★ எல்லாம் தெரிந்த படிப்பறிவில்லாதவர்கள் இருக்கின்றார்கள்.

இவைதான் சோக் [illegible] சொன்ன [illegible]

''எனக்கு ஒன்றுமே தெரியாது'' —இப்படித் தான் சோக்கிரட்டீஸ் தன்னைப்பற்றிச் சொன்னார்.

சோக்கிரட்டீஸின் ரகத்தைக் சேர்ந்தவன் நான்.

நானும் படிப்பறிவில்லாத சாதாரண மக்களில் ஒருவன்—''

இவ்வாறு ரஜ்னிஷ் தெரிவித்தார்.

ஆதாரம்:
இல்லஸ்டிரேட் வீக்லி ஒப் இன்டியா.

### இடம்மாற்றம்

கொழும்பு ஸ்ருடியோ ஸ்ரான்லி வீதி, 20-8-87 முதல் (வெலிங்டன் சந்திக்கு வடக்கே) 55, மணிக்கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (1500)

### திருமண சேவை

பொறியலாளர்கள், வைத்திய கலாநிதிகள் கணக்காளர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள். வர்த்தகர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தனியார்துறை ஊழியர்கள், தாரமிழந்தவர்கள், விதவைகள், வெளிநாடுகளில் நிரந்தர வேலைவாய்ப்பு பெற்றவர்கள் ஆகிய தரத்திலுள்ள ஆண்/பெண் மணமக்கள் எம்மிடம் இருக்கின்றார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர எண்-65,மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1576)


பட்டமளிப்பு விழா - 1987

யாழ். பல்கலைக்கழகம்

மேற்படி விழாவில் பங்குபற்றும் பட்டதாரி மாணவர் அனைவருக்கும் எம் வாழ்த்துக்களும் நல்லாசிகளும்...!

★ ஞானம்ஸ் ஸ்ருடியோ ★

உங்களை அழைக்கின்றது!
(PROMINENT LETTERS)

யாழ்நகரில் அதிசிறந்த கலர் | கறுப்பு-வெள்ளை படப்பிடிப்பாளர்கள்

பட்டதாரி அங்கிகள்:- கொழும்பு வளாகம், பேராதனை வளாகம், யாழ் வளாகம் எம்மிடம் உண்டு.

ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சஞ்சீவிக் குறுநாவல்



# மேற்கில் தோன்றும் உதயம்

- அநுராசன் மகன் -

கண்ணாடியின் முன் நின்று, குங்குமத்தை இடும்போதுதான், அவதானித்தாள். விஜயன் அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கின்றான். அவளுடைய அழகில் ஏதோவொரு புதுமை, வித்தியாசம் தெரிந்திருக்க வேண்டும்! எவ்வளவு நேரமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறானோ...? மெதுவாகத் திரும்பி அவனை நோக்கினாள் வித்தியா. பட்டு வேட்டிக்கு மெட்ச்சாக, இளமஞ்சள் நிற மெல்லிய கோடுகளமைந்த சேர்ட். புதுமாப்பிள்ளைக் 'களை' இன்னும் கலையவேயில்லை. குறும்பான அவன் சிரிப்பு நாணத்தை வரவழைத்தது. ''பன்னிரண்டு மணியாகுது. சரியாக சாப்பாட்டு நேரம் பார்த்தே போறது... கொஞ்சம் முந்திப்போக வேணுமே...'' - சமையற் கட்டிலிருந்தவாறே குரல் கொடுத்தாள் பார்வதி. இப்போது கொஞ்சநாட்களாக, அவள் தான் அந்த டைம் கீப்பர் வேலையை செய்கின்றாள். என்னென்ன நாட்களுக்கு, யார் யாருடைய விருந்து என்று ஞாபகப் படுத்துகிறாள். திருமணமாகிய அந்த புதுமணத் தம்பதியரைவிட, அளவு கடந்த உற்சாகத்தில் மிதந்தாள் பார்வதி.

மூன்று ஆண்மக்களைப் பெற்ற பார்வதிக்கு, மகள் இல்லையே என்ற மனதின் அடித்தளத்திலிருந்த ஏக்கம், மருமகளைக் கண்டதும் பனியாக உருகி விட்டது. வித்தியா எந்தக் காரியத்தைச் செய்ய முன்வந்தாலும் தடுத்து விடுவாள். ''புள்ள! நீ போய் முன்னுக்கிரு... நான் செய்யிறன்...'' ''அதற்கென்ன மாமி நான் செய்யிறன்... ...'' ''புள்ள நானிருக்கும் மட்டும் நீ ஒண்டும் செய்யக் கூடாது...'' — அந்த அன்புக்கட்டளைக்குப் பணிந்து விடுவாள். ''புள்ள முகம் கழுவ இல்லையோ... புள்ள குளிக்க இல்லையோ...'' ஒவ்வொன்றாக கட்டளையிட்டு, அலங்காரங்களுடன் வந்து நிற்கும், மருமகளின் அழகைக்காண பெருமையாகவிருக்கும்.

வித்தியாவும், விஜயனும் அரசாங்க வங்கியொன்றில் கடமையாற்றுகிறார்கள். கடமை ரீதியில் ஏற்பட்ட நட்பு, காதலாகி, திருமண பந்தத்தில் இறுகியது.

நீரிழிவு நோயாளியாகிய கணவனுடன், மூன்று ஆண் மக்களையும் வளர்த்து, ஆளாக்குவதற்கு அவள் பட்டபாடு; தனது தோட்ட வேலைகளுடன், வேறு தோட்டங்களுக்கும் கூலிக்குப் போவாள். கடைகளுக்கு கடையப்பம் சுட்டு விற்றாள். ''பார்வதி உன்னுடைய மனசுக்குத்தான் கடவுள் உனக்கு மூன்று ஆண்மக்களைத் தந்திருக்கிறார்......''

— அவளிடம் காலையில் அப்பம் வாங்க, வருகின்ற கந்தப்பு மாஸ்டரின் வாழ்த்தில், உச்சி குளிர்ந்தாலும், பெண் பிள்ளையில்லாத குறையும் மனதில் இழையோடியிருந்தது. ''இருந்தாலும் அண்ணை! இப்ப ஓடியாடி உழைச்சுக் கொண்டிருக்கிறன். கடைசிகாலத்தில் என்னை வைச்சுப் பார்த்துக் கவனிக்கிறதுக்கு ஒரு பெண் பிள்ளையில்ல...''—அவள் கண்கலங்கும் போது, அவரே அவளை சமாளித்து விடுவார்.

இப்ப என்னைப் பார் பார்வதி! ஆசைக்கொரு ஆணையும், ஆஸ்திக்கொரு பெண்ணையும் பெத்துப்போட்டு, இப்ப இரண்டுமே வெளிநாட்டில தாலிக்கு எனக் கொண்டு வந்தால் அனாதையாகத்தான் இழுபட வேணும்...'' தன்னுடைய துயரத்தைக் கூறி, அவளைத் தெம்பூட்டுவார். அவருடைய தெம்பும், தைரியமும் வாய்ச்சொல்லில் மட்டுமல்ல; செயலிலும் அவளுக்கு உறு துணையாகவிருந்திருக்கின்றன.

வறுமைச்சூழலில்சிக்கி, உறவினர்களாலும் கைவிடப்பட்ட நிலையில், அவருடைய திட்டமிடப்பட்ட ஆலோசனைகள் தான். அவளை இந்த வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிநடத்தி வந்துள்ளன. எந்தவொரு முடிவும் அவருடைய ஆலோசனை இன்றி நடைபெறாது. அதைப் போலவே ஒருநாள்;

'அண்ணை! விஜயன் பாங்கில வேலை செய்யிற ஒரு பெடிச்சியை விரும்பியிருக்கிறானாம்...' 'அதற்கென்ன பார்வதி? நீயும் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டுப்படிப்பிச்சிருக்கிறாய். அதற்காக ஏதாவது வாங்குறதை வாங்கிக் கொண்டு செஞ்சு வைக்க வேண்டியது தானே...!', — 'அண்ணை ...' அவளுடைய முகம் கறுத்தது. 'என்னுடைய மகன் படிப்பிச்சதற்காக இன்னொருவரிட்டச் செலவு வாங்கிறதே. அண்ணை! எனக்கு ஒரு சதமும் தேவையில்லை. அவன் சந்தோஷமாயிருந்தால் சரிதான்...'— 'பார்வதி! உன்னைப் பார்த்து இஞ்சையுள்ள தாய்மாரும் திருந்த வேணும். தேவையில்லாம சீதனம் கேட்டு, ஏன் அதுகளுடைய வாழ்க்கையைப் பாழாக்குவான்...'

ஏதோவொரு தற்பெருமைக்காகவும், ஆடம்பரத்துக்காகவும் சீதனம் கேட்டுத் திரிகின்ற இந்த உலகில்; இப்படியும் ஒரு பெண்ணா...? இன்னொருவரைத்துன்புறுத்தாமல், இன்னொருவருக்குக் கடமைப்படாமல் தன்னுடைய உழைப்பிலும், முயற்சியிலும் நம்பிக்கை வைத்து வாழுகின்றவர்களுடைய வாழ்க்கைக்கு இறைவன் என்றுமே பக்கத்துணையாகவிருப்பான்...'என்ன அண்ணை! கண் கலங்குகிறீர்கள்?' 'ஒன்றுமில்லைப் பார்வதி உன்னை என்றைக்குமே இறைவன் கைவிட மாட்டான்!...'

—அடுப்படியோடு, இருந்து விறகோடு விறகாக வெந்து வேகி உருகிக் கொண்டிருக்கின்ற அந்த உடல்; அடிக்கடி முட்டிமோதி இருமிக் கொள்வதை, அவரால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

'பார்வதி! இரண்டு மகன்மாரும் உழைக்கிறான்கள், நீ இந்தத் தொழிலை விடலாந்தானே...'

'அண்ணை! பெத்த பிள்ளையைவிட நான் இந்தத் தொழிலைத்தான் நம்புறன்...'

'நான் இல்லையென்று சொல்லையில்லை. அதற்காக அளவுக்கு மிஞ்சிப் போய்ஏன்வருத்தத்தைத் தேட வேணும்? இனி உன்ரை உடம்பையும் பராமரிச்சுக்கொள்...!'

அவர் கூறுவதிலும் நியாயமிருந்தது. அன்றோடு அந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டாலும், மற்றைய முயற்சிகளில் அவளை ஒருவராலுமே கட்டுப்படுத்த முடியவில்லை. உழைத்துப் பழகிய உடம்பு; உழைத்து உண்ட உடம்பு. தன்னம்பிக்கையிலும், பிடிவாதத்திலும் தனி உரம் பெற்றிருந்தது.

ஒருநாள்; வேலையால் வந்த விஜயன் கூறினான்.

'அம்மா! திருமணம் நடக்காது போலவிருக்கு...'— 'அவளுடைய வீட்டாருக்கு இந்தத் திருமணத்திலை விருப்பமில்லைப்போல கிடக்கு...'

'அப்ப என்னடா செய்யப் போறாய்...?'— 'திருமணத்தைக் கைவிட வேண்டியதுதான்...' — அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவன்மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் இப்பிடியா நடப்பது? மனம் போன நிலையில் காதலிப்பதும் கைவிடுவதும். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தக் குழப்பம் கோபத்தைத்தான் வரவழைத்தது.

'டேய் என்னடா சொல்லுறாய்...'

'அம்மா! கலியாணத்தைக் கைவிடுவம் என்று சொன்னேனே தவிர அவளைக் கைவிடுவதாச் சொல்லயில்லையே. திருமணத்திலை என்னம்மா இருக்கு? அது நாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட ஒரு சம்பிரதாயச் சடங்கு. என்னைப் பொறுத்த அளவிலை அது எனக்குத் தேவையேயில்லை! நானும் அவளைப் பூரணமாய் நம்புறன். அவளும் என்னைப் பூரணமாக நம்பி என்னோடை வாழச் சம்மதிச்சிருக்கிறாள். பிறகென்னம்மா...? இந்த சாஸ்திரமும் சடங்கும்...'

பார்வதி அமைதியாகவேயிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

'விஜயன் என்னதானிருந்தாலும் பார்க்கிற நாலு சனம் எங்களைப் பத்தி என்ன நினைக்கும்...?'

'அப்ப ஒண்டு செய்வம் அம்மா. கோயில் குளமென்று ஒரு இடமும் தேடிப்போகத் தேவையில்லை. ஒரு நல்ல நாளில் உன்னுடைய கையாலேயே தாலியை எடுத்துத்தா... கட்டிவிடுறன்,' அவன் உணர்ச்சிபூர்வமாகக் கூறினான். அவனுடைய சிந்தனைகள், செயல்கள் எப்போதுமே புதுமையானவை தான். விதவையான தன்னால் திருமண காரியங்களுக்கு முன்னிற்க முடியாதென்பதற்காக; தன்னுடைய உறவு முறைகளைத் தேடிக் கொண்டிருந்தவள்; அதனை ஏற்றுக் கொள்வாளா...?

'அம்மா என்னுடைய நல்வாழ்வில் அக்கறையும் ஆர்வமும் வைச்சிருக்கிறதில உன்னைவிட வேறொருவர் இருக்க முடியுமா...?'

அவள் எதுவுமே தெரிவிக்கவில்லை. ஊமையானாள். மனம் கொண்டதுதான் மாளிகை என்பார்கள். ஆனால் அதற்காகக் காலங்காலமாகப் பேணி ஒழுகி வந்த சாஸ்திரங்கள், சம்பிரதாயங்களை ஒதுக்கி, அவற்றுக்கு மாறாக, நடந்து பின் ஏதாவது விபரீதம் நடந்துவிட்டால்...! அவனுடைய முடிவுக்கு அவளும் இணங்கவில்லை. அவர்களுடைய திருமணமும் நடக்கவில்லை. சட்டபூர்வமான பதிவுடன் அவர்களும் புதுவாழ்க்கையை ஆரம்பித்து விட்டார்கள்.

'அம்மா நாங்கள் போயிட்டு வாறம்'— அதைத் தொடர்ந்து எழுந்த மோட்டார் சைக்கிளின் இரைச்சல். படலையைச் சாத்துவதற்காகச் சென்றாள் பார்வதி. அவர்கள் இன்னும் புறப்படவில்லை.

'தம்பி! கவனமாகக் குலுக்கியடிக்காமல் கொண்டு போ...!'

அவள் அக்கறையாகக் கூறியதிலும் காரணமிருந்தது. கடந்த இரண்டு, மூன்று தினங்களாக அவதானித்ததை நேற்றுத்தான் வெளிப்படையாகக் கேட்டாள் பார்வதி. 'என்ன பிள்ளை இந்தக் கிழமை விபூதி, குங்குமம் வைச்சிருக்கிறாய்...' — 'இல்லை மாமி இந்த மாசம் முழுகாமை இருக்கிறன்' பார்வதியின் மனம் துள்ளிக் குதித்தது.

(வளரும்)

---

# நான்கு வல்லரசுகள் முறைவைத்து நாற்பது ஆண்டுகள் காத்த ஹெஸ்

- தீபன் ராஜா -

நான்கு சுவர்களுக்கு நடுவில் நாற்பதாண்டுகள் அவர் சிறைவாசத்தை அனுபவித்தார்.

நான்கு வல்லரசுகளின் படைகள் மாதம் ஒரு வல்லரசு என்று முறை வைத்து அவரைக்காவல் புரிந்து வந்தன.

கடந்த வாரம் அவர் காலமானார்.

அவரின் சடலம் கடந்த திங்கள் இரகசியமான இடத்தில் புதைக்கப்பட்டது.

அவர் தான் ருடோல்ப் ஹெஸ். ஹிட்லரின் வலது கரமாக விளங்கியவர்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது சிறை பிடிக்கப்பட்ட நாஸிக் கைதி அவர்.

இரண்டாம் உலக மகா யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்த சமயம்......

சோவியத் யூனியனுக்குள் நுழைய ஹிட்லர் தலைமையிலான ஜேர்மன் படைகளுக்கு இன்னும் ஆறு வாரங்களே இருந்த சமயம்......

10.5.1941. ருடோல்ட் ஹெஸ் தனி விமானம் ஒன்றில் ஸ்கொட்லாந்தில் இறங்கினார்.

அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில்.

அவருடன் பேச்சுக்கள் நடத்தவே ஹெஸ் பிரிட்டன் வந்தார்.

பேச்சுக்கள் நடந்ததா இல்லையா என்பது தெரியவில்லை.

ஆனால் ஹெஸ் உடனே கைது செய்யப்பட்டார்.

இரண்டாம் உலக யுத்தக் கைதி என்ற பெயரில் நாரம்பேர்க் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட அவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

மேற்கு பேர்லினில் பிரஷ்ஷியர்களால் கட்டப்பட்ட இராணுவச் சிறையில் ஏனைய நாஸிக் கைதிகளுடன் இவரும் சிறையில் வைக்கப்பட்டார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனியைத் தோற்கடித்த நான்கு வல்லரசு நாடுகளின் (பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ்) படைகள் இச்சிறையைக் காவல் புரிந்து வந்தன.

1966இல் ஹெஸ்ஸைத் தவிர ஏனைய நாஸிக் கைதிகள் இச்சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஹெஸ்ஸை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க ஏனைய மூன்று வல்லரசுகள் இணங்கிய போதும், சோவியத் யூனியன் இணங்க மறுத்துவிட்டது.

இதன் காரணமாகக் கடந்த 17 ஆம் திகதி வரை, சுமார் 20 ஆண்டுகளாக, ஹெஸ், 600 அறைகள் கொண்ட ஸ்பான்டு சிறையில் தனிமைக் கைதியாக இருந்து வந்தார்.

### சோவியத் கோபம்

ஹெஸ் மீது சோவியத்துக்குச்சரியான கோபம்.

'ஜேர்மன் நாஸிக் கொள்கையின் சின்னம் தான் ஹெஸ்'— இப்படி சோவியத் யூனியன் வர்ணித்தது.

அப்படியானவரை விடுதலை செய்வது என்பது எம்மால் நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று- இது சோவியத் யூனியனின் கருத்து.

1941 இல் ஹெஸ் திடீரென்று பிரிட்டன் சென்றது ஏன்? இது சோவியத்துக்குச் சந்தேகத்தை எழுப்பியது.

சோவியத்தை ஆக்கிரமிப்பதற்கு பிரிட்டனின் துணையை நாடி ஹெஸ் சென்றாரா? அல்லது கம்யூனிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் பிரிட்டனைச் சேரும்படி தூண்டச் சென்றாரா?

எல்லாமே மர்மமாக உள்ளது.

சோவியத் மீது நடத்தப்பட்ட அக்கிரமச் செயல்களுக்காக இறக்கும் வரை ஹெஸ் தண்டனை அனுபவிக்கவேண்டும்—

இப்படி 'இஸ்வெஸ்தியா' சில மாதங்களுக்கு முன்னரும் வலியுறுத்தியது.

### மர்ம மனிதன்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது நேசநாடுகளாக பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகள் செயற்பட்டன.

ஹெஸ் சிறை வைக்கப்பட்ட சமயம் இவை ஒரு உடன்பாட்டுக்கு வந்தன.

நாஸி நடவடிக்கைகள் பற்றி ஹெஸ்ஸைப்பேச அனுமதிப்பது இல்லை. இதுவே அந்த உடன்பாடு.

அதன்படி வெளியாருடன் தனது பழைய சம்பவங்கள் பற்றிப்பேச ஹெஸ் அனுமதிக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, இரண்டாம் உலக மகா யுத்தம் சம்பந்தமான புத்தகங்கள், சஞ்சிகைகளைக்கூட வாசிக்க அவர் அனுமதிக்கப்படவில்லை.

மாதம் ஒரு முறைதான் உறவினர்கள் வந்து சிறையில் அவரைப்பார்த்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

### யார் இந்த ஹெஸ்?

ஜேர்மன் வர்த்தகரின் மகன் ஹெஸ். முழுப்பெயர் வால்ட்டர் றிச்சர்ட் ருடோல்ப் ஹெஸ். 26. 4. 1894இல் எகிப்தில் பிறந்தார்.

சுவிட்சர்லாந்து, ஜேர்மனியில் கல்வி கற்றவர். முதலாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மன் இராணுவத்தில் சேர்ந்தார்.

அப்போது இராணுவத்தில் ஹிட்லர் ஒரு காப்ரலாக பணிபுரிந்து வந்தார்.

1920 இல் தேசிய சோஷலிச ஜேர்மன் தொழிலாளர் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார். இவரின் உறுப்பினர் இலக்கம் 16. ஹிட்லரின் இலக்கம் 7.

சதி முயற்சி ஒன்று தொடர்பாக 1924 இல் ஹிட்லருடன் சிறைக்கு அனுப்பப்பட்டார். அதே ஆண்டு ஹிட்லரின் செயலாளரானார். மெயின் காம்ப் (எனது போராட்டம்) புத்தகத்தை எழுத ஹிட்லருக்கு உதவினார்.

1933இல் நாஸி ஆட்சிக்கு வந்தபோது இவர் பிரதித் தலைவரானார்.

புகை பிடிக்க மாட்டார். மது பாவிக்காதவர். இயற்கை வைத்தியத்தில் நாட்டம் கொண்டவர்.

ஹிட்லரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

1941 இல் ஹிட்லரின் நெருங்கிய ஆலோசனைக் குழுவில் இவர் இடம் பெறவில்லை.

1941 இல் பிரிட்டனுக்குத் திடீர் என்று பயணமானது ஹிட்லர் சொல்லித்தான் சென்றாரா அல்லது அச்சமயம் ஹெஸ் மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்தாரா?

எல்லாம் கேள்விக் குறியாகவே உள்ளது.

### ஹெஸ் மறைவு

17. 8. 1987 காலை சிறையில் மூச்சு விடக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஹெஸ், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்.

மரணம் எப்படி வந்தது? தூக்குப் போட்டுக் கொண்டாரா இல்லையா என்பது பற்றி ஓரளவு விடைகண்டு விட்டார்கள்.

மின்வயர் ஒன்றினால் தூக்குப் போட முயற்சித்தார் என்று மரண விசாரணை கூறுகின்றது.

உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சடலத்தைக் கூட உறவினர்களிடம் கையளிக்கக் கூடாது என்ற கொள்கையை சோவியத் முதலில் வலியுறுத்தியது.

தகனம் செய்து விட்டு அவரின் சாம்பரைக் காற்றிலே பறக்கவிட வேண்டும் என்று சோவியத் முன்னர் கூறி வந்தது.

இறுதியில் உறவினர்களிடம் கையளிக்க சோவியத்தும் இணங்கியது.

சென்ற புதன்கிழமை நடைபெறவிருந்த இறுதிக் கிரியை திடீரென்று இரண்டு நாள் முந்தி நடத்தப்பட்டு விட்டது.

திடீர் மாற்றத்துக்குக் காரணம் தெரியவில்லை. புதைக்கப்பட்ட இடமும் ஒருவருக்கும் தெரியாது, நெருங்கிய உறவினர்களைத் தவிர.

### ஸ்பான்டு சிறை

ஸ்பான்டு சிறையில் ஹெஸ்ஸை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தனிமைக் கைதியாக வைத்துப் பராமரிக்க மாதம் 30 லட்சம் ரூபா (இலங்கைப் பணம்)வை நான்கு வல்லரசுகளும் செலவு செய்தன.

அறுநூறு அறை கொண்ட அச்சிறையைத் தரைமட்டமாக்க நான்கு வல்லரசுகளும் தீர்மானித்து விட்டன.

காரணம், நாஸி ஆதரவாளர்களின் வழிபாட்டுத்தலமாக அச்சிறை மாறிவிடும் என்ற அச்சம்.

ஹெஸ் உயிருடன் இருக்கும் வரை மேற்கு பேர்லினில் சோவியத் துருப்புக்கள் இருந்து வந்தன.

ஹெஸ் மறைவின் பின் சோவியத் துருப்புக்களின் நிலை என்ன என்பது அறிவிக்கப்படவில்லை.

ஹெஸ்ஸின் மறைவுடன் இரண்டாம் உலக மகாயுத்தம் பற்றிய பல உண்மைகளும் மறைந்து விட்டன. ★

---

## மலரே நீ உதிராதே!

மல்லிகையே! என் மனதை மயக்காதே
மங்கையவள் வருமுன் இதழ் உதிர்க்காதே

மாதத்தில் ஒரு நாள் நீ வருகின்றாய்-அவளோ
மாதம் முழுவதும் எனை ஏன் வாட்டுகின்றாள்?
தங்கமவள் எனை விட்டுப் பிரிந்ததும் ஏன்?
தனிமரமாய் நான் நின்று தவிப்பதும் ஏன்?

உன் இதழைக் கண்டவுடன் உணர்கின்றேன்
அவள் இதழ்கள் என் இதழைப் பிரிந்ததனை
என்னவளை என்முன்னே அழைத்து வந்தால்
உன் இதழை அவள் குழலில் சூட்டிடுவேன்.

மலரே நீ அவள் குழலில் மணம்பரப்ப
மலர்க் கொடியாய் அவளுடலில்
படர்ந்திடுவேன்.

— நல்லை நிபன் —

## அவலத்தின் முடிவென்ன?

பாடுபட்டு நட்டபயிர்
பாழாகிப் போய்விடவோ?
கூடுகட்டி இருந்த மரம்
குளிர் இழந்து கருகிடவோ?
நாடொன்று காணுமெங்கள்
நம்பிக்கை அழிந்திடவோ?

நேற்று வரை பட்ட துன்பம்;
நினைவில் நிலைத்து நிற்க,
ஆற்றொணாது பட்டதுயர்;
அவலத்தின் முடிவென்ன?

- க. ஶ்ரீகணேசன் -

## ஒருவயிற்று உணவு

மண்மேலே வாழ்கின்ற மனிதகுலம்
மகத்தான வாழ்வுபெற வக்குமில்லை
கண்மேலே கண்வைத்து உழைத்தபோதும்
கடன்தொல்லை அவனைவிட்டகலவில்லை
விண்மேலே உயர்கின்ற பறவையினம்
வீணான சிந்தனையால் உலையவில்லை
உண்மேலே உண்ணென்று உண்பதொன்றே
உருப்படியாய் அமைவதற்கா
இந்தத்தொல்லை.

கானகத்து வாழ்கின்ற விலங்கு என்ன
கடலூடே நீந்துகின்ற பிராணி என்ன
வானகத்து திரிகின்ற பறவை என்ன
வையமிசை ஊர்கின்ற உயிர்கள் என்ன
தேனகத்து கூட்டிலுறை தேனீ என்ன
தேயமெங்கும் உறைகின்ற மனிதன் என்ன
மானகத்து வயிற்றில்வரு குட்டியென்ன
மதிப்பதொரு வயிற்று உணவுதானே!

- சிங்கையாழியான் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிறுகதை




காலை ஆறு மணி. தூரத்தே கேட்கும் அந்த ஹெலிக்கொப்டரின் குடு... குடு... சத்தம் அன்றைய நேரத்தை உணர்த்தியது.

குடு...குடு... ஹெலிக் கொப்டரின் சத்தம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

வீட்டுப் படலையைத் திறந்து வெளியே வந்தார் சுந்தரலிங்கம் மாஸ்ரர்.

'குட் மோர்னிங்' மாஸ்ரர். சத்தம் வந்த திசைநோக்கித் திரும்பிய மாஸ்ரர், 'ஓ காந்தனோ? குட்மோர்னிங், குட்மோர்னிங்'

எங்கே மாஸ்ரர் பிரசாத் இன்னும் நித்திரையாலை எழும்பலையோ?

ஓமடா தம்பி ராத்திரி 'நிதர்சனம்' பார்த்தவன். அதுதான் இன்னும் எழும்பேல்ல.

சரி எழும்பட்டும் மாஸ்ரர். நான் ஒருக்கா சந்தியிலை போய் பேப்பர் வாங்கிக் கொண்டு வாறன்.

மீண்டும் குடு...குடு... ஹெலிக்கொப்டர் வந்து கொண்டிருந்தது.

வழமையாகத் தினமும் ஆறுமணிக்கு அந்த இராணுவ முகாமுக்கு வந்து போகும் ஹெலிக்கொப்டர் என்றபடியால் எதுவித அசம்பாவிதங்களும் இன்றி அதன் சேவை தொடர்கிறது.

சில கிராமங்களில் காலையில் கேட்கும் கோயில் மணி ஓசை, காலையில் கூவும் சேவலின் ஒலி. ஏன்? யாழ்தேவி யாழ்ப்பாணம் வரும் காலத்தில் கூட யாழ்தேவிச் சத்தம் ஊடாக அதிகாலை நேரத்தை மணிக்கூடு இல்லாமலே மக்கள் அறியக் கூடியதாய் இருந்தது.

ஆனால் சுந்தரலிங்கம் மாஸ்டரின் இருபாலைக் கிராமத்தைப் பொறுத்தவரை குடு......குடு...... ஹெலிக்கொப்டரின் சத்தம் அப்பகுதி மக்களுக்கு நேரத்தைக் கணிப்பிடப் பெரிதும் உதவியாக இருந்தது.

சுந்தரலிங்கம் மாஸ்ரர் இருபாலை மகாவித்தியாலயத்தில் நீண்ட நாட்களாக ஆசிரியராக இருந்து வருகிறார்.

மாஸ்ரர் சுந்தரலிங்கம் என்றாலே இருபாலை மகாவித்தியாலயம், ஏன் அந்தக் கிராமமே அடங்கிப் போய்விடும்.

அவ்வளவு கட்டுப்பாடானவர், கண்ணியமானவர், நேர்மையானவர்.

ஆனால் அன்றுதான் சுந்தரலிங்கம் மாஸ்ரரின் வாழ்க்கையில் முதல் அடி விழுந்தது.

மாஸ்ரரின் மனைவி பாக்கியம் மகனின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காகப் பொருள்கள் வாங்குவதற்கு யாழ்ப்பாணம் போன பொழுதுதான் அந்தப் பயங்கர ஷெல் குண்டுகள் பஸ் நிலையத்தில் விழுந்து வெடித்ததன் காரணமாக மாஸ்ரரின் மனைவியும் வேறு மூவரும் மரணமடைய நேர்ந்தது.

அடுத்தநாள் பத்திரிகைகள் மாஸ்ரரின் மனைவியின் படத்தையும் அன்றைய ஷெல் செய்தியையும் வெளியிட்டன.

பிறந்த நாள் கொண்டாட வேண்டிய வீட்டில் இறந்த நாள் அவலம்.

★ ★ ★

மாஸ்ரரும் மகன் பிரசாத்தை வளர்த்தெடுப்பதில் புழுவாய்த் துடித்துப் போனார்.

ஷெல் விழும் சத்தம் 10 வருடங்களுக்கு முன் இல்லை.

மகனும் வளர்ந்து பத்து வயதாகிவிட்டது. மாஸ்ரர் சுந்தரலிங்கமும் பென்ஷன் எடுத்துக் கொண்டு பிரசாத்தை நல்வழிப்படுத்துவதில் பெரிதும் பாடுபட்டார்.

அப்பா இன்றைக்கு எங்கட இந்திரா சனசமூகநிலையத்திலை கூட்டமாம்.

எங்கட பொறுப்பாளர் பேச வாறாராம். நான் போகவேணும் அப்பா வாங்கோவன் போவம்.

தாயைப் பறிகொடுத்த முதல் வயது தொடக்கம் அவனுக்குத் தாயாகவும் தந்தையாகவும் சகோதரனாகவும் வாழ்ந்து வருபவர் சுந்தரலிங்கம் மாஸ்ரர்.

அழுகை என்றால் என்ன என்று தெரியாத அளவுக்குச் செல்லமாக பிரசாந்தை மாஸ்ரர் வளர்த்து வந்தார்.

வாசிகசாலையில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. தூரத்தே வண் எயிற்வைவ்(185) மோட்டார் சைக்கிளின் சத்தம் இரைந்து கேட்டது.

மோட்டார் சைக்கிள் நிறுத்தப்படுகிறது. கட்டான உடலமைப்புக் கொண்ட அந்த இளைஞன் மேடையை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்.

அவனைத் தொடர்ந்து மேலும் பலர் இடுப்புகளில் ஏதோ தொங்கியதைச் சரிசெய்து கொண்டு பின்னே வந்து கொண்டிருந்தனர்.

சனக்கூட்டத்தில் அமைதி நிலவுகிறது. அந்த இளைஞன் பேசுகிறான்.

பேச்சைப் பிரசாந் உன்னிப்பாகக் கவனிப்பதைச் சுந்தரலிங்கம் மாஸ்ரர் உணராமலில்லை.

அந்த இளைஞனைத் தொடர்ந்து மேலும் பலர் அங்கு உரை நிகழ்த்தினர்.

'பிரசாந்' தோளில் உறங்கிவிட்டதையறிந்த சுந்தரலிங்கம் மாஸ்ரர் வீடு நோக்கிச் செல்கிறார்.

தினமும் குடு... குடு... ஹெலிக்கொப்ரரின் சேவை தொடர்கின்றன.

சுந்தரலிங்கம் மாஸ்ரர் வயது போனாலும்கூட போராட்டங்களையும் தியாகங்களையும் போற்றுபவர்.

இன்றுகூட எம்மத்தியில் போராட்டங்களை அறியாதவர்கள் பலர் உளர். அவர்கள் அனைவரும் சுயநலம் மிக்கவர்களே.

ஏன் எத்தனையோ இளைஞர்கள் கூடத் தமது சுயநலத்துக்காக எதிர்கால வாழ்வுக்காக வெளிநாடு என்றும் வெளிநாட்டுக்கப்பல் என்றும் ஓடி மறைகிறார்கள்.

ஆனாலும் சுந்தரலிங்கம் மாஸ்ரரின் மனைவி என்றைக்கு அந்த ஷெல்லுக்கு இரையானாளோ அன்றைக்கே அவருக்கு வைராக்கியம் எழுந்தது, ஞானம் பிறந்தது.

இன்று யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வழியில் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

தனக்குத் தனக்குத் தான் என்றால் எல்லாம் தெரியும் என்பார்கள்.

சுந்தரலிங்கம் மாஸ்ரரும் தனது மகனை ஒரு போராளியாக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

ஆனாலும் அவராகவே அதனை அவனிடம் கூறவில்லை.

இன்றைக்கு எந்த ஒரு மாஸ்ரரும் ஏன் பெற்றோர் கூட தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைப் பற்றியே சிந்திப்பார்கள். சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

சுந்தரலிங்கம் மாஸ்ரரைப் போல் தியாக உள்ளம் கொண்டவர் யார் இருக்கிறார்?

டாக்டர் என்ஜினியர் என்ற பதவிகளில் பிள்ளைகள் அமர வேண்டும் என்று கனவு காணும் உள்ளங்களிலும் பார்க்க சுந்தரலிங்கம் மாஸ்ரர் வித்தியாசமானவர்.

என்ன மாஸ்ரர் உங்காலை அடுத்த கிராமத்திலை கொஞ்சப் பொடியளைக் காணேல்லையாம் - என்றார் பொன்னம்பலத்தார்.

ஏன் எங்கைபோனவையாம்? ஒன்றும் தனக்கு விளங்காதவன் போல் மாஸ்ரர் கேட்டார்.

உவங்கள் தான் பொடியங்கள் ராத்திரி ஏதோ இரண்டு வான்களில வந்தவங்களாம்.

இரண்டு மூன்று விசில் சத்தமும் கேட்டதாம். அதோட நாய்களும் குரைக்கத் தொடங்கின. பின் வான்களும் போயிட்டுதாம்.

விடியத்தானே விசயம் தெரிஞ்சுது - என்றார் அவர்.

இல்லை உப்ப குமர்களை வீட்டில் வைத்திருப்பவர்களுக்குக் கவலையில்லைப் பாருங்கோ.

இந்த இளசுகளை வைச்சிருக்கிறதுதான் பெரிய பயங்கரமாய் இருக்கு — மாஸ்ரர் வேணுமண்டே இவ்வாறு சொன்னார்.

ஏதோ நீங்களும் இளசு ஒன்றை வைச்சிருக்கிறியள் மாஸ்ரர் கவனமாய்ப் பாருங்கோ நான் ஒருக்கா போட்டு வாறன் - என்றார் அவர்.

★ ★ ★

உவர் பொன்னம்பலத்தார் முன்னர் அரசியற் கட்சி ஒன்றுக்கு வால் பிடித்துத் திரிந்தவர். அவர் ஒரு சட்டத்தரணி அதனால் ஊரில் எல்லோரையும் அடக்கி ஆள வேண்டும் என்று நினைக்கிறவர்.

உப்ப பொடியள் தலைப் போட்ட பிறகு உவருடைய கொட்டம் அடங்கிப் போச்சு.

★ ★ ★

அப்பா... அப்பா... 'பிரசாந்' வந்துகொண்டிருந்தான்.

என்ன பிரசாந் அப்பா இண்டைக்கு யாழ்ப்பாணத்தில் பொம்மர் அடித்ததில் பதினேழு பேர் செத்துப்போட்டினமாம்.

ஏனப்பா இப்பிடி சனங்கள் இருக்கிற இடம் எல்லாம் குண்டு போடுறாங்கள்.

நாங்கள் இந்தக் கிராமத்தில்இருக்கிறபடியால் ஒன்றுமே தெரியாத மாதிரி இருக்கிறம். பிரசாந்தின் கேள்விகள் மாஸ்ரரை சிந்திக்கச் செய்தன.

பிரசாந் அவங்கள் பொதுமக்களைத் தேடி குண்டு போடுற[illegible] எங்கட சனங்கள் இருக்குதல்லே தாங்கள் நல்லா இருக்கவேணும் நல்லா வாழவேண்டும் என்று நினைக்கிற சிலர் பெடியள் இருக்கிற இடங்களை அவங்களுக்குக் காட்டிக் கொடுக்கினம்.

அதுதான் அவங்கள் வந்து பெடியளின்ரை ''காம்ப்'' என்று நினைத்து பொதுமக்களின் வீடுகளுக்கு மேல் குண்டுகளைப் போடுறாங்கள்.

எங்கட சனம் இன்னும் தான் திருந்தேல்லையப்பா -

- என்று பிரசாந்தன் உள்ளக்கிடக்கையை தகப்பனிடம் வெளிப்படுத்தினான்.

பிரசாந் - பெடியளும் பெரிய பிழை ஒன்றை விட்டுட்டாங்கள். 'எம் மக்களை இறுதி மூச்சு உள்ளவரை காப்போம்' என்று சொல்லிச்சொல்லி தங்களின்ரை உயிரைப் பறிகொடுத்தாங்கள்.

சனமும் பெடியள் பாப்பாங்கள் எண்டு தங்கடபிள்ளையளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சிருக்குதுகள்.

இந்த நிலையில் எங்கட சனம் போனால் போராட்டத்தை நினைச்சுப் பாக்கோணும் தம்பி.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவன் போராட வெளிக்கிட வேண்டும். ஒவ்வொரு போராளியும் தன்னுடைய பிள்ளை என்பதை ஒவ்வொரு தாயும் உணரவேண்டும்.

இது நடந்தால் தமிழன் விடுதலை பெறுவது வெகுதூரத்தில் இல்லைத் தம்பி. சுந்தரலிங்கம் மாஸ்டர் தன்னையும் மறந்து தான் யாருக்கு உபதேசம் செய்கிறேன் என்பதையும் மறந்து உளறித் தள்ளிவிட்டார்.

★ ★ ★

காலச்சக்கரம் சுழன்று பிரசாந் இன்று போராளியாகத் தலை நிமிர்ந்து நிற்கிறான்.

அன்று காலை நேரம் குடு குடு ஹெலிக்கொப்டர் மாசிப்பனி படர்ந்த தோட்ட வெளி மேலாக பறந்து வருகிறது.

மக்கள் உறக்கம் கலைந்து எழுகின்றனர்.

பிரசாந் அன்றிரா வீட்டில் வைத்திருந்த அந்த நவீனரக ஆயுதத்தை எடுத்துக் கொண்டு பனங்கூடலுக்குள் மறைந்து அந்த ஆயுதத்தை இயக்குகிறான். சத்தங்கள் சரமாரியாகின்றன். பிரசாந்தின் நவீனரக ஆயுதம் இயங்கிக் கொண்டே இருந்தது.

டமார்... பாரிய சத்தம் குடு...குடு...ஹெலிக்கொப்டர் நிலைதடுமாறி சுழல்கிறது.

அதற்குள் இருந்த சிப்பாய் பிரசாந்தைக்கண்டு அவனை நோக்கி தனது ஆயுதத்தை இயக்குகிறான்.

மார்பிலே துப்பாக்கி வேட்டுக்கள் துளைத்து குருதி பாய... குடு... குடு...வென ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கியது.

அந்தக் கிராமம் அல்லோல கல்லோலப்பட்டது. கிடைத்ததை எடுத்துச் சுருட்டிக்கொண்டு எமது மக்கள் ஓடுகின்றனர். இன்றும் ஓடுகின்றனர்.

சுந்தரலிங்கம் மாஸ்டர் மட்டும் தனது மகனைத்தேடி ஓடுகிறார்.

தாலாட்டி, சீராட்டி வளர்த்த அந்த மரம் இன்று உயிரற்று விழுந்து கிடக்கிறது.

சுந்தரலிங்கம் மாஸ்ரர் அழுகிறார்... மகனைப் பார்த்து அல்ல. நிலைகெட்டு ஓடும் அந்த மனிதரைப் பார்த்து அவர் அழுகிறார்.

அடுத்தநாட்காலை எங்கும் கப்டன் பிரசாந் நவீன ரக ஆயுதத்துடன் வீதி மதில்களில் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஆம் சுவரொட்டிகளைப் பார்த்து அந்தக் கிராம மக்கள் தலை குனிந்தனர்.

பிரசாந் இறுதி மூச்சு வரை போராடி விட்டான்.

சுந்தரலிங்கம் மாஸ்ரர் தலை நிமிர்ந்து நடக்கிறார்.

# நன்னீர்க் குளங்களின் பொது இயல்புகள் (iii)

கே. எஸ் குகதாசன்
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

**3) அங்கிகளின் இசைவாக்கங்கள்:**

அங்கிகளின் இசைவாக்கங்கள் சூழலுடன் தொடர்பு பட்டதாகவே அமையும்.

தாவரங்கள் பொதுவாகப் பின்வரும் இசைவாக்கங்களைக் கொண்டதாக அமையும்;

1) தாவரங்கள் நன்ருக விருத்தியடைந்த காற்றுக்கலவிழையங்களைக் கொண்டிருக்கும். இவை காற்றைச் சேமிக்க உதவுவதுடன், தாவரங்கள் மிதப்பதற்கும் உதவும்.

2) தகாத காலங்களில் நீர்நிலை வற்றக் கூடும், அதனால் சில தாவர இனங்கள் தகாத காலங்களில் உறங்கு நிலையிலிருந்து ஏற்ற காலங்களில் புதிய வளர்ச்சியடைந்து இனப்பெருக்கமும் செய்வதற்கு இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும். உதாரணம்: தாமரை, அல்லி, பனித்துகழ்ப் பூண்டு, புளியாரை முதலியன. சில தாவர இனங்கள் கனிகள், விதைகள் வாயிலாகப் பல்லாண்டு வாழும்.

3) நீர் ஆதாரத்தைக் கொடுப்பதனால் தாங்கும் இழையங்கள் ஒடுக்கப்பட்டிருக்கும். நீர் வற்றும்போது, நீருக்குள்ளேயே இருப்பதற்கும் இது உதவியாயிருக்கும்.

நீருள் அமிழ்ந்திய பகுதிகளில் காய்வு ஏற்படுவதற்கு சாத்தியக்கூறு இல்லை. அதனால் மேற்றேல் கியூற்றினேற்றம் பெற்றிருப்பதில்லை. புறத்தோல் இருப்பதில்லை; மேற்படி காரணங்களினால் வாய்களும் இருப்பதில்லை.

5) நீருள் அமிழ்ந்திய பகுதிகளின் வாயிலாக அகத்துறிஞ்சல் (பரவலாக) நிகழ முடியும். அதனால் நீரைக் கடத்த வேண்டிய அவசியம் குறைவு. அதனால் காழ் ஒடுக்கப்பட்டிருக்கும். உரியம் சாதாரண விருத்தியடைந்ததாயிருக்கும்.

6) இலைகளில் பல தரப்பட்ட இசைவாக்கங்கள் காணப்படும். அமிழ்ந்திய இலைகள், நீரோட்டத்திற்கும் விலங்குகளின் நடமாட்டத்திற்கும் விட்டுக் கொடுக்கும் வகையிலும், ஒளி ஊடுருவதற்குத் தடையாக இல்லாமல் இருப்பதற்கு உதவும் வகையிலும், மிகச் சிறிய இலைப்பரப்புக்களைக் கொண்டவையாயிருக்கும். உதாரணம்: ஐதறில்லா, கபொம்பா, அல்லது நாடாப்போன்றவையாயிருக்கும். உதாரணம்: வேலம்பாசி அல்லது துண்டுபட்டவையாயிருக்கும். உதாரணம்: மீறியோபில்லம், லிம்னேபில்லா, திருப்பா, சவ்வுப்பையுருப்பூண்டு, நீரின் மேற்பரப்பில் மிதக்கும் இலைகளின் கீழ்மேற்பரப்பு செஞ்சிவப்பு நிறமுடையதாயிருக்கும். வாய்கள் கீழ்ப்பக்க மேற்பரப்பில் இருப்பதில்லை. மேற்பக்க மேற்பரப்பில் வைக்கப்பட்டிருக்கும், நீர் ஒட்டாமலிருப்பதற்காக இலைகளின் மேற்பக்க மேற்பரப்பு மெழுகுப் போர்வையைக் கொண்டிருக்கும். வளிக்குரிய இலைகள் இடைநிலைத் தாவரங்களின் இலைகளின் அமைப்பிற்கு ஒப்பானதாகவிருக்கும்.

(7) நீர்வாழ் விலங்குகள் உணவாகக் கொள்ளாதிருப்பதற்கு உதவும் வகையில் நீர்த்தாவரங்கள் பொதுவாக சிறப்பரும்பர்களை —ஊசிப் பளிங்குகள், கோளப் பளிங்குகளைக் கொண்டிருக்கும். கலச்சுவர்களுடன் தொடர்பாக இவை காணப்படும்.

(8) நீர்த்தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை நீரின் உதவியால் நிகழ்வது மிகக்குறைவு; காற்று, விலங்குகளின் உதவியினாலேயே கூடுதலாக நிகழும்.

(9) கனி, விதை பரவல் பெரும்பாலும் நீரின் உதவியினாலேயேநிகழும்.

(10) அகத்துறிஞ்சலுக்கு வேர்கள் அவசியமில்லை. அதனால் வேர்கள் இருப்பின் காற்றுச் சேமிப்பிற்கும், மிதப்பதற்கும் சமநிலைப்படுத்துவதற்கும் அல்லது நிலைநாட்டலுக்கும் உதவும். வேர்மூடிகள் துலக்கமானவை, இளக்கமானவை, வேர்க்கோசங்கள் எனப்படும் வேர்மயிர்கள் இருப்பதில்லை. சில இனங்களில் வேர்கள் மிதப்பதற்கு உதவுவதுடன், சுவாச வேர்களாக, வளியிலிருந்து ஒட்சிசனைப் பெறவும் உதவும்.

உதாரணம்:-

நன்னீர்க் குளங்களுக்குரிய விலங்குகள் பொதுவாகப் பின்வரும் இசைவாக்கங்களைக்கொண்டிருக்கும்:

பெரும்பாலும் வளிக்குரிய சுவாசத்தையுடையவை, நீருக்குரிய சுவாசத்தை உடையவை வளியிலிருந்து ஒட்சிசனைப் பெறுவதற்கும் இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும். உதாரணமாக விரால், பனையேறி, கௌிறு போன்ற மீனினம் நீருக்குரிய சுவாசத்திற்கு பூக்களையும்' வளிக்குரிய சுவாசத்திற்கு மேலதிக சுவாச உறுப்புக்களையும் (Accessory Respiratory Organs) கொண்டிருக்கும். ஆயினும் கீழ் நிலைக்குரிய அங்கிகள் ஏதாவதொரு சுவாச முறையையே கொண்டிருக்கும்.

2) நனி நீந்திகள் பெரும்பாலும் ஓடம் போன்ற உடல் வடிவத்தைக் கொண்டிருக்கும்.

3) நனி நீந்திகள் இடப்பெயர்ச்சிக்கு உதவும் வகையில் துடுப்புப் போன்ற அமைப்புக்களைக் கொண்டிருக்கும்.

4) நீர் ஒட்டாமலிருப்பதற்கு சளியப்போர்வை அல்லது மெழுகுப் போர்வை, அல்லது அடர்த்தியான சிலிர் மயிர்ப் போர்வை போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

5) உராய்விலிருந்து பாதுகாப்பளிப்பதற்கும் மேற்படி போர்வைகள் உதவும்.

6) உணர்ச்சி உறுப்புக்கள் நீருக்குரிய சூழலுக்கு ஏற்றவையாகவிருக்கும்.

7) பெரும்பாலானவை நீரிலேயே வாழ்க்கை வட்டத்தை முடித்துக் கொள்ளும். சில இனங்கள் நிறைவுடலி வாழ்க்கையை நிலத்தில் மேற்கொள்ளும். உதாரணம்: தும்பி, நுளம்பு, தேரை போன்றவை. சில இனங்கள் இனவிருத்திக்கு நிலத்தை நாடும். உதாரணம்: முதலை, ஆமை, நீர்ப்பாம்பு, நீர்ப்பல்லி போன்றவை.

8) தகாத காலங்களை, சேற்றில் புதைந்து, உறங்கிய நிலையிலிருந்து கழிக்கும் இசைவாக்கங்களைச் சில விலங்கினங்கள் கொண்டிருக்கும். உதாரணம்: ஆமை, தவளை, பனையேறி, விரால், கௌிறு போன்றவை.


9) மெய்யான நீர் வாழ்க்கைக்குரியவையாகவிருப்பினும், சில இனங்கள், தரைமார்க்கமாக வேறு குளங்களுக்குச் செல்லக்கூடிய இசைவாக்கங்களைக் கொண்டிருக்கின்றன. (தரைமார்க்கமாக ஊர்ந்து செல்லக்கூடியவை) உதாரணம்: பனையேறி, கௌிறு, விரால்.

10) விலங்குகளின் மேற்பக்க மேற்பரப்பு கருமையான நிறங்களையுடையவையாகவும், வயிற்றுப்புற மேற்பரப்பு வெளிறிய நிறங்களை உடையவையாகவுமிருக்கும்.

11) நன்னீருக்குரிய சூழலில் வாழ்வதன் காரணத்தால் பலதரப்பட்ட பிரசாரணச் சீராக்கல் பொறிமுறைகளை விலங்குகள் கொண்டிருக்கும்.

12) பெரும்பாலும் கழிக்கப்படுகின்ற நைதரசனுக்குரிய கழிவுப் பொருள் யூறியாவாக இல்லாமல் அமோனியாவாகவிருக்கும்.

(வளரும்)



சென்ற இதழில் பட விளக்கம் தரப்பட்டது

# பாடம் பயில்வோம்

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

# அபரக் கிரியை பற்றிய விளக்கம்

பண்டிதர் மு கந்தையா

1. இறந்தவருக்குக் கிரியை செய்வதன் அர்த்தம் என்ன?

இறந்ததன் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

2. இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு? எப்படி வாழ்வு?

அவருக்குச்சுவர்க்கத்திலும் நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும்அவர் பூமியிற் பிறந்து முன் வாழ்ந்ததுபோலவாழும் வாழ்வுமுண்டு. சுவர்க்க வாழ்வு இன்பாநுபவம். நரக வாழ்வு துன்பாநுபவம். திரும்ப வரும் பூமி வாழ்வு இன்ப துன்பக் கலப்பான அநுபவம்.

3. இறந்தபின்பு அவர் இங்கில்லை. அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?

இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள்வரை அதாவது அந்தியேட்டிவரை [illegible] இருக்கிறார். அதாவது தான் [illegible]லின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழுங் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவ சாதியார் ஏற்று அவர்கள் எங்கெங்கு இருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

4. இக்கிரியைகளை அபரக் கிரியைகள் என்பதேன்?

அவை இறந்தபின் செய்யப்படும் கிரியைகள் என்பதனால்தான். அபரம் என்றால் பின்.

5. அபரக் கிரியைகள் எவையெவை?

பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத் திதி, திவசம் என்பனவாம்.

6. அபரக் கிரியைகள் உடலுக்காகவோ உயிருக்காகவோ?

உயிருக்காகவேதான். ஆனால் அந்தியேட்டி வரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.

7. இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம்?

இக்கிரியைகளால் உயிருக்கு இரு விதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன்மேல் பெறவேண்டிய அநுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

8. சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம்?

அபரக் கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத் தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும்போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

9. நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்றுதானே எல்லாரையும் குறிக்கிறார்கள். அப்படியானால் கிரியைக்கு என்ன அவசியம்?

அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடைய வேண்டும் என்ற நல்விருப்பத்தினால். இப்படி நல் விருப்பத்தினால் உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலை நிலத் தெய்வம் கொற்றவை

தொல்காப்பியர் ஐவகை நிலங்களுள் பாலையையும் அடக்கியுள்ளார். பாலைக்குரிய பொழுதையும் பருவகாலங்களையும் குறிப்பிடும் தொல்காப்பியர் பாலைக்கு தனியே நிலங் கூறவில்லை. இளங்கோவடிகள் குறிஞ்சியும் முல்லையுந் திரிந்து பாலையாகி உள்ளது என்று கூறுகின்றார். பாலைக்குத் தொல்காப்பியர் தனியே நிலம் வகுக்காததற்கு இதுஒரு காரணமாக இருக்கலாம். இதேபோன்று பாலைக்குத் தனியே தெய்வமும் அவர் கூறவில்லை.

சங்ககாலத்தில் குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் கொற்றவையை வழிபட்டு வந்துள்ளார்கள். எனவே குறிஞ்சியும் முல்லையுந் திரிந்த பாலைக்குத் தெய்வமாக கொற்றவையைக் கொள்வதில் எதுவித மறுப்பும் இருக்க முடியாது. கொற்றவையைப் பாலைநிலத்தெய்வமாகப் புகழ்ந்து பாடுகின்றது சிலப்பதிகாரம்.

தொல்காப்பியர் தவிர்ந்த ஏனைய இலக்கண ஆசிரியர்கள் பாலைநிலத் தெய்வமாகப் பகவதியையும் ஆதித்தனையும் ஏற்றுக்கொண்டுள்ளதாக இறையனார் அகப்பொருள் மூதற் சூத்திர உரை கூறுகின்றது.

பாலைநிலத்தைக் குறிக்குங் காடு என்னுஞ் சொல் சுடுகாட்டைக் குறிப்பதாகப் பொருள் படுத்தலாம். கலிங்கத்துப்பரணியிலுள்ள காடு பாடியது, கூளி பாடியது என்னும் இரண்டு அதிகாரங்களும் பாலை நிலத்திலுள்ள கொற்றவையின் கோயிலைப் பற்றிக் கூறுகின்றன. சுடுகாட்டின் மத்தியில் கொற்றவைக்குக் கோயில் இருந்ததாகப் புறநானூறு குறிப்பிடுகின்றது. அக்கோயிலின் தெய்வத்தன்மையை எடுத்துக்காட்ட அற்புதமான நிகழ்ச்சிகள் அங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. கொற்றவைக்குப் பணிசெய்வதில் விலங்குகள்கூட ஈடுபடுகின்றன. கோவில் அமைந்துள்ள இடத்துக்கு வெளிச்சம் உண்டாக்க வேடுவர்களுக்கு விறகுக் கட்டைகளை யானைகள் எடுத்துச் சென்று கொடுப்பதாக ஒரு செய்தி காணப்படுகிறது. அங்கே எரியுந் தீக்குப் பின்னால் மான் கூட்டங்கள் படுத்துறங்குகின்றன. கோயிலின் சூழலைக் கூட்டித் துப்புரவாக்குவதற்காக மந்திகள் மான்கூட்டங்களை எழுப்புகின்றன.

சங்க இலக்கியங்களில் கொற்றி, கொற்றவை, கூளி என்னும் பல்வேறு பெயர்களால் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். கொற்றி(வெற்றித் தெய்வம்)என்னும் சொல் 'கொல்' என்னும் அடிச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். அச்சொல்லோடு 'ற்றி' என்னும் பெண்பால் ஒருமை விகுதியுஞ் சேர்ந்து 'கொற்றி' ஆகியுள்ளது. கொற்றவை(தாய்-வெற்றித் தெய்வம்) என்னுஞ் சொல் 'கொல்' என்னும் அதே அடியோடு தவ்வை அல்லது அவ்வை என்பதுஞ் சேர்ந்து தோன்றியதாகும். தவ்வை, அவ்வை என்னும் இரண்டு சொற்களும் தாய் என்று பொருள்படும். கொற்றம், அவ்வை என்னும் இரண்டு சொற்களும் சேர்ந்து 'கொற்றவை' ஆகியுள்ளது என்று இன்னொரு வகையாகவும் கூறலாம். கூளி என்னும் சொல் திரிசூலத்தை உடைய கொற்றவையை உணர்த்துகின்றது.

பாலைநிலத்தின் மிகப் புராதனமானவழிபாட்டு வகையாகிய வீரக்கல் (நடுகல்) வழிபாடு படிப்படியாக வளர்ச்சியுற்று வெற்றித் தெய்வ வழிபாடாக - கொற்றவை வழிபாடாக உருவம் பெற்றிருக்க வேண்டுமென்பது சில பேரறிஞர்களின் கருத்தாகும். பாலைநிலத்துக்கு உரியவர்களாகிய மறவர்கள் அல்லது ஆறலை கள்வர்கள், அவர்களின் வீரச் செயல்களின் காரணமாக காலா காலத்தில் தமிழ் மன்னர்களின் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் படையில் சேர்க்கப்பட்டதன் காரணமாக பாலைநிலத் தெய்வமாகிய கொற்றவையும் படைவீரர்களின் தெய்வமாயினள். படையெடுத்துச் செல்லுங்கால் படைவீரர்கள் தங்களுக்கு வெற்றியளிக்க வேண்டுமென்று கொற்றவையை வழிபட்டுச் செல்வது வழக்கம். மன்னனைப் பிரிந்திருந்த அரசியின் துயரத்தை ஆற்றுமுகமாக மன்னன் வெற்றிபெற அருளுமாறு கொற்றவைக்கு விண்ணப்பஞ் செய்த பாடலே 'நெடுநல்வாடை' என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். வழிப்பறி கொள்ளையை வேண்டி நின்றோருக்கும், பகைவரின் ஆனிரைகளைக் கவர்ந்துவர உறுதி பூண்டோருக்கும் வெற்றியளிப்பவளாகக் கொற்றவை விளங்கினாள். பகைவர்களின் ஆனிரைகளைக் கவர்ந்து வெற்றியீட்டியதற்கு நன்றிக்கடனாகப் படைவீரர்கள் கொற்றவைக்கு ஒரு பசுவைப் பலியிட்டு வணக்கஞ் செலுத்தினர்: பலிப்பொருளைப் படைவீரர்கள் தம் காயப்பட்ட மார்பிலிருந்து வழியும் இரத்தத்தால் தெளித்து அர்ப்பணித்தாலொழிய கொற்றவை அப்பலிப்பொருளை ஏற்க மறுத்தாள். மனித உயிரையும் இரத்தத்தையும் கொற்றவைக்குப் பலியிட்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

கொற்றவை வேப்பமரத்தடியில் உறைபவள். வேம்பின் கருக்கு வடிவில் அமைந்த இலைகள் பேய்களை விரட்டும் சக்தி வாய்ந்தனவாகச் சொல்லப்படுகிறது. பேய்கள் கொற்றவையின் சணங்களாகவே கூறப்படுகின்றன. எல்லையற்ற அறிவுடையவளாகிய கொற்றவைக்கு பெண் பேய் ஒன்று கூறியநொடி பற்றி இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. பேய்கள் கொற்றவையைப் புகழ்ந்து போற்றித் துணங்கைக் கூத்தாடுகின்றன. பாலை நிலமக்கள் தெய்வம் பிடித்து ஆடுங்கூத்தை நடத்துகிறார்கள். கொற்றவையாக மாறுவேடம் பூண்டு நிற்கும் கன்னிப் பெண்ணை வழிபடுகின்றனர். கொற்றவை திரிசூலத்தைச் சுழற்றுகின்றாள். போர் ஆயுதங்களில் அவள் குடியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

போரில் கொற்றவையின் வெற்றியும் அவளது அழகும் சங்க இலக்கியத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. முருகனைப் பெற்றெடுத்ததற்காகக் கொற்றவையின் கருப்பை புகழப்படுகின்றது. பாதி பெண்ணும் பாதி ஆணுமாகவுள்ள சிவனின் அர்த்த நாரீஸ்வரர் உருவம் பற்றிய கருத்து சங்க காலத்தில் இருந்திருக்கிறது. இமையா நாட்டமுடைய நெற்றிக்கண்கொண்ட தனது கணவனாகிய சிவனின் இடப்பாகத்தைத் தனக்கு இடமாகக் கொண்டுள்ளாள் கொற்றவை என்று கூறப்பட்டுள்ளது. தை நீராடலில் ஒரு பெண் இன்னொரு பெண்ணின் நெற்றியிலே சிவப்புத் திலகமிடுகிறாள் திலகந் தாங்கிய பெண் கொற்றவைபோல் காட்சி அளிக்கவேண்டுமென்று கருதியே அவள் அப்படிச்செய்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பொழுது கொற்றவையின் நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் புலவர். கொற்றவையாகிய அம்பாளை வேண்டி ஆடும் புனித நீராடலைக் குறிப்பதாக 'அம்பா ஆடல்' என்னும் சொற்றொடருக்குப் பொருள் கொள்ளலாம். பாவை நோன்பும், புனித நீராடலும் முற்றாகக் கொற்றவைக்கே உரியதாக பிற்கால வழக்கத்தில் காணப்படுகின்றது.

நாடு செழிக்க மழை நல்கவேண்டுமென்றும், தங்களை விட்டுப்பிரியாதிருக்கும் நல்ல கணவன்மாரைத் தந்தருளவேண்டும் என்றும் கொற்றவையின் அருள் வேண்டிக் கன்னிப்பெண்கள் திற்பதைக் 'அம்பா ஆடல்' எடுத்துக்கூறுகின்றது. போருக்குச் சென்ற கணவன்மார்கள் திரும்பி வந்து சேரவேண்டுமென்று திருமணமாகிய பெண்கள் முன்கையில் சிவப்பு நூலணிந்து பலியீட்டுக் கொற்றவையின் அருளை வேண்டி நிற்கின்றனர். கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். திருமுருகாற்றுப் படையில் முருகனை 'மலைமகள் மகன்' என்றும் 'கொற்றவை சிறுவ' என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறப்புக் கட்டுரை

கலாநிதி ஸ்ரீகாந்த சத்தியமூர்த்தி ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தம் பலகமம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர்.

தற்போது தமிழ்நாடு, கோயம்புத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ண கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகின்றார்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் உற்சவ காலத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

- பேராசிரியர் கலாநிதி. சத்தியமூர்த்தி -

# கலைஞர்களை வாழவைப்பின் இசைத்துறை வளர்ச்சியடையும்




''இலங்கை மக்கள் சங்கீதத்தை ரசிப்பதுடன் நின்றுவிடுகிறார்கள். சங்கீதத்தை ரசிப்பதுடன் சங்கீதகாரரை ஆதரித்து அவர்கள் வாழ ஏற்றவருமானத்தையும் வழங்கவேண்டும்.

இந்தியாவில் சங்கீதகாரருக்கு நல்ல மதிப்புண்டு. அவர்கள் வாழ்வதற்கேற்ற வருமானமுமுண்டு. கலைஞர்களை மக்கள் வாழ்விக்கிறார்கள்.

இசையாளரை ஆதரிக்கும் காலத்தில்தான் இலங்கையில் சங்கீதம் பரிபூரண நிலையை அடையும்.

''இங்ஙனம் சண்முகம் இராமநாதன் சங்கீத அக்கடமியில் பல்லாண்டுகள் இசைப்பயிற்சியாளராகவும் கடமையாற்றியும், பின் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு

## ஐயாக்கண்ணு தேசிகர் கருத்து

பெற்றுள்ள 68வயது நிரம்பிய வேதாரண்யத்தைச் சேர்ந்த ஞானசம்பந்தக்குருக்கள்- ஐயாக்கண்ணு தேசிகர் இலங்கையில் இசையாளர் பற்றிதமது கருத்தை எமக்களித்த செவ்வியின் போது குறிப்பிட்டார்.

மானிப்பாயில் உள்ள அவரது வீட்டில் இசைப் பயிற்சி மாணவிகளுக்கு பாடம் சொல்லிக்கொண்டிருக்கும் ஏ. ஜே. ஐயாக்கண்ணு தேசிகரை சந்தித்து இசைபற்றிக்கேட்டுத் தெரிந்துகொண்ட விளக்கங்களை இங்கு தருகிறேன்.

கேள்வி: இசைக்கல்லூரியில் நீங்கள் பணியாற்றத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை சங்கீதத்துறை வளர்ச்சி கண்டுள்ளதா?

பதில்: கடந்த 25-30 ஆண்டுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதெனக் கூறலாம். இருந்தும் இந்தியாவில் உள்ளதுபோன்ற வசதிகள் இங்கும் ஏற்படுத்தப்பட்டால் இசைத்துறை மேலும் வளர்ச்சியடையும்.

கேள்வி : இசைத்துறை வளர்ச்சிக்கு இந்தியாவில் காணும் வசதிகள் பற்றி அறியலாமா?

பதில்: ஆயிரம் ஆண்டுகளாக அங்கு பாரம்பரிய முறைப்படி சங்கீதம் வளர்க்கப்பட்டு வருகிறது. சங்கீதத்தில் ஒருவர் பிரபல்ய நிலையை அடைந்துவிட்டால் அதனை வைத்து அவர் தமது குடும்ப வாழ்க்கைக்கேற்ற வருவாயைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. சிறுவயதில் இருந்து இசை ஆற்றல் இயற்கைவளம் பொருந்திய சிறுவர்களுக்கு காலை மாலை தினமும் சாதகம் செய்யவும் சாரீர பயிற்சி பெறவும் செய்வர். மாலை வேளையில் உருப்படிகளை சாதகம் பண்ணுவர். இதனை தினமும் கட்டாயம் செய்யவேண்டியிருப்பதால் ஏனைய கல்வித்துறை பயிற்சிபெற வாய்ப்பில்லாதுபோகின்றது.

பாண்டித்தியம் பெற்றபின் கச்சேரிகளுக்கு மதிப்பும், சன்மானமும் கொடுப்பார்கள். ஆனால் இங்கு அப்படியான இசைப்பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. இசையாளரை ஆதரிப்பதும் இல்லை.

இலங்கையில் சங்கீதம் பயின்றவர்கள் கச்சேரி பண்ணி உழைக்க முடியாது. வேண்டுமானால்ரியூசன் பண்ணி பணம் தேடலாம். சங்கீதகாரர்களுக்கு இந்தியாவில் ராசோபசார உபகாரம் கொடுக்கிறார்கள். இங்கு அப்படி இல்லை. சாதாரண பக்கவாத்தியக்காரருக்கே 3000 ரூபா வரை கொடுப்பர். இங்கு பக்கவாத்தியகாரருக்குப் பணத்தைக் கொடுத்து சங்கீதகாரரை திருப்திப் படுத்தும் நிலையேஉண்டு.

கேள்வி: மேடைக் கச்சேரி அனுபவங்களில் உங்கள் மனதில் நிலைத்துள்ள நிகழ்ச்சிகள் ஏதாவது உண்டா;

பதில்: நிறையஉண்டு. உதாரணத்துக்கு, 1940 ஆம் ஆண்டளவில் இணுவில் கந்தசுவாமி கோவிலில் திருவிழா விடிய விடிய பல கச்சேரி ஒழுங்குகள், பிரபல்யம் வாய்ந்த தவில் வித்துவான் சின்னத்தம்பி இதனை ஒழுங்குசெய்தார். ஒரு கச்சேரிக்கு 1½மணி நேரம் ஒதுக்கப்பட்டது. எனது கச்சேரி இரவு 7மணிக்கு ஆரம்பம். கச்சேரியில் மக்களுக்கு



இருந்த பிடிப்பு, ஆர்வம் என எண்ணுகிறேன். இரவு 2½ மணிவரை கச்சேரி பண்ணும் வரை சனம் ஆடாது அசையாது ரசித்துள்ளனர் என்றால் பாருங்களேன். என் கச்சேரியால் 4 கச்சேரிகள் அன்று ரத்து செய்யப்பட்டன. இதை மறக்கலாமா?

இன்னொரு சம்பவம் - மருதனாமடம் திறந்த வெளியரங்கில் இசைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

- செவ்வி. வி. பி. சர்மா -

# நங்கையர் மலர்

★ மழைக்காலத்தில் தீப்பெட்டிக்குள் நான்கைந்து அரிசிமணிகளைப் போட்டு வைத்தால் திக்குச்சியை உரசியவுடன் பற்றிக்கொள்ளும்.

★ இரசத்திற்குக் கறிவேப்பிலை போடவில்லையானால் மணமாக இருக்காது. கறிவேப்பிலை அவசரத்திற்குக் கிடைக்கவில்லையானால் இரசத்தைத் தாளிக்கும்போது வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கி கடுகு வெடித்ததும் சேர்த்து பொன் முறுவலானவுடன் இரசத்தைச் சேர்த்து விடவும். மணமாகவும் ருசியாகவும் இருக்கும்.

★ உருளைக் கிழங்கை மெல்லிய வட்டத்துண்டுகளாகச் சீவி உப்புக் கலந்த நீரில் சிறிதுநேரம் ஊறவைத்து, பிறகு அதை வெயிலில் காய வைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்த பிறகு எடுத்து தகர ரின்களில் போட்டு மூடி வைக்கலாம். தேவைப்படும் போது எண்ணெயில் பொரித்துச் சாப்பிடலாம்.

★ பாகற்காய் சீக்கிரம் பழுக்கும், பாகற்காய்களை இரண்டிரண்டாக நறுக்கி வைத்துவிட்டால் பழுக்காமலிருக்கும்.

★ தேங்காய் மூடிகளைக் குளிர்ந்த நீரில் அமிழ்த்தி வைத்தால் மூன்று நாட்கள் வரை அழுகிப்போகாமலும், காய்ந்துபோகாமலும் இருக்கும்.

★ சமையலறையில் இருக்கும்போது திடீரென்று சூடான எண்ணெய், ஆவி இவைகளினால் புண் ஏற்பட்டால் வெந்தயத்தைத் தண்ணீர் விட்டு அரைத்துப் புண்மேல் தடவினால் எரிச்சல் உடனே அடங்கி ஆறிவிடும்.

★ கீரைகளை வேக வைக்கும்போது தண்ணீரில் கொஞ்சம் உப்பைக் கரைத்த பிறகு கீரையை வேக வையுங்கள் கீரைகளின் நிறம் மாறாது. சுவையும் அதிகமாக இருக்கும்.

★ பிரஷர் குக்கரில் சமைக்கும்போது முதலில் தண்ணீருடன் சிறிது எலுமிச்சம் சாற்றையோ அல்லது புளிக்கரைசலையோ சேர்த்து விட்டால் குக்கருக்குள் கறை படியாது.

★ அலுமீனியம், பீங்கான், பித்தளை ஆகிய பாத்திரங்களில் சிறிய துவாரங்கள் விழுந்திருந்தால் சிறிது துணியை எடுத்துச் சாம்பலாக்கி, சுண்ணாம்பைச் சேர்த்துக் குழைத்துதுவாரம் உள்ள இடங்களில் பூசி விட வேண்டும். நன்றாகக் காய்ந்தவுடன் அடுப்பில் வைத்து உபயோகிக்கலாம்.

★ அரைவாளித் தண்ணீரில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அந்தத் தண்ணீரில் வாடிய காய்கறிகளைக் கொஞ்ச நேரத்தில் போட்டுப் பிறகு எடுத்துச் சமையலுக்குப் பயன்படுத்துங்கள். புதியன போல் இருக்கும்.

★ வெள்ளிப் பாத்திரங்களை நன்றாகப் பளபளப்பாக வைத்துக் கொள்ள ஒரு வழியிருக்கிறது. கடுகை அரைத்துத் தேய்த்து வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவுங்கள். பளபளப்பாகவும் இருக்கும். வெள்ளிப் பாத்திரத்திலுள்ள கறையும் மறைந்து போகும்.

★ பாகற்காய் கசகப்பாக இருக்கும். கசப்பை நீக்கக்காய்களை அரிந்து அரிசி களைந்த நீரில் சிறிது நேரம் ஊறவைத்துச் சமைத்தால் கசப்பு இருக்காது.

★ மீன்களில் பொட்டாசியம், சோடியம், கல்சியம், மக்னீஷியம் பொஸ்பரஸ், புளோரின் போன்ற பல இரத்த விருத்திக்குத் தேவையான சத்துகள் இருக்கின்றன. புரோட்டீன், உலோகச் சத்துக்களும் மலிந்து கிடக்கின்றன. எனவே குடும்பத்தலைவிகள் மீன்களை வாங்கிச் சமைக்க வேண்டும்.

★ தேங்காயை உடைக்கும் பொழுது சில சமயம் மூடி சிறியதாகவும், பெரியதாகவும், கோணல் மாணலாகவும் உடைந்து விடும். இதனைத் தவிர்க்க நினைப்பவர்கள் தேங்காயைச் சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைத்து நடுவில் தட்டினால் சமமாக உடையும்.

★ நெய் சிறிதளவு தான் இருக்கிறது. வீட்டிற்கு விருந்தாளிகள் திடீரென வந்து விட்டார்கள். என்ன செய்வது. தேங்காயை உடைத்து அதன் நீரை எடுத்துச் சுட வைக்கவும். இதனை உருக்கிய நெய்யுடன் கலந்து உபயோகிக்கவும். ★

தொகுப்பு:-
செல்வி.
எஸ். கேதீஸ்வரி




எலுமிச்சம் பழங்களை பாலிதீன் பைகளில் போட்டு மடித்துச் சுத்தமான மணலில் பதித்து வைத்தால் ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும். தினமும் மணல் மீது சற்றுத் தண்ணீர் தெளித்துக் கொண்டு வர வேண்டும். ஒரு மாதம் கழித்து எடுத்தாலும், பழம் அன்று பறித்த புதிய பழங்களைப் போல் இருக்கும்.

சுத்தமான தண்ணீரே உலகின் முதன்மையான மருந்து.

புகை அதிகம் பிடிப்ப [illegible] யேற்றத்திற்குத் தடையேற்படுகிறது. ★

# விலக்குத் தீர்த்த படலம்

## நடைச் சித்திரம் 4

முருகபுரம் கிராமத்தில் நடக்கின்ற சண்டை சோலி எல்லாவற்றையும் பட்டாளம் பாட்டா தீர்த்து வைப்பார். அவர் தலையிட்டால் எல்லாம் நல்ல முடிவிற்கு வரும்; ஆனால் கோளாறு கோவிந்தரின் காணித் தகராறுகளை மட்டும் பாட்டாவால் தீர்க்க முடியவில்லை.

'கோவிந்தன் இப்படித்தான்... அவனும் அவன் கண்கெட்டபோக்கும்...' எனப் பாட்டா கவலைப்படுவார். 'நீதிமன்றத்தில் அவனுக்கு வெற்றி கிடைக்கலாம்; ஆனால், ஆண்டவன் தீர்ப்பு என்று ஒன்றிருக்கிறது ...' என அலுப்புப்படுவார் பாட்டா.

சண்டை விலக்குத் தீர்க்கப் போய்ப் பல முறையும் பாட்டா தொல்லையிலும் மாட்டுப்பட்டிருக்கின்றார். ஒரு நாள் பட்டாளம் பாட்டா விரைந்து மிதிவண்டியிலே போய்க்கொண்டிருந்தார். தெருவிலே மோடன் கணபதியும் மாடன் சின்னத்துரையும் கத்தி, பொல்லு எல்லாம் வைத்துச் சண்டையிட்டனர். மிதிவண்டியை மரத்தோடு சாத்தி வைத்துவிட்டுப் பாட்டா பேசினார்.

'[illegible] கின்றேன். கத்தி [illegible] வைத்துவிட்டு வாயாலே பேசித் தீருங்கள்' என்றார் பாட்டா.

குடிவெறியில் நின்ற மோடன் கணபதியும் மாடன் சின்னத்துரையும் மறுத்தனர். ஒருவன் கத்தியை ஓங்கினான். மற்றவன் பொல்லை ஓங்கினான். ஏதோ நடக்கப் போகின்றது என்பதை உணர்ந்தபாட்டா மோடன் கணபதியின் கத்திக் கையைப் பிடித்தார்.


'உன்னை வெட்டுவேன்' என்றான் கணபதி. அப்படியே செய்து விட்டான். பாட்டாவின் கையில் சிறு காயம். மாடன் சின்னத்துரை பொல்லை ஓங்கினான். வெட்டும் அடியும் தனக்குக் கிடைக்கும் என்பதைக் கண்ட பாட்டாவிற்குப் பழைய குணம் அதாவது பட்டாளம் குணம் வந்துவிட்டது.

தமிழருவி: த. சண்முகசுந்தரம்

பாட்டாவின் இரும்புக் கைகளும் மரக்கால்களும் தொழிற்பட்டன. மின்னல் வேகத்தில் பாய்ந்தார். அனுமான் கூட அவரிடம் பிச்சை வாங்கவேண்டும். கணபதிக்கு ஒரே ஒரு அடி. மளார் என்ற சத்தம். சின்னத்துரைக்குச் சளார் எனக் காலால் ஒரு அடி. இருவரும் வாயால் நுரை கக்கிக் கொண்டு கீழே விழுந்தனர். பாட்டா சுய நிலைக்கு வந்தார். அன்புடன் சிரித்தார்;

'சனியன்! மூதேவி! புளிச்சல் கள்ளைப் போட்டுவிட்டு இப்படித் தெருத்திண்ணையில் சண்டை போடுகின்றார்கள்' என்றார். இதற்கிடையில் ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் வந்துவிட்டனர்.

'இவன்களைப் பொலீசிலை பிடிக்கக் கொடுக்க



வேண்டும்' என்றது ஒரு குரல்.

'ஏன் பொலீசிலை இவன்கள் வெறி முறிந்ததும் ஒருமிக்கத் தோளிலே கைபோட்டுக் கொண்டு போவான்கள்' என்றார் பாட்டா'

'பொறு வாறன். தம்பி நாதன் இப்படி வா. இந்தா காசு இரண்டு முடிச்சுக் கயிறு வாங்கி வா' என்றார் பாட்டா. கயிறை எடுத்து இருவரையும் அப்படியே வேலிக்கதியாலில் கட்டி விட்டார். 'தம்பிமாரே! வெறி முறிந்ததும் இருவரையுழ அப்படியே விடுங்கள். எனக்கு அவசரவேலை போகின்றேன்' என்று பாட்டா சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இரண்டு மணி நேரம் போய்விட்டது. கணபதியும் சின்னத்துரையும் சால்வையை எடுத்துக் கொண்டு பாட்டாவின் வீட்டிற்கு வந்தனர். பாட்டாவின் காலில் விழுந்து வணங்கினர். இருவரையும் பாட்டா அன்புடன் தூக்கி விட்டார்.

'சே! சே! இது என்ன வேலை. கடவுளை விழுந்து வணங்குங்கள். இதோ பிள்ளையார் படம் இருக்கின்றது. தட்டிலே கற்பூரம், இதோ நெருப்புப் பெட்டி' சாம்பிராணிக் குச்சி, அப்படியே கற்பூரம் கொளுத்துங்கள். பிள்ளையாரைக் கும்பிடுங்கள்... பத்துத் தோப்புக்கரணம்...... பிள்ளையாரப்பா கள்ளுத் தண்ணியைக் கையாலும் தொடோம்...... என்று சொல்லிக் கும்பிடுங்கள் ...... நல்லது. ஆளுக்குப் பத்து ரூபா காசு தாறேன்... அரிசி வாங்கி நல்லாகச் சமைச்சுச் சாப்பிடுங்கள்...... ஓம்... ஓம்... நல்லது போட்டு

(8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஓரை பார்த்தால் நன்மையுண்டு

சோதிட சஞ்சீவி

ஓரை பார்த்து நடப்பது நம்மவர் பழக்கம். சுப ஓரைகளில் நாம் நன்மையான விஷயங்களைத் தலைமுறை தலைமுறையாகச் செய்து வருகிறோம்.

வியாழன், வெள்ளி, புதன், சந்திரன் சுப கிரகங்கள். இவர்களது ஓரைகள் சுபகாரியங்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன.

சனி, செவ்வாய் தீய கோள்கள். இவர்களது ஓரைகள் தீய செயல்கள் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சூரிய ஓரை சில காரியங்கட்குச் சிறந்தது. சில காரியங்கட்கு விலக்கப்பட்டுள்ளது.

நவக்கிரகங்கள் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. ஒன்பது கிரகங்களுள் நாம் முக்கியத்துவம் கொடுப்பது ஏழு கிரகங்களுக்கு மட்டுமே. அவற்றின் பெயராலே தான் வாரத்தின் ஏழு நாட்களும் வழங்கப்படுகின்றன.

இருபத்து நான்கு மணித்தியாலங்களும் இந்த ஏழு கிரகங்களுக்குமே பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அக்கிரகங்கள் ஏழும் தங்கள் தங்கள் நேரத்திலே; ஒவ்வொரு மணித்தியாலத்திலும் தங்கள் தங்கள் ஆட்சியைச் செலுத்துவதை நாமறிவதில்லை.

ஒவ்வொரு கிரகங்களினது 'ஓரை' என்றுசொல்லப்படும் 'கிரக ஓரை'

ச. ஜெயச்சந்திரன்

(Hour) என்ற ஒவ்வொரு மணித்தியாலமும் நாம் நம்மை அறியாமலே அக்கிரகங்களினது ஆதிக்கத்துள் அகப்பட்டுச் செயல்படுகின்றோம்.

**தினங்கள்**

ஞாயிற்றுக்கிழமை என்றும் திங்கட்கிழமை என்றும் செவ்வாய்க்கிழமை என்றும் நாம் கூறி வருகிறோமே தினங்கள், அவைகள் உண்மையிலேயே அக்கிரகங்களோடு தொடர்புடைய நாட்களே. (கிழமை — தொடர்பு) ஓரை பற்றிய விளக்கம் மிகவும் வேண்டப்படுவதொன்று,

ஞாயிற்றுக்கிழமை சூரியனோடு தொடர்புடைய நாள். அன்றைய தினம்சூரியோதயம்சூரிய ஓரையில் ஆரம்பமாகிறது. முதல் ஒரு மணித்தியாலமும் 'சூரிய ஓரை' அடுத்த ஒரு மணித்தியாலமும் 'சுக்கிர ஓரை' அடுத்த மணித்தியாலம் 'புதன் ஓரை' இப்படியே தொடர்ந்து முறையே, சந்திரன், சனி, வியாழன், செவ்வாய் என்று ஓரைகள் மாறி மாறி வரும்.

**காரிய பலன்கள்**

ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்று கிரகங்களின் பெயர்கள் குறிப்பிட்ட அந்நாட்களில் அவ்வக்கிரகங்களின் ஓரைகள் எவ்வித தோஷங்களையும் நிவர்த்திக்கும்.

குறிப்பிட்ட தினங்களில் நல்ல காரியங்கள் நடத்துவதற்கு நல்ல கிரகங்களின் ஓரைகளில் தொடங்கிச் செய்தல் நன்மை பயக்கும்.

கல்வி சம்பந்தமான வேலைகளை வியாழ, சுக்கிர, புத ஓரைகளிலும் கல்யாணம் சம்பந்தமானவற்றை வியாழன், வெள்ளி, புதன், சந்திரன் போன்ற கிரக ஓரைகளிலும் வியாபாரமானால் வெள்ளி ஓரையிலும் இரும்பு சம்பந்தப்படுமாயின் சனி ஓரையிலும், யுத்தம் மந்திரம், அந்நிய மொழி முகவியவையானால் செவ்வாய் ஓரையிலும் நாம் ஆரம்பிக்கலாம். கிருஷிக சம்பந்தமானவற்றைச் செவ்வாய். சனி ஓரைகளிலும் மருத்துவ சம்பந்தமானவற்றை சனி, செவ்வாய், சுக்கிரன் முதலிய ஓரைகளிலும் செய்வது நன்மை பயக்கும்.

இக்கட்டான இக்கால கட்டத்தில் ஓரை பார்த்து நடந்தால் நன்மையுண்டு. ★

# ஆத்மஜோதி முத்தையா அளிக்கும் நல்ல பரிசு




இந்தோனேஷியாவில் இரண்டுவருட அனுபவம் என்ற இந்நூல் வெறும் பிரயாண அனுபவ நூல் அல்ல: இது ஒரு சமய, சமுதாய, சரித்திர உணர்வுடைய சிந்தனை நூலாகும். இந்தோனேஷியாவில் வாழும் இந்துக்கள்பற்றியும், குறிப்பாகத் தமிழ் மக்கள் பற்றியும் கூறும் இந்த நூலில்; பூர்வ குடிகள், குடியேறிய தமிழ் மக்கள், சமூக நிகழ்ச்சிகளில் சமய முறைகள், கோவில்கள், சாதிவேற்றுமையும் சிதனச் சீர்கேடும் இல்லாத சமூக அமைப்பு, பொழுது போக்கு ஆகிய பல தகவல்களைத் தந்து, அவற்றிற்கு விளக்கங்களை அளித்திருப்பதோடு, தேவையான வழிமுறை ஆலோசனைகளையும் தந்திருக்கிறார்.

இந்த அவதானிப்புக்களிலும் ஆலோசனைகளிலும் மூன்றை, மிகமுக்கியமானவை எனக்கருதி இங்கே குறிப்பிடுகிறேன். காரணம், அவை தமிழர் குடிபுகுந்த எல்லா நாட்டுச் சமுதாயத்திற்கும் பொருந்தும்.

> **நூல்:** இந்தோனேஷியாவில் 2 வருட அனுபவம்.
> **ஆசிரியர்:** திரு.நா. முத்தையா..
> **விலை:** ரூபா. 16.00
> **அறிமுகம்:** நந்தி.

முதலாவது தமிழ் மொழி பற்றியது. இந்தோனேஷியாவில் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் தமிழிற் பேச, வாசிக்க, எழுதக்கூட வல்லமை உடையவர்களாக இருக்க, சிறுர்கள் பேசவும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். (பக்:8,60) தமிழை மறந்தபின் நாம் தமிழர் என்றுசொல்லிக்கொள்ள முடியாது. தமிழை மறந்தால் எமக்கு மதமும் இல்லை என்ற கருத்தை வற்புறுத்துகிறார். இந்த நிலை இங்கிலாந்தில் உள்ள தமிழர்களுக்கு மிகவும் பொருந்தும் என்பதை அங்கே சென்றவர்கள் அறிவார்கள். அத்தனை பேருக்கும் அங்கே, இங்கிலாந்தில் உள்ள வாலிபரும்சரி பெரும்பாலான சிறுர்களும் சரி, நமது நாட்டில் தமிழ் கற்றபின் 1977இலும் 1983 இலும் அகதிகளாகப் போனவர்களே!

''வீட்டிலே தமிழிலே பேசுங்கள். தமிழனைத் தமிழன் கண்டால் தமிழிலேயே பேசவேண்டும் என்று ஆத்மஜோதியார் தரும் சிறு ஃபோர்முயூலாவே இந்த அவலநிலையைத் திருத்தும்.

இரண்டாவது கோயில் வழிபாடு பற்றியது, (பக் : 27 . 106 - 107): கோவில்களில் அனுவசிய ஆர்ப்பாட்டங்களைத் தவிர்த்துகூட்டுவழிபாடு, நாம பஜனை, தியானம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது வற்புறுத்தப்படுகிறது. நமது நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் பெருமளவு குறைந்த போதிலும் கோவில்களில் பஜனையும் தியானமும் அறிவுரை வழங்கலும் மிகக்குறைவு அல்லது இல்லை, அல்லது இருந்தாலும் பிரயோசனம் அற்ற முறையிலும் சூழலிலும் நடைபெறுகிறது என்றே கூறவேண்டும். ஆகவே இந்த ஆலோசனை ஈழத்திற்கும் தேவை. மூன்ருவது தமிழரின் 'பாவம்' பற்றியது (பக்:71):

உலகில் எல்லாச் சமூகத்தவருக்கும் ஒரு இராச்சியம், ஒரு தேசம், ஒரு மாகாணம், ஒரு கட்டுக்கோப்பு இருப்பதைக் காண்கிறோம். தமிழனுக்கு என்று இந்த உலகில் எதுவுமே இல்லை என்று எழுதியவர் 'இன்றைய உலகில் தமிழ் இனத்திற்கென்று தனியான ஒரு உலக அமைப்பு ஏற்படவேண்டும்...! என்ற பாரிய கருத்தைக் கூறியிருக்கிறார்.

இத்தகைய செய்திகளும், கருத்துக்களும் மிகுந்த, இலகுவில் படிக்கத்தக்க ஆங்காங்கே நகைச்சுவை மூலம் சிந்தனையைத் தூண்டவைக்கும் இந்த நூல், ஆத்மஜோதியார் தமிழ் மக்களுக்குத் தரும் இன்னொரு பரிசு. ★

# கால்நடை நோய்களும் தடுப்பும்

**கால் வாய் நோய்**

வரட்சி அதிகமாகக் காணப்படும் சாலங்களில் மாடுகளிடையே கால் வாய் நோய் தொற்றுவதை பண்ணையாளர் அவதானிக்க முடியும். இது ஒரு வைரஸ் நோயாகும். இந்நோய் கால்நடைகளுக்கு ஏற்படும் போது வாய். நாக்கு, முரசு, உட்தாடைப் பகுதிகள், குழம்புகளுக்கிடையே குழம்பின் மேற்பகுதி போன்ற இடங்களில் நீர் நிரம்பிய கொப்பளங்கள் தோன்றும். சில வேளையில் பண்ணையாளன் இக்கொப்பளங்களை அவதானிக்க முன்பே அவை உடைந்து புண்களாக வெளித் தெரியும். இப்புண்கள் வேதனையைக் கொடுப்பதால் மாடுகள் உணவு உண்ண மாட்டா. நொண்டவும் ஆரம்பிக்கும். வாயிலிருந்து வீணீர் வடிந்தபடியே இருக்கும். இக்குறிகளை அவதானித்ததும் ஒரு பண்ணையாளன் இதைக் கால் வாய் நோய் என இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

கால் வாய் நோய் என்னும் வைரஸ் நோயை சிகிச்சை மூலம் மாற்ற முடியாது. நோய் கண்டதும் புண்களைக் குணமாக்கவும், புண்கள் தொற்றல் ஏற்படாமல் பாதுகாக்கவும் சிகிச்சை செய்யலாமே தவிர நோயை மாற்ற முடியாது. இந்நோயினால் கன்றுகள் இறக்க நேரிடும். நோயிலிருந்து தப்பித்துக்கொண்ட கன்றுகளின் இருதயம் பெலவீனமானதாகக் காணப்படும். பெரிய மாடுகளில் பால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். இழுவை மாடுகள் அல்லது வேலைகளுக்குப் பாவிக்கப்படும் மாடுகள் பலவீனம் அடைவதால் இழுவை அல்லது வேலை செய்ய முடியாது போகின்றது. புண்களைக் கவனியாமல் விடுவதால் இரத்தம் நஞ்சாகி மாடுகள் இறக்கலாம். இவ்வாறு இந்நோயினால் பலவிதமான இழப்புக்களைப் பண்ணையாளன் எதிர்நோக்குகின்றான். மாடுகளில் இந்நோய் ஏற்படாது தவிர்த்துக் கொள்ள மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுவது அவசியம்.

**தடுப்பூசி ஏற்றல்**

மாடுகள் - எருமைகள் போன்ற கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய், கால்வாய் நோய் ஆகியன ஏற்படாது தவிர்த்துக் கொள்வதற்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினுல் தற்பொழுது தடுப்பூசி ஏற்றும் விசேட திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இத்தடுப்பூசித் திட்டம் ஆனிமாதம் 15 ஆம் திகதி தொடக்கம் அமுலாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கால் நடை வைத்தியப் பிரிவுகளிலும் இத்தடுப்பூசி ஏற்றல் கிராமங்கள்தோறும் ஒரு திட்டவட்டமான முறையில் விளம்பரத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது மேற்குறித்த மாவட்டங்களிலுள்ள சகல அரசாங்க கால்நடை வைத்தியர் காரியாலயங்களிலும் இருந்து இந்த இலவச சேவை, கால்நடைப் பண்ணையாளருக்கு வழங்கப்படும், இவ்விரு தடுப்பூசிகளையும் ஒரே நேரத்தில் ஒரு மாட்டுக்கோ அல்லது எருமைக்கோ ஏற்றிக் கொள்ளலாம் நான்கு மாத வயதுக்கு மேற்பட்ட எந்தக் கன்றுக்கும் இத்தடுப்பூசியைப் போடுவிக்கலாம். ஒரு தடுப்பூசி நிரந்தரமானதல்ல. வருடா வருடம் மீண்டும் மீண்டும் இதே காலத்தில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும். கால்நடைகளுக்கு இத்தடுப்பூசியை ஆவணி மாதத்தின் போது ஏற்றிக் கொள்வதால் மழை ஆரம்பித்து நோய் பரவும்போது, கால்நடைகள் நோய் எதிர்ப்புச் சக்தியை இரத்தத்தில் பெற்றுக் கொள்வதால் நோய் தொற்றிக் கொள்ளாது பாதுகாக்கலாம். ★

சுமணதேவி தனபாலசிங்கம்




# பாலை நிலத் தெய்வ....

(5-ஆம் பக்க தொடர்ச்சி)

வருணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டுகின்றது. அங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங் கண்டு கொள்ளப்படுகின்ருள்.

அயிரைமலைக் கொற்றவை சேர மன்னர்களின் குலதெய்வம் என்று பதிற்றுப்பத்து என்னும் நூல் கூறுகின்றது. சேர மன்னர்கள் கொற்றவைக்குப் பலியிட்டு வழிபாடாற்றி வந்துள்ளார்கள். சோழ நாட்டின் தலைநகரிலுள்ள கொற்றவைக் கோயில், வாயிலில் உள்ள பேய்களினுல் பாதுகாக்கப்படுகின்றது. பாண்டிய நாட்டிலுள்ள கொற்றவைக் கோயில் சுடுகாட்டில் இருக்கின்றது. கொற்றவை என்று பொருள்படும் விந்தை என்னும் சொல்லைக்கொண்டே விந்திய மலைக்காடுதன் பெயரைப் பெற்றுள்ளது. முல்லைநிலத் தெய்வமாகவே கொற்றவையை அகநானூறு கூறுகின்றது. கொற்றவையின் எழில் மலையைப்புகழ்ந்து பாடிய புலவர் ஒருவருக்கு வெள்ளைக்கால் உடைய குதிரைகளைக் கொற்றவை பரிசாகக் கொடுத்ததாகவும் அகநானூறு குறிப்பிடுகின்றது. ★

# கலைஞர்களை வாழவைப்பின்......

(5-ஆம் பக்க தொடர்ச்சி)

புலவர் சண்முகரட்ணம் ஒழுங்கு செய்திருந்த போயா கலைவிழா நிகழ்ச்சியில் எனது கச்சேரியை தொடர்ந்து வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் நாதஸ்வரக் கச்சேரி ஒழுங்கு. அவர் வேறு கச்சேரிக்குப் போகவேண்டுமென கேட்டு முதலில் வாசிக்கக் கேட்டார். நாதஸ்வர கச்சேரி நடுவில் என்னுடன் மிருதங்கம் வாசிக்க வந்திருந்த வட்டுக்கோட்டை கல்லூரி சமஸ்கிருத விரிவுரையாளர் எம். டி.. பாலசுப்பிரமணியம் கைலேஞ்சியால் தமது காதுகளை அடைத்துக் கொண்டார். காரணம் சங்கீதத்தில் நாதஸ்வரம் பெருமளுன சப்தத்தையுடையது. அதனைக் கேட்ட சில மணி நேரத்துக்கு வேறு கச்சேரிகள் பண்ணுவது கடினம். காலஞ்சென்ற மணி ஐயர் (சுவாமிநாததம்பிரான்) அவர்களும் உடனிருந்தனர். சண்முகசுந்தரம் கச்சேரி முடிந்து வெளியேறமுன் யான் கச்சேரி தொடங்கிவிட்டேன். மக்கள் கூட்டம் என் கச்சேரியில் லயித்திருந்தது. வேறு கச்சேரிக்கென புறப்பட்ட வலங்கைமான் அப்படியே உட்கார்ந்து விட்டார். கச்சேரிக்கு அவர் போகவில்லை. விழா முடிவில் அவர் பாராட்டுகையில் திருவையாற்றிலிருந்து கச்சேரி கேட்கும் நிலையில் மெய் மறந்து கேட்டேன் என கூறினர். இவை எல்லாம் என் மனதை விட்டு நீங்காதவை.

கேள்வி: பல மேடைகளில் கச்சேரி செய்த நீங்கள் இன்று ஒதுங்கி இருக்கக் காரணம்?

பதில்: இந்தியாவிலும் இலங்கையிலும் யான் பண்ணுத கச்சேரிகள் இல்லை. கடந்த 4, 5 ஆண்டுகளாக உடலில் இரத்த அழுக்கம் ஏற்பட்டு வைத்தியம் செய்கிறேன். இதனுல்மேடைக் கச்சேரிகளுக்குப் போவதில்லை.

கேள்வி: சங்கீதத்தில் திறமை பெற்ற பலர் அதனைக் கொண்டு பிழைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் சினிமாவில் பின்னணிபாடச் சொல்கிருர்களே - காரணம் என்ன?

பதில்: என்னை அவர்களுக்கிருக்கும் நாதக்கட்டுப்பாடு மற்றது மேடைக் கச்சேரியைவிட சினிமாவில் வருமானம் அதிகம். சங்கீதம் பயின்ருலும் சிலருக்கு சாரீர பலன் இயற்கைவளம் இருந்தாலும் நாதக் கட்டு இருப்பதால் மேடைக்கச்சேரி செய்வது கஷ்டம். ரி. எம். சௌந்தரராஜன், முசிரி சுப்பிரமணியம், ஜி என். பாலசுப்பிரமணியம், போன்ருேரின் நிலை அப்படி. தியாகராஜபாகவதர் கூட நாடகத்தில் பாடும் வல்லமை படைத்தவர். ஆனுல் மேடைக்கச்சேரி செய்யமாட்டார். தமது குறையை உணர்ந்து மேடைக்கச்சேரி மரியாதையை காப்பதற்காக அவர் ஆலந்தூர் சகோதரர்களிடம் பாடம் கேட்டுள்ளார்.

கேள்வி: சங்கீதம் பயிலும் இளம் தலைமுறையினருக்கு நீங்கள் தரும் புத்திமதிகள் எவை?


பதில்: ஒரு மரத்தை நாம் சிறந்த சிலை என்று கூறுவதில்லை. அதனை வெட்டி, அரிந்து, உளி கொண்டு செதுக்கி திரும்பத்திரும்ப அதற்கு மெருகூட்டுவதனுல் தான் அழகான சிலையாக மாற்றலாம். அதேபோல சங்கீதத்தையும், உருப்படிகளை தினம் தினம் திரும்பத்திரும்ப சாதகம் பண்ணி மெருகூட்டி பூரணப்படுத்தும் ஆற்றலை இசைபயில்வோர் கைக்கொள்ள வேண்டும். இதற்காக பல மணி நேரங்களை நாள்தோறும் செலவிட வேண்டும். சாரீரவளம் குறைந்தவர்களுக்கும் சங்கீத ஞானம் இருப்பின் கடினமான சாதகப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சாதனைகள் புரிய முடியும்.

—இப்படிப் பேட்டி முடிவில் சொன்னுர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 76




அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ....................

விலாசம்:- ....................

வயது:- ....................

ஒப்பம்:- ....................

**இடமிருந்து வலம்**

1. அவப்புகழ், 6. ஒருவகைமரம், 7. கட்டிப்பிடி, 8. நான்கு பக்கங்களைக் கொண்டது, 9. இயல்பு, 11. நெருப்பில்லாமல் வராதே! 13. துவக்கிலிருந்து வருவது, 14. இந்த ஆசை பிடித்தால் விடாது, 17. நவமணிகளில் ஒன்று, 18. மேலே தீட்டும் வர்ணம், 19. குதிரை, 21. உடற்பகுதி, 22. தாயுடன் பிறந்தவன்.

**மேலிருந்து கீழ்**

1. மணிமேகலையின் கையிலிருந்த அட்சய பாத்திரம், 2. கணவன், 3. சத்துள்ள உணவு வகை, 4. இரண்டு இலக்க எண் குழம்பிக் கிடக்கின்றது, 5. ஓர் இசைக்கருவி, 7. கணை 8. நிகழ்ச்சி, 10. பதுமை, 12. பரதனின் தாய், 15. களம் இறுதி எழுத்தை இழந்து விட்டது 16. நிழல், 17. ஒரு தானியம் 18. பாபா பக்தர்களின் வாயில் ஒலிப்பது, 20 மழைகாலம் மாறிக் கிடக்கிறது.

**சொற்சிலம்பம்**
**போட்டி இல. 74 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. அஞ்ஞாத வாசம், 5. ரதி, 7. தாகம், 9. பாரி, 10. திரு, 11. பாம்பு, 13. மைசூர் 15. கைவினை, 18. சவம், 19. கடுகதி, 21. திசஅ (அசதி) 22. ஓம், 23. சுபம்.

**மேலிருந்து கீழ்**

1. அந்தாதி, 2. ஞாலம், 3. வாரணம், 4. சதி 6. சரிசனை, 8. கருமை, 11. பார்வதி, 12. புகை, 14. சூசகம், 16. விலாசம், 20. டுஓ (ஓடு), 21. திப(பதி)

**சொற்சிலம்பம் போட்டி இல. 74**
**பரிசு பெற்றவர்கள் விபரம்**

1ஆம் பரிசு ரூபா: 50
செல்வி. பா. தாட்சாயணி,
மே/பா. ச. பாலரத்தினம்,
புங்குடுதீவு-3

2ஆம் பரிசு ரூபா: 25
செல்வன். சஞ்சீவன்,
மே/பா: ச. மகேஸ்வரன்,
ஸ்கந்த புஷ்கரணி,
உடுவில், சுன்னுகம்.

3ஆம் பரிசு ரூபா: 15
திருமதி. க. சந்திரகாந்தி,
''கனகமாளிகை''
ஏழாலை மேற்கு
சுன்னுகம்.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 76, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ அடுத்து வரும் வெள்ளிக்கிழமை அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

# சஞ்சீவி கவிதைக் கதம்பம்

## அன்பு மகனுக்கு

நல்லது மகனே, நானுனக்குச் சொல்கிறேன்
வாழ்க்கை எனக்குப் பளிங்குப் படிகளல்ல
குத்தும் ஆணிகளும் அவற்றின் கூரின்
சிராய்ப்புகளும் கூடவே இருந்தன
பலகைகள் கிழிந்திருந்தன
பாதையில் கம்பளம் இல்லை
வெறுமை
எனினும் எல்லா நேரமும்
யான் ஏறிச்சென்றுகொண்டிருந்தேன்!
இறங்குதுறைகளும் திரும்பும் மூலைகளும்
சிலவேளைகளில் செல்லுமிடத்திலிருள்
அங்கு ஒளியென்பது ஓரிடத்திலுமில்லை
ஆகவே, மகனே! திரும்பிப்போகாதே
படிகள் எதிலும் இருந்துவிடாதே
சிரமம் என்ற சிந்தனை வரினும்
இப்போது நீ வீழ்ந்துவிடாதே
மகனே, இன்னும் தொடர்ந்துபோகிறேன்
எதுவந்தபோதும் ஏறிச் செல்கிறேன்
வாழ்க்கை எனக்குப் பளிங்குப்படிகளல்ல.

ஆங்கிலமூலம்: லாங்ஸ்ரன் ஹியூக்ஸ் (Langston Hughes)
தமிழாக்கம்: சு. மகாலிங்கம்.

✶

## உயர்ந்து நிற்போம்

சிறுபிள்ளை நாளும் கூடிச் செய்யும்
செந்நெல்லு வயற்காடு விளைந்த போதும்
உறுபசியை ஆற்றுதற்காய் வீடு சென்று
உதவாது அது என்ற காலம் மாற்றி
உறுமிவரும் வர்க்க இன
ஒடுக்குமுறை ஒடித்திறுதி வெற்றி காணச்
செருக்களத்தை நோக்கிப் பாய்ந்தோடு கின்றார்
செம்மை நிறச் சூரியனை நிகர்த்த சூரர்.

உதிக்கின்ற சூரியனில் உள்ள வெம்மை
உலகுய்ய உதவுமொவ்வா தவற்றைத் தீய்க்கும்
மதிக்கின்ற தொழிலாளர் வாழ்க்கைக் காக
மாநிலத்து இளைஞர்பலர் உழைப்ப துண்டு
கொதிக்கின்ற தவருள்ளம் கொடுமை கண்டு
குளிர்வதில்லைத் தீமைதனைச் சாய்க்கு மட்டும்
புதுப்புனலைப் பாய்ச்சுதற்காய் ஈழநாட்டில்
புறப்பட்டார் இளைஞர் இனிப் பொறுக்க மாட்டார்

வரட்சிபெற்ற நிலமெல்லாம் பண்ப டுத்தி
வகைவகையாய்ப் பயிர்பலவும் நட்டுமண்ணில்
உரமாகத் தம்முழைப்பை ஈந்து நாட்டின்
உற்பத்தி தனைப்பெருக்கும் பாட்டாளிக்கு
உரமுண்டு உறுதியுண்டு கொள்கை யுண்டு
ஓரணியில் திரளுகின்ற மதியு முண்டு
கரங்களிலே வலுவுண்டு சுயமை தன்னைக்
கதிரவன்போற் சுட்டெரிக்கும் திறமை யுண்டு

இந்நாட்டின் எதிர்கால ஆட்சி தன்னை
ஏற்கின்ற பெரும்பொறுப்பு இளைஞர்க்குண்டு
பொன்னுடாய் இந்நாட்டைப் பொலிய வைக்கும்
பெரும் பொறுப்பும் இந்நாட்டு இளைஞர்க் குண்டு
கந்தலுடை உடுத்துக்கை யேந்தி நிற்கும்
காட்சியெதும் இந்நாட்டில் இல்லா தோட்டும்
சிந்தனையும் மிகவுண்டு; எதிர்ப்போர் தம்மை
சீறியெழுந் தடக்கி இம்மண் சிவக்க வைப்பர்.

எடுக்கின்ற பணியதிலே உடனே மாற்றம்
இல்லாது போனலென்? முயற்சி கொண்டு
தொடுத்தேநற் செயல் முடிக்கும் திண்மை வேண்டும்
சோர்வில்லா வுளப்பாங்கு நிறைய வேண்டும்
முடக்கிவிட முனைந்து நிற்கும் வர்க்க பேத
முண்டமெங்கள் முதுகிற்ச வாரி செய்யா (து)
ஒடுக்கிவிட்டு ஒப்பரிய சமுதா யத்தை
உதிக்கின்ற உதயன்போ லமைத்துவைப்போம்.

பண்டையநற் பெருமைகளைச் சொல்லிச் சொல்லிப்
பயனேதும் நாமிங்கு கண்டதுண்டா?
கண்டுவிட்ட விலங்கினை விரட்டி ஓட்டக்
கைகளிலே தீரமுடன் முறமெடுத்த
பெண்ணவளின் பெருமையினை நாம நிந்தும்
பேடிகளைப் போலோடி ஒளித்துக் கொள்ளும்
எண்ணமதை விட்டொழிப்போம் விடிவு காண்போம்
உதிக்கின்ற சூரியனாய் உயர்ந்து நிற்போம்.

-கட்டைபறிச்சான் க. கனகசிங்கம்-

## பாதையை மறக்கவில்லை

கல்லறைகளில் உறங்கும்
ஈழத்தாயின் இமயப்புத்திரர்களே
உங்கள் உடல் பிளந்து
தமிழ் மண் நனைந்தபோதும்
புனலென எம் கண்கள் சொரியவில்லை
வீறு கொண்ட எமது நெஞ்சம்
மறக்கவில்லை உமது பாதையை
கண்ணோடு சிவந்த காட்சி
பல கண்டும்
புண்ணாக வில்லை எமது நெஞ்சம்
பொங்கும் கடலலைகள்-பின்வாங்கலாம்
இலட்சிய வேட்கையோ
புறங்காணுமா—

—ராஜி நாகேந்திரம்—



# ஞானநூல்கள் யாருக்காக?

# சிவஞானசித்தியார் விளக்கம்

சமயம்

'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' இதனை ஒரு பாடசாலை விருது மொழியாகக் கொண்டிருந்தது. பாடசாலைக் கேடயத்தில் இதனைக் கண்ணுற்ற ஒருவர், 'படிப்பறிவில்லாதவர் நெஞ்சில் ஆண்டவன் உறையமாட்டானா? எத்தனையோ அடியார்கள், புனிதர்கள் கல்வி அறிவில்லாத மூடர்களாக உலகியலில் உள்ளவர்களால் கணிக்கப்பட்டாலும், ஆண்டவனுடைய அருகில் இருக்கும் பாக்கியம் பெற்றார்களே!' என்று சந்தேகத்தை எழுப்பினார்.

சாதாரண உலக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் இவ்வினாவை எழுப்புவது நியாயமே. உத்தியோக நியமனம், பதவி உயர்வு போன்ற கருமங்களுக்குப் படிப்பறிவை வற்புறுத்தலாம். கல்வியின் சிறப்பையும் கல்லாமையின் இழிவையும் திருக்குறள் விதந்துரைக்கிறது. ஆனால் ஆன்மீக வாழ்க்கைக்கும் இது அவசியம்தானா? கண்ணப்பர் எந்தப் பாடசாலையில் கல்வி பயின்றார்? 'திருவேறு; தெள்ளியர் ஆதலும் வேறு'. கல்விச் செல்வம் உள்ளவர் எல்லாரும் தெளிந்த உள்ளம் படைத்தவர் என்று கூற முடியாது.

இதற்கு மறுதலையாக, 'கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று வாயூறுகின்றார் தாயுமானவர். கற்று, அறிவு நிரம்பப் பெற்றவன் வஞ்சகம், கர்வம், பிடிவாதம், அகங்காரம் உடைய வனாகியிருக்கக் காண்கிறோம். அவன் கற்றும் கல்லாதவனே.

சாதாரண கிராமத்து மனிதன் ஒருவனிலும் எத்தனையோ மடங்கு தாழ்ந்த நிலையில் சகதியில் அழுந்திக் கிடக்கிறான் அவன். 'கழுதை குங்குமம் சுமந்தது போல' என்ற மணிவாசகரது உவமைதான் அவனுக்குப் பொருத்தம்.

நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரியம் பூண்ட அந்தணருக்குக் காட்சி கொடுக்காமல் வேட்டையாடி வாழும் வேடர் மத்தியில் தானும் சேர்ந்து விளையாடுகிறானும் முருகன் என்கிறார் நக்கீரர். வஞ்சகமற்ற வேடரிடம் அறியாமை மட்டுமே உண்டு. படித்த அந்தணரிடமோ வஞ்சகம், செருக்கு முதலிய பல கொடிய தொற்று நோய்கள் உள்ளே குமுறிக் கொண்டிருக்கும். எனவே அவர்களுக்கு ஒளிக்கும் தமிழ்க் கடவுள், வேடருக்குக் காட்சி கொடுக்கின்றான்,

உண்மைக் கல்வி கற்றவர்கள் நூலுணர்வு மூலம் உண்மையைநாடி, விவேகித்து உணர்ந்து, தலைவனையும் தம்மையும் உணர்வதே பிறவியின் நோக்கம் என்ற முடிவுக்கு வருவர். அவர்கள் உள்ளொளியைத் தேடிப் பெருமுயற்சி (அல்லது தவம்) செய்வர். சிலர் பூர்வ ஜென்ம விசேடத்தாலோ, வேறு ஏதோ விளக்கமுடியாத தெய்வீக திருச்சித்தத்தின் படியோ, முயன்று கல்லாமலே கடவுளுணர்ச்சி கைவரப் பெறுகின்றார்கள். அவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் தொகை உலகமக்களினத்தில் ஒரு நுண்ணிய கூறு மட்டுமே. அவர்களுக்கு நூல் உதவி தேவையில்லை. உள்ளே இருந்து இறையருள் தூண்டி வழிகாட்டும் பேறு அவர்களுடையது. சாமுசித்தர் என அவர்கள் குறிக்கப்படுவர்.

மற்றொரு வகையினர் விலங்குகள் போன்று வசிப்பவர்கள். உண்டு, உறங்கி, இனம்பெருக்கி, வாழ்ந்து, மடிந்து போகிறவர்கள். அவர்களுக்கு நூலால் பயனில்லை. பகல் ஒளியைப் பயன்படுத்தமாட்டாத கூகை போன்ற இவர்களை யாரும் கணக்கில் சேர்ப்பதில்லை. பிராகிருதர் ஆகிய இவர்கள் இயற்கையில் காணும் கல், மண், மரம் போன்றவர்களே.

மூன்றும் வகையில் ஒரு சிலர் இருக்கிறார்கள். 'கதிப்பாற் செல்ல ஏது நெறி'. இவ்வுலகச் சேற்றிலிருந்து தப்ப வழி என்ன என்று யோசிப்பவர்கள், விசாரிப்பவர்கள். வீடு காதலிப்பவர்கள். அவர்களுக்குத் தான் சான்றோர், நூலறி புலவர், நூல் எழுதுவார்கள். அவர்களைப் பொருத்தவரையில் கல்வியினால் ஈசன் அவர் உள்ளத்தில் நிற்பான். வைனயிகர் என அவர்களை அழைப்பர்.

'அறிதல் அன்மைக் கருமுகில்' (The cloud of Unknowing) என்ற அநுபூதி நூலின் ஆசிரியர் ஒரு பெயர் தெரியாப் பெருமகன். தமது நூல் என வழங்குவதே பந்தம் என்று நினைந்து, யான் எனது என்னும் செருக்கறுத்த அப்பெருமகனார் தமது பெயரையே நூற் பிரதியில் பொறித்தவர். 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்த ஆங்கில அநுபூதிமான் கூறுகிறார்: இந்நூலைக் கையில் ஏற்பவர் முழுவதையும் படிக்கும்படி அன்பின் அதிகாரத்தால் ஆணையிடுகிறேன். உலகியலில் உழலும் வீண் பேச்சாளர், முகஸ்துதி செய்வோர், பிறர் கருமங்களில் தலையிடுவதே தொழிலாக உடையோர், விதண்டாவாத விமர்சகர்கள் — இப்படியானவர்களுடைய கண்ணில் இந்நூல் படாமலிருக்கட்டும்.

அவர்களுக்குப் புத்தகம் எழுத நான் நினைப்பதில்லை. வெறும் 'விடுப்பு'க்காகப் புத்தகத்தைத் தொடுபவர்கள் — படித்தவர்கள், படிக்காதவர்களாகிய இருவகையினருக்கும் — இந்நூல் உரியது அன்று. அவர்கள் உலகியற் கருமங்களில் ஈடுபடுவோரது கணிப்பில் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய தேவைகளுக்கு இந்நூல் ஏற்றதன்று. ஆனால் அன்றாட வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுட் சிலர் இறைவனுடைய திருவருளின் பதிவுக்கு ஆளாகி உள்ளனர். இந்நூலின் நற்செய்தியை அவர்கள் மட்டுமே கைக்கொள்வர். பரமாத்மாவின் செயற்பாட்டைத் தம் உள்ளே உணரவல்லவர்கள் — அது தம்மை அன்பு மயமாக்குவதை உணர்பவர்கள்- இடையீடின்றி உணராவிடினும், ஓரோ வழி உணர்பவர்கள் இந்நூலை வாசிப்பதால் அவர்கள் இறையன்பில் உறுதியாக நிற்கமுடியும். அவர்க்கே இந்நூலால் பயன் உண்டு.

'சிவஞானசித்தியார்' எழுதியவர் சகலாகம பண்டிதர், அருணந்தி சிவாசாரியார் 13 ஆம் நூற்றாண்டினர். தமது நூல் யாருக்காக எழுதப்பட்டது என்பதைத் தம் பாயிரத்தில் தெளிவுபடுத்துகிறார்,

''பண்டைநற் தவத்தால் தோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினில் தொகுப்பன் மார்க்கர்
கண்ட நூல் ஓதி வீடு
காதலிப்பவர்கட்(கு) ஈசன்
புண்டரிகத் தாள் சேரும்
பரிசினைப் புகலல் உற்றாம்''

இவ்விருவரும்இடத்தால் ஆறாயிரம் மைல் வேறுபட்டவர்கள். காலத்தால் நூறு ஆண்டுகள் வித்தியாசமானவர்கள். ஆனாலும் இருவரது சிந்தனையிலும் உள்ள ஒற்றுமை உற்று நோக்கத்தக்கது. அருளொளி பதிந்தவர்கள் — சத்திநிபாதர்கள் — எங்கிருப்பினும் அவர் தம் கருத்து ஒருமையுற்றே இருக்கும். ✶

- ஆ. சபாரத்தினம் -

# கரபந்து ஆடாத நாடு உலகில் எங்கும் இல்லை

விளையாட்டுத் துறை

கரபந்தாட்டம் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டிற்கு மேலாக உலகின் சகல பாகங்களிலும் உள்ள ஆண்-பெண் இருபாலாராலும் ஆடப்படும் ஒரு சிறந்த உடற்பயிற்சிக்கும், பொழுதுபோக்கிற்கும் உகந்த விளையாட்டாகும்.

1895 ஆம் ஆண்டளவில் அமெரிக்கா நாட்டில் கூடைப்பந்தாட்டம் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தது. இவ்விளையாட்டில் ஓர் அளவு வயதில் முதிர்ந்தவர்களும், அதிக உயரம் இல்லாதவர்களும், பங்குபற்றிச் சிறப்பாக ஆட இயலாதிருப்பதைக் கண்ணுற்ற வில்லியம் மோர்கன் என்ற அமெரிக்க விளையாட்டுத்துறை வல்லுனர்-வயதில் முதிர்ந்தவர்களும், தமது ஒய்வு நேரத்தில் ஆடி மகிழ வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, அவரால் உருவாக்கப்பட்ட விளையாட்டுத்தான், நாம் இன்று விளையாடி மகிழும் கரபந்தாட்டம்—(''வொலிபோல்'')

அக்கால கட்டத்தில் 'மின்ரொன்' என்ற ஜேர்மன் தேசத்தில் தோன்றிய விளையாட்டு அமெரிக்காவில் பரவி, கூடைப்பந்து விளையாட்டுடன் போட்டிபோட்டுக்கொண்டு அமெரிக்க மக்களிடையே ஓர் அளவு பிரபல்யம் அடைந்து கொண்டிருந்தது. ஏழு அடி உயரத்தில் கட்டப்பட்ட வலைக்கு மேலாக, நீளமான கைபிடி கொண்ட மட்டையினால், கழிவுநூலினால் செய்யப்பட்ட உருண்டை வடிவான பந்தை, வலைக்கு மேலாக அடித்து விளையாடுவதே இவ்விளையாட்டாகும். 'மோர்கன்' அதே விளையாட்டை மட்டையின்றி இரு கரங்களாலும் அடித்து ஆடச் செய்து, ''மின்ரொன் நெற்றி'' என்ற பெயரையும் இவ்விளையாட்டிற்குச் சூட்டினார்,

ஆரம்பத்தில் ஒவ்வொரு அணியிலும் 20 முதல் 30வரையில் வீரர்கள் ஆடினார்கள் - ஓர் அணி எத்தனை முறையும் பந்தை அடித்துக் கீழே விழவிடாமல் நெற்றுக்கு மேலாக மறுபக்கத்திற்கு அனுப்பலாம் - கரம் தவிர்ந்த ஏனைய உறுப்புகளால் பந்தை அடிக்கக் கூடாது - பந்தை அடிக்கும்பொழுது ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ளக்கூடாது போன்ற ஒருசில இலகுவான விதிகளுக்கு அமையவே ஆட்டக்காரர்கள் ஆடினார்கள்.

ஒருசில ஆண்டுகளின் பின், இவ்விளையாட்டிற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதையும், நாளுக்குநாள் இவ்விளையாட்டில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு பெருகி வருவதையும் அவதானித்த 'டாக்டர்' 'ஏ. ரீ. ஹல்ஸ்ரெட்' உடற்பயிற்சி நடத்துனர் விளையாட்டு உபகரணங்களை உற்பத்திசெய்து, தோலால் பந்து ஒன்றை உருவாக்கி நூல் பந்திற்குப் பதிலாக அதனை அறிமுகம் செய்துவைத்ததுடன் நில்லாமல். பந்தைக் கீழே விழவிடாமல் ஆகாயத்தில்வைத்து ஆடுவதினால் இவ்வாட்டத்திற்கு 'வொலிபோல்' (Volly Ball) என்ற பெயரையும் இட்டார்.

அமெரிக்காவில் ஹொல்யோக் என்ற நகரில் உதயமான இவ்விளையாட்டு காலக்கிரமத்தில் ஆசிய நாடுகட்கும், பின்பு ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகட்கும் படிப்படியாக பரவலாயிற்று. அண்மைக் காலத்தில் உலக கரபந்தாட்ட சம்மேளத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி கரபந்தாட்டம் ஆடாத நாடுகள் உலகத்திலே ஒன்றுமில்லை என்று ஆதாரபூர்வமாக கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். ஆனால் விசேடமாக அமெரிக்க-ரஷ்யா - கனடா - சீனு-யப்பான் - இந்தியா-பல்கேரியா - பிரான்ஸ் -ஹங்கேரி - மேற்கு ஜெர்மனி-கியூபா போன்ற நாடுகள் இவ்விளையாட்டில் முன்னணியில் திகழ்கின்றன. இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் - கரபந்தாட்டத்தின் தாயகம் அமெரிக்காவாக இருந்தபொழுதிலும் இன்று இவ்விளையாட்டு சிறப்புற்று மிளிருவது ரஷ்யாவில்தான்- ரஸ்யாவில் கரபந்தாட்ட உள் அரங்குகள் 20 ஆயிரத்துக்குமேல் இருப்பதாக மதிப்பிட்டுள்ளார்கள்-இதிலிருந்து ரஷ்யா இவ்விளையாட்டில் எத்தகையதொரு நாட்டமும், உத்வேகமும் கொண்டுள்ளது என்பதனை ஊகித்துக்கொள்ளலாம். கரபந்தாட்டம் எங்கும் வியாபித்து அதனை விளையாடுவோ

(8 ஆம் பக்கம் பார்க்க)

- டி. ஏ. எம். குணசிங்கம் -

# துயரமான நிகழ்ச்சி

''என் ஆண்டவரைச் சிலுவையில் அறைந்தபொழுது நீயும் அங்கிருந்தாயா?''—என்பது நீக்ரோ இனத்தவரின் பக்திப்பாடல்களுள் (Negro Spiritual) ஒன்றாகும். பாடுவதற்கும் கேட்பதற்கும் மிக்க உருக்கமான பாடலிது. இதனைக்கேட்கும் மக்கள், கல்வாரியின் துயரக் காட்சியை, மனக்கண்ணால் கண்டு கண்ணீர் உகுப்பர். இத்தகைய துயரத்தில் ஒரு வித மனத்திருப்தியும் அடைவர். இவர்கள் சிலுவை மரணத்தைப் பார்க்கும் பார்வையாளராகத் தம்மைக் கருதுகின்றனரேயன்றி, இக்கொலைக்குத் தாங்களும் உடந்தைதானென்று எண்ணுவதில்லை.

இயேசு பிரானின் சிலுவைமரணம்ஒரு துயர நிகழ்ச்சிதான். ஆனால் அதில் நமது பங்களிப்



பும் இருக்கிறதல்லவா? - ''நீ அங்கிருந்தாயோ?'' என்பது மட்டும், மேற்குறித்த பாடலின் பொருளன்று. ''நீயும் அவர் மீது சிலுவையைச் சுமத்தினாயோ? அவரைச் சிலுவையில் அறைந்திட ஆணிகள் எடுத்துக் கொடுத்தாயோ? அவரை ஈட்டி கொண்டு குத்தினாயோ?' என்று இப்பாடலின் பொருள் விரிந்து கொண்டே போகிறது. இன்றும் எம்பெருமான் இயேசு கிறிஸ்துவை, நமது பாவங்களால் நாம் சிலுவையில் ஏற்றுகிறோமல்லவா? அவரை அன்று சிலுவையில் ஏற்றிய அந்தப் ''பாதகரை'' நாம் இகழும்போது, நாமும் அந்தப் பாதகர் கும்பலைச் சேர்ந்தவர்கள் தானென்று உணர வேண்டுமல்லவா?

-வணபிதா டி. ஆர். அம்பலவாணர்

## பிரார்த்தனையின் சிறப்பு

நாம் சொல்வது ஒரு சட்டுக்கதையல்ல. வெறும் கற்பனைச் சித்திரமல்ல. பிரார்த்தனையைக் கொண்டு எல்லா இடையூறுகளையும் தாண்டிச் சென்ற பெரியோர்களுடைய அனுபவத்தையும் என்னுடைய அனுபவத்தையும் கொண்டு சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் பக்தியும் பிரார்த்தனையும் ஒன்றேயாகும். ஏதோ ஒரு சம்பவத்தை யாவது அல்லது சில நாட்களில் நடந்த நிகழ்ச்சியைக் கொண்டாவது நான் பேசவில்லை. நாற்பது ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து சொல்லுகின்றேன். வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் எல்லாம் கண்டிருக்கிறேன். அந்தகாரம் மூடிய நாட்களுண்டு. நிராசையாகப்போன நாட்களும் உண்டு. அதைரியப்பட்டிருக்கிறேன். பயந்திருக்கிறேன். அகங்காரத்தால் மோசமும் போயிருக்கின்றேன். ஆயினும் என்னுடைய பக்தியானது கஷ்டங்களையெல்லாம் தாண்டுவதற்கு உதவியிருக்கிறது. என்னுடைய பக்தி மிகக்குறைவான பக்தி. அது இன்னும் பூரணமடையவில்லையென்பதை அறிவேன். ஆயினும் அந்த குறைவுபட்ட பக்தியே இதுவரையில்



மகாத்மாகாந்திஜி

நான் கண்ட இடையூறுகளையெல்லாம் அகற்றவும் தாண்டவும் எனக்குச் சக்தி தந்திருக்கிறது.

வழிபாட்டின் சாரமும் உயிரும் பிரார்த்தனை. வழிபாடு இல்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. ஆகவே பிரார்த்தனை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. சிலர் தங்களுடைய பகுத்தறிவை மெச்சித் தமக்குச் சமய வழிபாடு வேண்டியதில்லை என்றே சொல்லுவார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், எனக்கு மூச்சு இருக்கிறது, ஆனால் மூக்கு இல்லை என்று சொல்லுவதுபோல் ஆகும். பகுத்தறிவைக் கொண்டோ, இயற்கை உணர்வைக் கொண்டோ, அல்லது மூடபக்தியினாலோ ஏதோ ஒரு விதத்தில் பராசக்தியின் தொடர்பை மனிதன் ஒப்புக்கொண்டே தீருகிறான். தீவிர நாஸ்திகனும், கடவுட் தத்துவம் அறிவுக்கு எட்டாதது என்று வாதிப்பவனும் யாருமே நன்னெறி வேண்டும் என்றே சொல்லுகிறார்கள். நன்னெறியில் நடப்பது நல்லது என்றும் தவறுவது தீது என்றும் சொல்லித்தான் வருகிறார்கள்.

- காந்தி அடிகள் -
தொகுப்பு:
எஸ். கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மறுமலர்ச்சி" இதழ் மலர்ந்த கதை

- மயிலங்கூடலூர் பி. நடராசன் -

"எனது அறிவுக் கெட்டியவரை திரு. ச. பஞ்சாட்சர சர்மா அவர்களே யாழ்ப்பாணம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத் தலை



பஞ்சாட்சரசர்மா

வர் என்பதை உறுதி செய்கிறேன். கடந்த ஈராண்டுகளாக நான் சங்க உறுப்பினராக இருக்கின்றேன். சங்கம் உருவாகியது முதல் சங்கம் மேற்கொண்ட பணிகள் அனைத்தையும் நான் அறிவேன்.

திரு. ப. வி. பொன்னுத்துரை என்னும் எமது உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படாமலே தம்மைத் தலைவராகக் கற்பித்துக்கொண்டு சங்கம் வெளியிட முடிவு செய்துள்ள மறுமலர்ச்சி இதழைத் தாமே வெளியிட முயல்வதாக அறிகிறேன். ஆனால், சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளராகிய திரு. க. செ. நடராசன் அவர்களுக்குச் சங்கச் சார்பில் மறுமலர்ச்சி இதழை வெளியிடும் உரிமை வழங்கப்பட்டுள்ளது"

இது அ.ந. கந்தசாமியின் கடிதம்.

மறுமலர்ச்சி இதழின் பிறப்பில் அதிக அக்கறை கொண்ட அ.ந.க. மறுமலர்ச்சியின் பிறப்புக்குத் தடையானவை முறியடிக்கப்படவேண்டுமென விரும்பினர். அதற்குத் தமது வாக்குரிமை பயன்படவேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். தம் சார்பில் வாக்களிக்கும் உரிமையை அ. செ. மு. இடம் ஒப்படைத்தார். இவை தொடர்பாக அ.ந.க. மேற்படி கடிதத்தில் தொடர்ந்து பின் வருமாறு எழுதுகிருர்:

"உம்மிடம் ஒப்படைக்கப்படும் வாக்குரிமை துஷ்பிரயோகமாகாது என்பது எனக்குத் தெரியும். ஆனல், வாக்குரிமை இப்படி இன்னொருவரிடம் ஒப்படைக்கப்பட்டு அவரால் உபயோகிக்கமுடியுமா? அதுவும் தெரியவில்லை.

ஆனல், மறுமலர்ச்சியின் பிறப்புக்குக் குந்தகமான விஷயங்களைத் தகர்த்தெறிய என் வாக்குரிமை சக்தி உள்ளதானல் அதனை நான் பிரயோகித்தே ஆகவேண்டும். விபரங்களை முன் எழுதுங்கள்.

இத்துடன் ஆபிஸல் ரீதியான என்னுடைய வோட்டுரிமையை அனுப்புகிறேன். சரியான பக்கத்துக்கு உபயோகியுங்கள். விபரமான கடிதத்தை உடனே எழுதுங்கள்.

மறுமலர்ச்சிக்கு என் வாழ்த்து. அதன் ஜனனத்தை நான் வரவேற்கின்றேன். மறுமலர்ச்சி நிர்வாகம் யாருக்கு? எப்படித் திர்மானிக்கப்பட்டது? எனக்கு எப்படி வோட்டுரிமை ஏற்படும்? உடனே பதில்.

—அ.ந.க.

நீதியான, சரியான பக்கத்திற்குத் தமது வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் என்பதில் அ.ந.க. மிகவும் விழிப்புடன் இருந்தார் என்பதனைக் கடிதம் காட்டுகிறது. விபரங்களை எழுதும்படி மும்முறை வேண்டியிருப்பது இவ்விடயத்தில் அவர்கொண்டிருந்த உறுதியைப் புலப்படுத்துகிறது.

மறுமலர்ச்சியின் வெளியீட்டு உரிமை சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கே வந்து சேர்ந்தது. எதிரணியினர்



முருகானந்தம்

பின்னர் வழக்கைத் தொடரவில்லை என்று அறியமுடிகிறது.

மறுமலர்ச்சியின் முதலாவது இதழ் பார்த்திப ஆண்டு பங்குனித்திங்களில் (1946 ஏப்பிரல்) வெளியானது. மாத வெளியீடு என்ற அறிவிப்பு முதற் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. அ.செ. முருகானந்தன், தி. ச. வரதாசன் ஆகியோர்கள் ஆசிரியர்களாக அமர்ந்தனர்.

க. செ. நடராசன் வெளியீட்டாளராகப் பொறுப்பேற்றர். அட்டை உட்பட முப்பத்திரண்டுபக்கங்களோடு டிமை 1க்கு 8 அளவில் எளிமையான அட்டை அமைப்புடன் மறுமலர்ச்சி முதலாவது இதழ் வெளிவந்தது. இவ்வமைப்பே பெரும்பாலும் தொடர்ந்தது.

மறுமலர்ச்சியில் சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், இலக்கிய நயம், நாட்டாரியல், தமிழின் மறுமலர்ச்சிபற்றிய கருத்துரை, பிறமொழி இலக்கிய அறிமுகம் முதலிய பல்வேறு பகுதிகள் இடம்பெற்றுள்ளன. பெயருக்கேற்ப மறுமலர்ச்சித் தமிழின் பல்வேறு கூறுகளையும் கொண்ட இலக்கிய நறுமலராக மறுமலர்ச்சி மலர்ந்து மணம் வீசியது.

மறுமலர்ச்சியின் இருபத்து மூன்று இதழ்கள் வெளிவந்தன— ஆனல், மறுமலர்ச்சியின் பிறப்பை வரவேற்ற, அதன் பிறப்புக்குத் தடையாக அமைந்த அனைத்தையும் தகர்த்தெறிய ஆதரவு வழங்கிய அ. ந. கந்தசாமியின் படைப்பு எதுவும் மறுமலர்ச்சியில் இடம்



அ. ந. கந்தசாமி

பெறவில்லை!

மேலே குறிப்பிட்ட சிக்கல் காரணமாக மறுமலர்ச்சிச் சங்கத்தின் இயக்கம் பெரிதும் தடைப்பட்டதாகத் தோன்றுகிறது. மறுமலர்ச்சியை வெளியிட்டதன் மூலம் மறுமலர்ச்சித் தமிழுக்கு வளம் சேர்த்து மறுமலர்ச்சிச் சங்கம் அழியாப் பெருமைபெற்றது. மறுமலர்ச்சி இதழில் எழுதியோரும் மறுமலர்ச்சிச் சங்கத்தில் உறுப்பினராயிருந்த எழுத்தாளரும் மறுமலர்ச்சி எழுத்தாளர் என வழங்கப்படுகின்றனர். ★

## மார்பு அடைப்பு

இருதயத் தசைக்கு இரத்தம் அளிக்கும் இரத்தக் குழாய் (விட்டம் அல்லது) குறுக்களவு குறைவதாலும், குழாயில் இரத்தக்கட்டி படுவதனலும் இருதயத் தசைக்கு இரத்தோட்டம் குறைவதனலும் மாரடைப்பு ஏற்படுகின்றது. இருதயத் தசைக்கு இரத்தோட்டம் குறைவதனல் இருதயம் பலமாக உடம்பிலுள்ள உறுப்புகளுக்கு இரத்தம் செலுத்த இயலாமலிருக்கின்றது. அதுவுமல்லாமல் தன் தசைக்கு இரத்தோட்டம் மிகக் குறைந்தால் அது இயங்கமுடியாமல் நின்று மரணம் ஏற்படுகின்றது. ஆகையால் குருதிக் குழாய்கள் நன்முறையில் இருப்பதற்கு பல முறைகளைக் கவனிக்க வேண்டும்.

குருதிக் குழாயில் மாற்றங்கள் பல காரணங்களால் நேரிடுகின்றன.

அ) அளவுக்கு மீறி சாப்பிடுவது.

ஆ) தேக அப்பியாசக் குறைவு.

இ) மனக் கவலை.

ஈ) ஏக்கம்.

உ) புகைத்தல்.

ஊ) ஓய்வு குறைவு.

எ) சுறுசுறுப்பான வாழ்வு.

ஏ) நீரிழிவு.

ஐ) அதி இரத்த அமுக்கம்.

ஒ) பரம்பரைக்குணம்.

ஒருவரில் ஒன்று அல்லது ஒன்றிற்கு கூடப் பல காரணங்களால் மாற்றங்கள் ஏற்படலாம். ஆகையால் சொல்லப்பட்ட காரணங்களில் எவ்வளவு காரணங்களை நீக்கி வாழ்வதோ அவ்வளவு நன்மையாகும். சுருக்கமாகக் கூறில் அளவாகச் சாப்பிட்டு, சற்று தேகஅப்பியாசம் செய்து சில நேரம் ஓய்வு எடுத்து மனத்திடத்துடன் புகைத்தல் நீக்கி வாழ வேண்டும்.

பரம்பரையாக இருதயநோய் தோன்றும் குடும்பத்தவர்களும், 35, 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் முக்கியமாக ஆண்களும் சொல்லப்பட்ட காரணங்களைக் கவனித்து நடக்க வேண்டும். இவர்கள் இடைக்கிடை தங்கள் சிறுநீரையும் இரத்த அமுக்கத்தையும் பரிசோதிப்பது

(9 ஆம் பக்கம் பார்க்க)

வைத்திய சஞ்சீவி

## கரபந்து---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ரும், பார்த்து ரசிக்கும் ரசிகர்களும் பல லட்சங்களாக பெருகவே- அதன் வளர்ச்சியில் ஆர்வம்கொண்ட ஒருசில உலக நாடுகளின் பிரதிநிதிகள் 1936ஆம் ஆண்டு பேர்லினில் 'ஒலிம்பிக்' விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது ஒன்றுகூடி, இத்தனை பிரசித்திபெற்ற, ஜனப்பிரிய விளையாட்டிற்கு ஏன் உலகரீதியில் ஒரு சம்மேளனத்தை அமைத்து அவ்விளையாட்டின் மேம்பாட்டிற்காக உழைக்கக் கூடாது என்ற கேள்வி எழுப்பியதன் பயனக, 1947ஆம் ஆண்டு உலக கரபந்தாட்ட சம்மேளனம் உதயமானது. அந்த வருடமே அதன் தலைமைச்செயலகமும் பரிஸ் மாநகரில் நிறுவப்பட்டது. இன்றும் அங்குதான் தலைமைக்காரியாலயம் தொடர்ந்து இருந்து நற்பணியாற்றிவருவது மகிழ்ச்சிக்குரியது. ★

## விலக்குத் - - -

(5ஆம் பக்க தொடர்ச்சி)

வாருங்கள்...' இப்படியே பட்டாளம் பாட்டா அடுக்கிக் கொண்டே போனர்.

'கணபதி... பொறு... சின்னத்துரையின் கையைப் பிடித்துக் கொண்டுபோ...... அப்போதுதான் ஊர்ச்சனங்களுக்குத் தெரியும் உங்களுக்குள்ளே கோபதாபம் இல்லை' என்று... இரண்டுபேரும் உறவு என்று எல்லோருக்கும் தெரிய வேண்டும்...... ஊரிலே எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்...

சே... சே...... இவன் கோளாறு கோவிந்தன் போல இந்த ஊரிலே இன்னும் ஒருவன் பிறக்கப்படாது...... முருகபுரத்து முருகனே...... நீதான் துணை. முருகா சரணம்... குகனே சரணம்...' குருவே துணை... ஊர் வாழ்ந்தால் போதும்...' கணபதியும் சின்னத்துரையும் போய் விட்டனர்.

(யாவும் கற்பனை)

# வங்கிகளின் புதிய காசோலைகள் மோசடி தவிர்க்க உதவுமா?

ப. பாலமுகுந்தன்

இலங்கை வங்கி சகல வாடிக்கையாளர்களுக்கும் புதிய காசோலைப் புத்தகங்கள் வழங்கியுள்ளது. இப்புதிய காசோலைகள் கொம்பியூட்டர் மூலம் பரிவர்த்தனை செய்யப்படுவதால் காசோலை மோசடிகள் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காசோலைகளை கணக்குகளுக்கு வரவு வைப்பதிலும் பரிவர்த்தனை செய்வதிலும் தன்னியக்க முறையை (Automatic Clearing) செயல்படுத்தும் முகமாக புதிய M. I. C. R காசோலைப் புத்தகங்களை வாடிக்கையாளர்களுக்கு வங்கி விநியோகித்துள்ளது.

இப்புதிய காசோலைகளில் காணப்படும் குறியீட்டு இலக்கங்கள் காந்தசக்தி உடைய மையினுல் அச்சிடப்பட்டுள்ளன. இக்குறியீட்டு இலக்கங்கள் சேதமிடப்பட்டோ, காசோலைகள் கசங்கியோ, மடிக்கப்பட்டோ இருப்பின் காசோலைகளை கொம்பியூட்டர் நிராகரித்துவிடும். காசோலையின் அடிப்பாகத்தில் காணப்படும் கோட்டின் கீழ் கையொப்பம் இடுவதோ முத்திரை பதித்தலோ கூடாது.

காசோலை மோசடிகளைத் தவிர்ப்பதற்கு வங்கி நிர்வாகம் கண்காணிப்புடன் செயல்பட்ட போதும், வாடிக்கையாளர்கள் அவதானத்துடனும் விழிப்புணர்ச்சியுடனும் செயல்பட்டாலேயன்றி மோசடிகளைத் தவிர்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் சகல கொடுப்பனவுகளும் காசோலை மூலமே செய்யப்பட்டு வருகின்றன. இது காசோலை மோசடியில் ஈடுபடுவோருக்கு நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியது. பல மோசடிகள் நிகழ்ந்துள்ளன. அனேக சந்தர்ப்பங்களில் வங்கி வாடிக்கையாளர்களின் தவறே மோசடிக்குக் காரணமாக அமைந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அரசாங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றினல் விநியோகிக்கப்பட்ட காசோலையொன்றில் திருமதி இராசேந்திரா என்பதற்குப் பதில் திரு. இராசேந்திரா எனத் தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. அதைத் திருத்தம் செய்யும்போது 'திருமதி' என்ற சொல்லை மட்டும் வெட்டி அதற்கு மேலே 'திரு' என எழுதி, அத்திருத்தத்திற்கு இரண்டு கையொப்பங்களும் இடப்பட்டன. அது மோசடி செய்பவருக்கு மிகவும் வசதியாக அமைந்தது. இராசேந்திரா என்ற பெயர் முழுதாக வெட்டப்பட்டு 'திரு' என்ற சொல்லுக்கு அருகில் இராசரத்தினம் என்ற பெயர் எழுதப்பட்டு மோசடி செய்யப்பட்டது.

வேறொரு ஸ்தாபனத்தினல் விநியோகிக்கப்பட்டகாசோலையில் ஆயிரம் ரூபாய் பதினுராயிரமாக மாற்றப்பட்டு வங்கியில் பணம் பெறப்பட்டது. இலக்கத்தில் தொகை எழுதும்போது இலக்கங்களுக்கிடையில் இடைவெளி விடுவதால் இப்படியான மாற்றங்கள் இலகுவில் செய்ய முடிகின்றது.

காசோலைப் புத்தகங்களைப் போதிய பாதுகாப்பின்றி வைப்பதாலும் மோசடிகள் நிகழ்கின்றன.

கொழும்பில் உள்ள திணைக்களம் ஒன்றில் திருடப்பட்ட வெற்றுக் காசோலை, அத்திணைக்களத்தின் முத்திரை அடிக்கப்பட்டு, கணக்காளரினதும், உதவிக் கணக்காளரினதும் கையொப்பங்கள் களவாக இடப்பட்டு ஒரு லட்சம் ரூபாய்க்குக் காசோலை எழுதப்பட்டது. கொழும்பு கோட்டையில் உள்ள வர்த்தக நிறுவனத்திற்கு லொறியில் சென்ற மோசடிக்காரர்கள் அக்காசோலையைக் கொடுத்து கட்டிடப் பொருட்கள் வாங்கினர்கள். பொருட்கள் லொறியில் ஏற்றப்படும்போது அங்கு அத்திணைக்களத்தைச் சார்ந்த அதிகாரி வேறு அலுவலாக வரவே, மோசடிக்காரர்கள், லொறியுடன் தலைமறைவாகிவிட்டனர்.

காசோலைகளைத் தொலைப்பது இப்போது சர்வசாதாரண நிகழ்ச்சியாய் விட்டது. ரூபாய் நோட்டின் மீது வைத்திருக்கும் கவனமும் அவதானமும் காசோலையில் வைத்திருப்பதில்லை.

ஒரு அரசாங்க ஊழியர் வெள்ளிக்கிழமை சம்பளக் காசோலையைப் பெற்று, அதை மாற்றுவதற்காக பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குப் போகும் வழியில் தொலைத்து விட்டார். அவர் உடனடியாகக் காசோலை இலக்கத்தை வங்கிக்கு அறிவித்திருக்க வேண்டும். அதைச் செய்யத்தவறிவிட்டார். அவர் திங்கட்கிழமை தனதுகாரியாலயத்திற்கு அறிவித்து காரியாலயம் மூலமாக வங்கிக்கு அறிவித்தல் கிடைக்குமுன் அக்காசோலை மாற்றப்பட்டுவிட்டது.

கடந்த சில வருடங்களாக வர்த்தக ஸ்தாபனங்கள் வங்கிபோல் செயல்பட்டுக் காசோலைகளை மாற்றிக் கொடுக்கின்றன. காசோலைக்கு உரியவர் யார் என்பதை உறுதிப்படுத்தாது பல காசோலைகள் மாற்றிக் கொடுக்கப் பட்டுள்ளன. இதனுல் திருடப்பட்ட, தவறவிடப்பட்ட பல காசோலைகள் வர்த்தக ஸ்தாபனங்களால் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. காசோலையை மாற்றிக் கொடுக்குமுன் அக்காசோலையைச் சமர்ப்பிப்பவர்தான் அதற்கு உரிமையாளரா என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்வது மிகவும் அவசியமாகும்.

**இப்புதியகாசோலைகளில் காணப்படும் குறியீட்டு இலக்கங்கள் காந்தசக்தி உடைய மையினுல் அச்சிடப்பட்டுள்ளன.**

தற்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள புதிய M. I. C. R காசோலைகளில் மோசடி இடம்பெறும் சாத்தியக் கூறு இல்லையெனினும், வாடிக்கையாளர்கள் அவதானத்துடனும், விழிப்புணர்ச்சியுடனும் இருப்பது நன்று. ★

## அற்பருக்கு உதவக்கூடாது

ஒரு காட்டில் வாழ்ந்து வந்த ஓநாய் ஒருநாள் வன விலங்கு ஒன்றை அடித்துக் கொன்றது.

அந்த விலங்கை ஓநாய் ஆவலோடும் அவசர அவசரமாகவும் உண்டதால் ஒரு பெரிய எலும்பு அதன் தொண்டைக்குள் மாட்டிக் கொண்டு விட்டது.

தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்பை வெளியே எடுக்க ஓநாய் என்னென்னவோ முயற்சிகளை எல்லாம் செய்தது. இயலவில்லை.

எலும்பு தொண்டைக்குள் குத்திக் குத்தி அதிக வேதனையை உண்டாக்கியது.

எலும்பை உடனடியாகத் தொண்டைக்குள்ளிருந்து எடுக்காவிட்டால் தன் உயிரே போய் விடுமோ என்ற அச்சமும் ஓநாய்க்கு ஏற்பட்டது.

கண்முன் தென்பட்ட விலங்குகளையெல்லாம் பார்த்து ''நண்பர்களே! என் தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்பைத்தயவு செய்து எடுத்து விடுங்கள். நான் விலை உயர்ந்த பரிசைத் தருகிறேன்'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

''துஷ்டனுன உனக்கு உதவி செய்தால் உன்னுல் எங்களுக்குத் தீங்கு தான் விளையும். அதனுல் உனக்கு உதவமாட்டோம் எனக் கூறி விட்டு விலங்குகள் யாவும் தத்தம் வழியே சென்றன.

கடைசியாக ஒரு நாரை ஒரு குளத்தில் நின்று மீனைப்பிடித்துத் தின்றுகொண்டிருப்பதை ஓநாய் கண்டது.

நாரையை நெருங்கி 'ஆருயிர் நண்பர் நாரையாரே, உன்னைப் பணிவுடன் வணங்குகின்றேன். என்தொண்டையில் ஒரு பெரிய எலும்பு மாட்டிக் கொண்டுவிட்டது. அது எனக்கு பிராண வேதனையைத்தருகின்றது. தயவு செய்து என் தொண்டையிலுள்ள எலும்பை எடுத்து எனக்கு உதவி செய்தால் உனக்கு விலைமதிப்புள்ள உயர்ந்த பொருளொன்றைப் பரிசாகத்தருகின்றேன்'' என்று ஓநாய் கூறிற்று.

நாரை சற்று இரக்க குணம் படைத்ததாக இருந்தது. அத்துடன் ஓநாய் உயர்ந்த பரிசுப் பொருள் ஒன்றைத் தருவதாகவும் கூறுவதால் ஓநாய்க்கு உதவி செய்யலாம் என்று தீர்மானித்தது.

ஓநாய் கழுத்துப் பகுதியை உயர்த்தி வாயை அகலமாகத் திறந்து கொண்டது.

நாரை தன் நீளமான அலகை ஓநாயின் வாய் வழியாக அதன் தொண்டைக்குள் செலுத்தி உள்ளே சிக்கிக்கொண்ட எலும்பை மிகவும் ஜாக்கிரதையாக வெளியே எடுத்து விட்டது.

ஓநாய் நாரைக்கு எந்தப் பரிசும் தரவில்லை. ஒரு நன்றிச்சொல் கூடச் சொல்லவில்லை.

தன் வழியே போகத் தொடங்கியது.

''என்ன ஓநாயாரே ஏதோ பரிசு கொடுப்பதாக கூறினீர். ஒன்றுமே தராமல் போகிறீரே'' என நாரை கேட்டது.

ஓநாய் கோபத்துடன் நாரையை நோக்கி 'மதிகெட்ட நாரையே! வாயை மூடு. என் வாய்க்குள் உன் தலையை விட்டிருந்தபோது உன்னைக் கடிக்காமல் விட்டேனே இதைவிட உனக்கு வேறு பரிசு வேண்டுமா? மரியாதையாக இந்த இடத்தை விட்டு ஓடிவிடு. இல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்''என மிரட்டியது.

உயிர் பிழைத்தால் போதும் என நாரை அந்த இடத்தைவிட்டுப் பறந்தோடி விட்டது.

ஒருவருக்கு உதவி செய்யுமுன் அவர்கள் எப்படிப்பட்ட குண இயல்பு படைத்தவர்கள் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். அற்பர்களுக்கு உதவி செய்தால் அவர்களால் தொல்லையும் தொந்தரவுகளுந் தான் ஏற்படும். ★

தயாரிப்பு:-
**'ஸ்ரீ'**

## முயன்று பாருங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச 1 | | 2 | | 3 | 4 |
| | ★ | | ★ | 5 | |
| 6 | | | ★ | 7 | த் |
| | ★ | 8 | 9 | | |
| 10 | ன | | | ★ | ★ |

### இடமிருந்துவலம்

1. முருகனுக்குரிய மந்திரம்
5. இதோடு''ம்''சேர்ந்தால் சாறு
6. கைதிகளை இது செய்தல் வேண்டும்.
7. இதோடு ''இ'' சேர்ந்தால் நெருப்பு வரும்.
8. வானில் தவழ்ந்து வருவது
10. பெண்களிடம் இது அதிகம் காணப்படும்.

### மேலிருந்துகீழ்

1. சூரனை இது செய்யவே முருகன் உதித்தார்,
2. இங்கே வரம்புகளும் உண்டு. வீசும் காற்றும் உண்டு.
3. சந்ததி
4. கோபிகாஸ்திரீ இங்கு மாறி நிற்கிருள்.
6. உறைப்பு
8. அண்டம்
9. இதோடு ''டு'' சேர்ந்தால் கடலில் வாழும் ஒரு உயிரினம்.

**கடந்த வார சஞ்சீவியில் (22.8.87) பிரசுரமான முயன்று பாருங்கள் பகுதிக்கான விடைகள்.**

### இடமிருந்து வலம்

1. பந்தயம்
5. ஆவணி
6. சாலை
8. லய
9. வங்கம்
12. கலாசாரம்

### மேலிருந்து கீழ்

1. பஞ்சாங்கம்
2. தனி
3. வலயம்
4. ஆயம்
7. வலை
10. கதீசா
11. கலை

சிறுவர் சிட்டா

## சிரிப்பு

ராஜா:- அந்த ஆட்டின் மீது எறிந்த ஷெல் என்னவாயிருக்கும்?

ராஜேஸ்:- 'ஆட்டிலெறி ஷெல்' -

- திலீபன் -

சர்வர்:- பாணுக்கு ஏற்ற கறி யாது?

விருந்தாளி;- பேக் 'கறி'

அப்பு:- மகனே துபாயிலிருந்து எனக்கு என்ன கொணர்ந்தாய்?

சுப்பு:- துவாய் அப்பு

-அன்ரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பது வயதில் ஒரு மேதை



ஒன்பது வயதில் ஒரு மேதை;

பிரிட்டனில் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை நிகழ்த்தியுள்ளான்.

ஜோன் அடம்ஸ் அவனின் பெயர். எடுத்த பாடம் தூயகணிதம்.

இக்குறைந்த வயதில் இப்பரீட்சையில் சித்தியெய்திய மாணவன் பிரிட்டனில் மட்டுமல்ல உலகிலேயே இவன் ஒருவனே.

சித்தி எய்திய பின்னர் சென்ற 20 ஆம் திகதி பிரிட்டிஷ் விஞ்ஞான மியூசியத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை அடம்ஸ் நடத்தினான்.

அஸோஸியேட்டட் பரீட்சை சபை இந்த மாநாட்டை ஒழுங்கு செய்தது.

மாநாட்டில் வைத்துத்தான் பரீட்சை முடிவுகள் அடங்கிய தபாலை அடம்ஸ் திறந்தான்.

தந்தை கென் அடம்ஸ் 47 வயது. அவரும் தூய கணித ஆசிரியர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சையில் பிரயோக கணிதப் பாடத்தை அடம்ஸ் எடுக்க இருக்கின்றார்.

13 வயதில் அடம்ஸ் ஒக்ஸ்போர்டில் படிப்பான் — இப்படித் தந்தை கூறுகின்றார்.

லீசெட்ஷயரில் மெல்டன் மௌபிரே கல்லூரியில் ஜி. சி. ஈ. 'ஏ' பரீட்சையை அடம்ஸ் எடுத்தான்.

பரீட்சார்த்திகளுக்குப் போடப்பட்டிருந்த பெரிய மேசையும் கதிரையும் அடம்ஸுக்கு ஒத்துவரவில்லை.

சிறிய கதிரையும் மேசையும் அடம்ஸுக்கு வழங்கப்பட்டது.

முதலாவது வினாத்தாள் இலகுவானதாகக் காணப்பட்டது.

கொடுக்கப்பட்ட நேரத்துக்கு 40 நிமிடங்கள் முன்னதாகவே மறுமொழி எழுதிவிட்டு பரீட்சை மண்டபத்தைவிட்டு அடம்ஸ் வெளியேறினான்.

இரண்டாவது வினாத்தாள் கடுமையானதாக இருந்தும் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் மறுமொழி எழுதிக் கொடுத்தான்.

ஜோன் அடம்ஸ் சொன்னான்:

வினாத்தாள்கள் கடுமையானதாக இல்லை. வினாக்களுக்கு விடை காணுவது சுவாரஸ்யமானதாக இருந்தது.

அடம்ஸின் தாய் சொன்னார்:

தூயகணிதத்துடன் விளையாட விரும்புகின்றானா படிக்க விரும்புகின்றானா என்பதை அடம்ஸினால் தீர்மானிக்க முடியாது.

படிக்க உட்கார்ந்ததும் மணித்தியாலக் கணக்கில் அதனுடனேயே ஊறிவிடுகின்றான்.

உங்கள் இலட்சியம் என்ன? — இப்படிச் செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

''நான் ஒரு உதைபந்தாட்ட வீரராக விரும்புகின்றேன்'' — இப்படிக் கூறினான் ஒன்பது வயது மேதை கண்ணைச் சிமிட்டியபடியே.

- ரத்தி -

யாழ்ப்பாணத்தில்

# கூடைப்பந்தாட்டம் வளராமைக்கு பயிற்சியாளர் இல்லாமை காரணம்

இலங்கையில் மக்கள் மத்தியில் பிரபல்யமான ஆட்டங்களில் கூடைப்பந்தாட்டமும் ஒன்று. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் போதிய அளவு வசதிகள் இல்லாதன் காரணமாகவோ என்னவோ கூடைப்பந்தாட்டம் அவ்வளவு பிரபல்யம் அடையவில்லை.

இலங்கை கூடைப்பந்தாட்ட சரித்திரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு நிலையான அசைக்கமுடியாத பெயர் உண்டு. மட்டக்களப்பு சென் மைக்கல்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட வீரர்களைத் தோற்றுவிப்பதில் முன்னணியில் உள்ளது.

இலங்கையில் நடைபெறும் முதல் தர கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் எல்லாம் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியானால் சென் மைக்கல்ஸ் கல்லூரி கோஷ்டியும், கழகங்களுக்கிடையிலான போட்டியானால் மைக்கல் மன் கோஷ்டியும், மாகாணங்களுக்கிடையிலான போட்டியானால் கிழக்கு மாகாண கோஷ்டியும் பிரகாசிப்பது வழக்கம். இந்தக் கோஷ்டியின் வீரர்கள் எல்லாம் சென் மைக்கல்ஸ் கல்லூரியின் தோற்றுவிப்புகளே.

இவர்களின் பெருமையை இதற்கு மேல் சொல்வதானால் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதி ஆட்டமொன்றில் சென் மைக்கல்ஸ் கல்லூரி வீரர்கள் தமக்குள்ளேயே மோதிக்கொண்டனர். அதாவது இறுதிப் போட்டியில் கொழும்பு மகாராஜா ஸ்தாபன அணியும் மைக்கல் மன் அணியும் மோதிய போது ஆட்டத்தில் கலந்துகொண்ட ஆட்டக்காரர்கள் யாவரும் சென் மைக்கல்ஸ் கல்லூரி பழைய மாணவர்களே.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் கூடைப்பந்தாட்டம் அவ்வளவாக வளராமைக்கான காரணங்களில் ஒன்று பயிற்சியாளர்கள் பற்றாக்குறையே.

இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படவுள்ளது. கொழும்பில் புகழ் பெற்ற தேசிய கூடைப்

விளையாட்டு விமர்சனம்

பந்தாட்ட பயிற்சியாளர்களில் ஒருவரும் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரருமான ராம் சுந்தரலிங்கம் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரின் சேவையை யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களும், பாடசாலைகளும் நன்கு பயன்படுத்தி சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்களை சர்வதேச தரத்தில் உருவாக்க முன்வரவேண்டும்.



ராம் சுந்தரலிங்கம்

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவரான ராம் சுந்தரலிங்கம் கூடைப்பந்தாட்ட வீரர் மட்டுமன்றி ஒரு சிறந்த விளையாட்டு வீரரும் ஆவார்.

தனது பாடசாலைக் காலத்திலே பாடசாலைக் கிரிக்கெட், உதைபந்தாட்ட கல்லூரி விளையாட்டு வீரர் குழுக்களுக்குத் தலைமை வகித்தவர் இவர். தலைமை வகித்த யாழ் மத்திய கல்லூரி கிரிக்கெட் அணி அந்த வருடத்தில் யாழ்ப்பாணத்தில் முக்கிய கிரிக்கெட் மோதலாகக் கருதப்படும் சென் ஜோன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் அணியை வெற்றிகொண்டது. இவரின் திறமையான தலைமைக்குச் சான்று.

சென்னையில் தனது கல்வியைத் தொடரச் சென்ற இவர் அங்கும் தனது திறமையினால் எல்லாவகை விளையாட்டுப் போட்டிகளிலும் முன்னணி வகித்தார். 1955 ஆம் ஆண்டு இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உயரம் பாய்தல் போட்டியில் அகில இந்திய ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றார். சென்னை பல்கலைக்கழக விளையாட்டு அணிக்கும் தலைமை வகித்தார்.

1958 ஆம் ஆண்டு இலங்கைக் கூடைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கைக் குழுவில் பிரதிநிதித்துவம் வகித்தார்.

1956 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்திலும், இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்திலும் தேசிய பயிற்சியாளராக இருந்து வந்த இவர் தற்போது நிரந்தரமாக யாழ் நகர் திரும்பியுள்ளார்:

ராம் சுந்தரலிங்கம் இவ்வாரம் பல்கலைக்கழகத்தில் கூடைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார். இந்த பயிற்சி முகாமில் அனேகமான கூடைப்பந்தாட்ட வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தீவுப்பகுதியில் கூடைப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இன்று சனிக்கிழமையும் ஒரு பயிற்சி முகாமை நடத்தவுள்ளார். இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்த பயிற்சி முகாமில் பல இளம் வீரர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஈசன் -

அகில இலங்கை ரீதியில் பல திறமையான வீரர்களை உருவாக்கிய இவருக்கு இங்கு போதிய ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கப்படுமானால் யாழ்ப்பாணத்திலும் சர்வதேச ரீதியில் ஆடக்கூடிய பல கூடைப்பந்தாட்ட வீரர்களை உருவாக்கித் தருவார் என்பதில் ஐயமேதுமில்லை. ★

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## மின்சக்தி உருவாக்கம்

அடர்ந்த பனி படர்ந்த வட துருவப்பகுதியில் நிலவுகின்ற வெப்பநிலை வித்தியாசத்தைக் கொண்டு மின்சக்தியை உருவாக்கும் முயற்சியில் ரஷ்ய விஞ்ஞானிகள் வெற்றி கண்டிருக்கிறார்கள். கடும் குளிர்காலத்தில் வடதுருவத்தின் வளிவெப்பநிலை 25 பாகை செல்ஸியஸாக இருக்கும். அதே வேளை அங்குள்ள கடற்பகுதியில் 200 மீற்றர் ஆழத்தில் உள்ள நீரின் வெப்பநிலை 2 பாகை செல்ஸியஸாக இருக்கும். இந்த வெப்பநிலை வேறுபாட்டைக் கொண்டுதான் மின்சக்தி உருவாக்கப்படுகிறது. ★

## மதுபோதையும் விபத்தும்

மனித உயிர்களைப் பலிகொள்ளும் சுமார் 50 ஆயிரம் வீதி விபத்துக்கள் அமெரிக்காவில் வருடந்தோறும் நிகழுகின்றன. இவற்றில் அரைவாசிக்கு மேற்பட்டவை குடிபோதையினால் ஏற்படுபவை என்று புள்ளிவிவரங்களில் இருந்து தெரியவந்திருக்கிறது.

அங்கு 40 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்திற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று குடிபோதையினால் ஏற்படும் விபத்துக்கள் என்றும் அவற்றில் 35 சதவீதமானவற்றுக்கு 16 தொடக்கம் 24 வயது வரையுள்ள இளம்வட்டங்களே பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது. ★

தயாரிப்பு: வித்தி

## மாயமாய் மறைந்த பாகிஸ்தானியர்

இந்திய மத்திய அரசின் புள்ளிவிவரங்களின்படி பாஸ்போர்ட், விஸா ஆகியவை சகிதம் இந்திய நாட்டிற்குள் புகுந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் பாகிஸ்தானியரைப்பற்றி தகவல் ஏதும் இல்லை. அவர்கள் இந்தியாவை விட்டு புறப்படாமலேயே நாட்டுக்குள் காணமல் போய்விட்டார்கள். இவர்கள் அனைவரும் நாட்டின் பல மூலைமுடுக்குகளில் இந்தியப் பிரஜைகள் வேடத்தில் கள்ளமாகக் குடியேறிவிட்டார்களாம். ★

## குழந்தைகள் பற்றி...

★ நிமிடத்திற்குப் பத்துக் குழந்தைகள் —

தினமும் சுமார் 14 ஆயிரத்து 500 குழந்தைகள் - ஆறு உயிர்க்கொல்லி நோய்களுக்குப் பலியாகின்றன. தட்டம்மை, தொண்டைக்கரப்பன், கக்குவான் இருமல், ஏற்புநோய், போலியோ, காசநோய் ஆகியவை அந்த உயிர்க்கொல்லிகள்.

இந்நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 8 லட்சம் குழந்தைகள் சாவிலிருந்து காப்பாற்றப்படுகின்றன.

## உயிர்ச்சத்து 'சி'

உயிர்ச்சத்து 'சி' ஒரு மருந்தல்ல. ஆனால் தசைத் தொழிற்பாடுகளுக்கு அது அவசியமானது. 10 கிலோ மீற்றர் தூரம் ஓடும்போது உடல் அதனுடைய விற்றமின் சேமிப்பில் 21 தொடக்கம் 37 வீதத்தை இழந்துவிடுகிறதாம். ★

## பாரிய இதயம்

உலகில் உள்ள ஜீவராசிகளிலேயே ஒட்டைச்சிவிங்கியின் இதயம்தான் மிகப்பெரியது! இதன் இதயம் இரண்டடி நீளம் உள்ளது. இதயத்தின் சுவர்கள் மூன்று அங்குல கனமுள்ளவை. இவ்வளவு பெரிய இதயம் இருப்பதால்தான் அதன் நீண்ட கழுத்துக்கு இரத்தத்தை ஏற்ற 'பம்ப்' செய்ய முடிகிறது. ★

## 'செஞ்சுரி' கண்டவர்கள்

ஜப்பானில் ஆண்களின் சராசரி வாழ்க்கைக் காலம் 75 வருடம். பெண்களின் சராசரி வயது 81. மொத்தத்தில் கிழவன், கிழவிகள் நிறைந்த நாடு ஜப்பான்தான்.

அண்மையில் எடுத்த கணக்கெடுப்பு ஒன்றின்படி ஜப்பானில் நூறு வயதைத் தாண்டி 'செஞ்சுரி' போட்டவர்கள் 1740பேர் இருக்கிறார்கள். இவர்களில் 359 பேர் மட்டுமே ஆண்கள். மிகுதி 1381 பேர் பெண்கள். ★

## ஜப்பானில் அடிமைகள்

★ வறுமையால் வாடும் ஆசிய நாட்டுப் பெண்கள் சுமார் ஒரு லட்சம் பேர் ஜப்பானில் அடிமைத்தனமாக — பலவந்தமாக — பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

அதிக சம்பளம் தருவதாக ஆசை காட்டி இப்பெண்களை அழைத்துச் செல்லும் ஏஜென்ஸிகள் அவர்களின் பாஸ்போர்ட்டை ஒளித்து வைத்துவிட்டு காபரே ஆடவும், இரவுக் கேளிக்கை விடுதிகள், பார்கள் போன்றவற்றில் வேலை செய்யவும் பலவந்தப்படுத்துகின்றார்களாம். ★

## ஈரலின் சிறப்பு

★ உடலின் முக்கிய உறுப்பு இருதயம் அல்லது மூளை என்று நினைக்கிறீர்களா?

அப்படியில்லை. இவை சிக்கலான அமைப்புகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் முக்கியமான உறுப்பு ஈரல்தான்.

இந்தச் சின்ன உறுப்பு செய்வது போல பல தொழில்களை வேறு உறுப்புக்கள் செய்வதில்லை.

ஈரலில் சுமார் நூறு உடற்றொழிற்பாடுகள் நிலவுகின்றன. சுமார் ஐநூறு [illegible] விக்கப்படுகின்றன.

ஒரு வகையில் இது [illegible] இரசாயன தொழிற்சாலைதான்! ★

# அரசியல் விமர்சனத் துறையில் முத்திரை பதித்த ரெட்டி

சர்வதேச அரசியல் விவகாரங்களில் ஆழ்ந்த அறிவும், அரசியல் ஞானமும், பாரபட்சமின்றி விமர்சிக்கும் துணிவும், நுண்ணறிவும் கொண்ட இந்து நாளிதழின் அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி அவர்களின் திடீர் மறைவு பத்திரிகைத் துறைக்கு பேரிழப்பாகும்.

அவருடைய அரசியல் விமர்சனங்களும், கட்டுரைகளும் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியதாக இருக்கும். தனது கருத்துக்களை வாசகர்களுக்கு எடுத்துரைக்கும் முறையில் அவரது தனித்தன்மை துலங்கும். விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளும் விடயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளையும் காரணிகளையும், அலசி ஆராய்ந்து, அவ்விடயத்தில் வாசகருக்குத் தெளிவு ஏற்படும் வகையிலும், உண்மை நிலையை சிந்திக்க வைக்கும் வகையிலும் அவர் கருத்துக்கள் அமைந்திருக்கும்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் எல்லா நாடுகளிலும் அவருடைய விமர்சனங்களும், அரசியல் கட்டுரைகளும் பெரும் மதிப்பையும், வரவேற்பையும் பெற்றுள்ளன.

அவரது மறைவையொட்டி இந்தியாவுக்கான சீனத்தூதர் தனது அஞ்சலி உரையில்' திரு. ரெட்டி சீனாவின் நெடுங்கால நண்பன் என்றும், சீன இந்திய உறவுகள் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளைத் தான் மதிப்புடன் படித்து வந்ததாகவும் கூறினார்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 64 வயதுடைய திரு. ரெட்டி நியூயோர்க்கில் சிகிச்சை [illegible] அவருக்கு இரண்டு புதல்வர்கள் உண்டு.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர் காட்டிய ஈடுபாடும், பிரச்சினையை ஆரம்பம் முதல் அலசி ஆராய்ந்து அவர் தொடர்ந்து வெளியிட்ட கட்டுரைகளும், விமர்சனங்களும் இப்பிரச்சினை பற்றி தெளிவற்ற நிலையில் இருந்த பல இந்தியருக்கும், வெளிநாட்டவர்களுக்கும் உண்மையான நிலையை எடுத்துக்காட்டுவனவாக அமைந்தன.

தமிழர் பிரச்சினையில் வெவ்வேறு கால கட்டங்களில் எதிர்பாராத திருப்புமுனைகள் ஏற்பட்டபோதெல்லாம் திரு. ரெட்டி இந்தியாவின் அணுகுமுறையை கடுமையாக விமர்சித்து எழுதியது மட்டுமன்றி, இப்பிரச்சினையை இந்தியா எவ்விதம் கையாள வேண்டும் என்றும் துணிவுடன் கருத்துத் தெரிவித்தார்.

இந்துப் பத்திரிகையில் 1969 இல் பணியாற்றத் தொடங்கிய திரு. ரெட்டி கடின உழைப்பாலும், திட்டமிட்ட செயற்பாடுகளாலும், எதையும் தெளிவாகவும், துணிவாகவும் எடுத்துரைக்கும் ஆற்றலாலும் பத்திரிகைத் துறையைச்சார்ந்த சகலராலும் மதிக்கப்பட்டதுமன்றி, அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்.

தான் கடமையாற்றும் ஸ்தாபனத்திற்கு விசுவாசமாக இருந்தது மட்டுமன்றி, தான் செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்துச் செயல்பட்டார். பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுடனும் துணிவுடனும், அதே நேரத்தில், தன் செயற்பாடுகளினால்தான் கடமையாற்றும் ஸ்தாபனமோ, பிறரோ பாதிக்கப்படாத வகையில் இராஜதந்திரத்துடன் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு. ரெட்டியின் அரசியல் அறிவும், ஆற்றலும், மற்றவர்களுடன் பழகும் இனிய தன்மையும், பல நாடுகளின் இராஜதந்திரிகளின் உறவையும், நன் மதிப்பையும் பெற்றுக் கொடுத்தன. வெளிநாட்டுத் தூதர்களின், உறவையும், அன்பையும் மதித்துப் பேணி வந்துள்ளார்.

செய்திகளை வெளியிடும் முறையும், விமர்சனங்களைக் கையாளும் வழிமுறையும் மிகவும் சிறப்பானதாகும். அரசாங்கத்தைசார்ந்தவர்களும், மற்றும் பிற அரசியல்வாதிகளும், இவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாவிடினும், இவர் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர்.

சர்வதேச அரசியல் பிரமுகர்கள் திரு. ரெட்டியின் கருத்துக்களை ஆர்வமுடன் படித்தார்கள். அமெரிக்கா, ஐரோப்பா, சீனா போன்ற நாடுகளில் ரெட்டியின் விமர்சனங்கள் மக்களைக் கவர்ந்தன.

சர்வதேச அரசியல் நிலைமை பற்றியும் இந்திய சீன உறவுகள் பற்றியும் 1982 அக்டோபர் மாதம் சீனப்பிரதமர் சியாங் திரு. ரெட்டியுடன் நீண்ட சம்பாஷணை நடத்தினார்.

இந்தியாவின் அரசியல் நிலைப்பாட்டினையும், அவ்வப்போது ஏற்படும் அரசியல் மாற்றங்களையும் மிக உன்னிப்பாகக் கவனித்து, குறை நிறைகளை விரிவாக ஆராய்ந்து விமர்சிப்பது இவர் வழக்கம். ஒரு பிரச்சினை எழும்போது ''ரெட்டி என்ன சொல்கிறார்'' என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் அளவிற்கு, அவரின் விமர்சனத் தரமும், திறனும் அமைந்திருந்தன.

இந்திய அரசியலில் சகல தலைவர்களுடைய செயல்பாடுகளையும், அவதானித்து பாரபட்சமின்றிக் கருத்துக்கள் வெளியிட்டு, அதன்மூலம் பல திருத்தங்களையும், நிவர்த்திகளையும் தோற்றுவிக்கக் காரணமாகவும் இருந்தார். தென் இந்திய அரசியலில் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டு, விமர்சனங்களிலும், கட்டுரைகளிலும் தெரிவித்த கருத்துக்கள் சமுதாய மட்டத்திலும், அரசியல் மட்டத்திலும், சீர்திருத்தங்களைத் தோற்றுவிக்க உதவின.

திரு. ரெட்டி வெளிநாட்டு நிருபராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலத்தில் உலகில் பல நாடுகளுக்கும் விஜயம் செய்து செய்திகள் திரட்டினார்.

எகிப்து, ஈரான், கொரியா, சீனா போன்ற நாடுகளில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட போது துணிந்து அங்கு சென்று செய்திகள் திரட்டினார். நேருவின் சோவியத்யூனியன் விஜயத்தின் போதும், சீன விஜயத்தின் போதும் வெளிநாட்டு நிருபராகச் சென்று கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

திரு. ரெட்டியின் மறைவு பத்திரிகை உலகிற்கு மட்டுமன்றி, இந்தியாவிற்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தினால், உருவாகுமென எதிர்பார்க்கப்படும் அரசியல் மாற்றங்களைத் தெளிவுடனும், நிதானத்துடனும் விமர்சிப்பதற்கு திரு. ரெட்டி இல்லாதது பெரும் துர்அதிர்ஷ்டமாகும். ★

- வில்வம் பசுபதி -

## மார்பு..

(8ஆம் பக்கதொடர்ச்சி)

மிக நன்று.

நெஞ்சின் நடுவில் நோ தென்பட்டால், நெஞ்சு அடைப்பு ஏற்பட்டால் அதுவும் நெஞ்சு நோவுடன் வேர்த்துக் கஷ்டப்பட்டால் தாமதியாமல் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
சரஸ்வதி தோத்திரம்
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தி
இருப்பள் இங்கு வாராது இடர் [லுள்ளே
20 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பி சரஸ்வதி தோத்திரத்துடன் கூடிய
அழகிய ஒரு சரஸ்வதி ஸ்ரிக்கரைப்
பெற்றுக்கொள்ளலாம்.
**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

**சஞ்சீவி**

29 - 08 - 1987 சனிக்கிழமை

**மில்க்வைற் சகாய விற்பனை :**
04-09-87 தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவின் போது மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூபா 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு தேவாரம், அறிவு நூல்கள், வீட்டுத்தோட்ட விதைகள், பொலித்தின் பாக், உடன் அழகிய காயத்திரி ஸ்ரிக்கர் ஒன்றும் பரிசாக வழங்கப்படும். 'மில்க்வைற் மேலுறைகளை' சேகரித்து வைத்திருப்போர் அங்குகொடுத்து அவற்றிக்கான பரிசில்களையும் பெறலாம்.
**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

# மீண்டும் எரிமலையாகிறது திருமலை

## ஒப்பந்தத்துக்கு அது ஒரு கண்டமா?

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் சரியாக ஒரு மாதமாகிவிட்டது.

ஆயுதங்கள் முக்காற் பங்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில்—

அதிகாரப்பரவலாக்கல் பற்றி அரசு மட்டத்தில் கொழும்பு- புதுடில்லிக்கு இடையே பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதில் கலந்துகொள்ள பண்ருட்டியாரும் அவசரமாக புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்,

ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு ஏதுவாக கொழும்பில் போடப்பட்ட ஊரடங்கு, பின்னர் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது

ஒரு மாதம் கழித்து திருகோணமலையில் மட்டும் அந்த ஊரடங்கு அமுலில் இருக்கின்றது,

அமைதிப்படை வந்த பின்னரும் அமைதி தேடித் தவிக்கும் திருகோணமலைத் தமிழர், இலங்கை அரசியலில் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

### தமிழர் அரசியலில் திருமலை

தமிழர் அரசியல், உரிமைப் போராட்டத்தில் திருகோணமலை முதலிடம் வகிக்கின்றது.

நாடு சுதந்திரம்பெற்ற காலம் முதல் திருகோணமலைத் தமிழர் அரசியல் கட்சிப் பிரதிநிதியையே நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வந்தது.

1947, தமிழ்க் காங்கிரஸ் கொடி கட்டிப் பறந்த காலம்.

திருகோணமலைத் தொகுதி 1947 தேர்தலில் காங்கிரஸ் எம்.பியைத் தெரிவுசெய்தது. அவர்தான் திரு. சு. சிவபாலன்

காங்கிரஸுடன் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்த தமிழ்த் தலைவர்கள் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தனர். 1949இல் தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது கட்சியின் முதல் மாநாடே திருமலையில்தான் நடந்தது.

1952 பொதுத்தேர்தல் வந்தது. திருகோணமலைத் தொகுதி மக்கள் முதலாவது தமிழரசுக் கட்சி எம். பியைத் தெரிவு செய்தனர்.

அவர் திரு. ந. இ. இராஜவரோதயம் ஆவார். அன்று தொடக்கம் இன்றுவரை தமிழரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களைத்தான் திருகோணமலைத் தமிழர்கள் தெரிவுசெய்து வந்தனர்.

தமிழர் மத்தியில் இயங்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடிய ஓர் அமைப்பை உருவாக்கியது திருகோணமலையில் தான் அந்த அமைப்புத்

**உள்ளும் புறமும் — குறுமுனி**

தான் தமிழர் விடுதலைக் கூட்டணி!

தமிழர் தலைநகரம் என்று மேடை தோறும் 30 ஆண்டுகளாக தமிழர் சொல்லச் சொல்ல திருமலைத் தமிழ் மண் பறி போனது.

இப்போது எஞ்சிய மண்ணில் நின்று தமிழர் போராடுகின்றனர்.

இக்கட்டத்தில்...

தமிழ் உரிமைப் போரில் திருமலை, பல களங்களைச் சந்தித்துள்ளது.

தமிழர் பலர் உயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

இன்னும் அர்ப்பணித்துக்கொண்டு இருக்கின்றனர்.

பேரினவாதத்தின் சீற்றத்துக்கு அடிக்கடி ஆளாகி வருபவர்கள் திருகோணமலைத் தமிழரே.

சுதந்திர தினத்தில் கறுப்புக்கொடி கட்டித் துக்க தினமாகக் கொண்டாடத் தொடங்கிய காலம்

திருகோணமலை மணிக்கூண்டுக் கோபுரத்திலே கறுப்புக்கொடி 1957இல் பறக்கவிடப்பட்டது. அப்போது உயிரிழந்தான் தியாகி நடராசன்.

இன்றும் அந்த மணிக்கூண்டுக் கோபுரப் பகுதி தமிழர் நடமாட முடியாத இடமாகத்தான் இருந்து வருகின்றது.

இந்திய அமைதிப் படைக்கே கல்லால் எறியும் பகுதியாக மாறியும் விட்டது.

சமஷ்டி ஆட்சி கோரி நடத்தப்பட்டது திருமலை யாத்திரை இறுதியில் திருமலையில் வைத்தே அப்போதைய அரசுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டது.

### தர்மிஷ்டரும் குளக்கோட்டனும்

1982இல் திருகோணமலையில் பிரிமா மா ஆலை திறந்துவைக்கப்பட்டது. மலை ஒன்றை உடைத்து நிர்மாணிக்கப்பட்ட மா ஆலை இது.

சிங்கப்பூரைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் பிரிமா கம்பனி நடத்துகின்றது. அனைவரும் சீனர்கள்.

தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய ஆலை, திருமலை ஆலைதான். 13 மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டது.

இந்த ஆலையை ஜனாதிபதியே திறந்துவைத்தார் (திறப்பு விழாவுக்கு குறுமுனியும் சென்று இருந்தார்.)

ஆலையைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி, தனது உரையின் முடிவில் குளக்கோட்டனின் கல்வெட்டுப் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

''...அந்தக் கல்வெட்டில் திருகோணமலையைப் பூனைக்கண் உள்ளவன் ஆள்வான் என்று கூறப்பட்டுள்ளது இன்றுடன் அந்தக் கல்வெட்டின் தீர்க்கதரிசனம் உண்மையாகிவிட்டது'' —இப்படிக் கூறிய ஜனாதிபதி, ஆலை நிர்வாக இயக்குநர் திரு. லின் என்பவரைப் பார்த்துப் புன்னகைத்தார்.

கல்வெட்டுத் தீர்க்கதரிசனம் இப்படிக் கழிந்துவிட்டால்போதும் என்று எண்ணி அவர் அப்படிச் சொன்னாரோ என்னவோ தெரியவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் அக்கல்வெட்டில் காணப்படும் கடைசிவரியான 'தானே வடுகாய்விடுமே'' —என்பது பற்றி என்ன சொல்வாரோ?

### திருமலையும் ஒப்பந்தங்களும்

1957 திருமலை மாநாட்டில் வைத்து விடுக்கப்பட்ட காலக்கெடுவைத் தொடர்ந்தே பண்டா—செல்வா ஒப்பந்தம் உருவானது.

திருமலை யாத்திரையைத் தொடர்ந்து உருவான அந்த ஒப்பந்தம் கண்டி யாத்திரையைத் தொடர்ந்து கிழித்தெறியப்பட்டது தெரிந்த சங்கதி.

1965 தேர்தல் வந்தது. மட்டான ஆசனங்களுடன் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவியில் அமர்த்த முட்டுக்கொடுக்க வேண்டிய நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. அப்போது உருவானது டட்லி—செல்வா ஒப்பந்தம்.

இரகசிய ஒப்பந்தம் அது என்று சொல்லப்பட்டது. அமைச்சரானார் திருச்செல்வம்.

ஒப்பந்தம் மாவட்ட சபை முறையைக் கொண்டுவருவதாக இருந்தது.

இறுதியில் திருகோணமலை கோணேஸ்வராலய பிரதேசத்தைப் புனித நகராகப் பிரகடனஞ் செய்யும் பிரச்சினையில் தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறினார் அமைச்சர் திருச்செல்வம்.

எழுதப்பட்ட இந்த ஒப்பந்தங்களைவிட எழுதாத ஒப்பந்தங்களும் தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்டன.

1960 மார்ச் தேர்தலில் பதவிக்கு வந்த சிறுபான்மை ஐ. தே. க. அரசு மூன்று மாதங்களில் கவிழ்ந்துபோனது. 1960 ஜூலையில் இடைத் [illegible] வந்தது. அப்போது [illegible] 'எழுதாத ஒப்பந்தம்' ஒன்றை தமிழரசுக் கட்சியுடன் பேச்சால் செய்து கொண்டது, பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து 'எழுதாத ஒப்பந்தம்' காற்றிலே பறந்துபோனது.

1977 தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் 'எழுதாத உடன்பாடு' ஒன்றுக்கு வந்திருந்தன. ஆறில் ஐந்து பங்கு மெஜாரிட்டி அதையும் மறைத்துவிட்டது.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தொடங்கிய பின்னர் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய எண்ணம் அதிகார பீடத்துக்கு வந்தது. அதன் பலன்தான் மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம்.

அத்தேர்தலில் திருகோணமலையை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று தர்மிஷ்டர் கோஷ்டி மும்முரமாக நின்றது; நாடாளுமன்றத்தில் கூட்டணியினருடன் 'பந்தயமே' பிடித்தது. இதனால் மாவட்ட சபைத் தேர்தல் பிரசாரத்தை ஐ. தே. கட்சி, திருமலை மாவட்டத்திலேயே வைத்து அங்குரார்ப்பணஞ் செய்தது

சேருவிலவில் வைத்துத் தர்மிஷ்டர் சொன்னார்:-

''சிங்களவர் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பூமி திருகோணமலை. தமிழர் வந்தேறு குடிகள்''—என்று, இறுதியில் அபிவிருத்திச்சபை தலைவர் பதவியைத் தமிழர் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட அபிவிருத்திச் சபை வெறும் 'வட்டமாக' மாற்றப்பட்டது.

### இந்திய - இலங்கை ஒப்பந்தமும் திருமலையும்

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் உருவான சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒப்பந்தம் என்ற பாராட்டைப் பெற்றுள்ளது இலங்கை-இந்திய ஒப்பந்தம்

அமெரிக்காவும் பாராட்டுகின்றது சோவியத்தும் பாராட்டுகின்றது. இன்னும் நமது ரதமர் பாராட்டவில்லை

இந்திய ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி என்று கூட்டணிச் செயலதிபரும் பாராட்டி இருக்கின்றார்.

நோபல் பரிசுக்குக்கூட சிபார்சு செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் இரண்டு இடங்களில் திருகோணமலை என்ற வார்த்தை இடம் பெறுகின்றது.

இரண்டு தலைவர்களும் பரிமாறிக் கொண்ட கடிதங்களில் தான் 'திருகோணமலை' என்ற வார்த்தை இரண்டு இடங்களில் வருகின்றது. ஒன்று திருகோணமலைத் துறைமுகம் பற்றியது. மற்றது, திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் பற்றியது

சர்வதேசப் புகழ் பெற்ற ஒப்பந்தத்தில் இரண்டு இடங்களில் திருகோணமலை வருகின்றது என்றால் திருகோணமலைக்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இது என்று சொல்[illegible] பொருத்தம்.

சர்வதேசப் பார்வையில் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ள 'திருகோணமலை' பேரினவாதத்தின் பார்வையில் இருந்து தப்ப முடியுமா?

### மீன் இலச்சினையும் புலிக்கொடியும்

திருகோணமலைப் பிரெட்ரிக் கோட்டை நுழைவாயிலில் கருங்கற் தூணில் மீன்லச்சினை, பாண்டியனின் சின்னம், காணப்படுகின்றன.

இந்திய அமைதிப்படை வந்ததில் இருந்து புலிக்கொடியும் அங்கு பறக்க விடப்பட்டு வருகின்றது.

கொடி பறக்கவிடப்படுவதே போராட்டமாகிவிட்டது.

இலங்கை அரசுக்கு எதிரான சக்திகள் ஒப்பந்தத்தை முறியடிக்க திருமலையைக் களமாகப் பயன்படுத்தப்போகின்றதா என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

தமிழர் வீடுகள் மீது கிரனேட் வீச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சிங்கள மக்கள் பதற்றம் அடைந்துவிட்டனர் என்று கூறி, இந்திய அமைதிப் படையினரை முகாமுக்குள் 'அமைதி' யாக்கி விட்டனர்.

திருமலை எரிமலை ஆகிக் கொண்டிருக்கின்றது.

ஒப்பந்தங்களுக்குத் 'திருமலை' எப்போதும் ஒரு கண்டமாகவே இருந்து வருகின்றது

அந்தக் 'கண்ட'த்தை இந்திய-இலங்கை ஒப்பந்தம் தாண்டிவிடுமா?

இரண்டு நாடுகள் செய்து கொண்ட படியால் 'தாண்டி' விடும்: நம்புவோமாக!

## இசையின்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இசை நோன்பு நடத்தப்பட்டிருக்கிறது.

ஆதிகாலத்தில் வேதியர்கள் வேதம் ஓதி மழையை வரவழைத்தார்கள்; வேந்தர்கள் யாகங்களை நடத்தி வருண பகவானின் கடாட்சத்தைப் பெற்றார்கள்

விஞ்ஞானம் வளர்ந்த இக்காலத்திலும் இசையால்—நாதத்தால் நன்னெறி பரப்ப முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதனை ஒவ்வாதது என்று கூறுவதற்கில்லை.

ஆதியில் கைக்கொள்ளப்பட்ட பல நடைமுறைகள் விஞ்ஞானத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை மறந்துவிடலாகாது.

எங்கள் பிரதேசத்திலும் இசை உட்பட பல கலைகளும் வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும். அதனை ஈட்டுவதற்குக் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். இலைமறை காயாக இருப்போரை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்.

Special ! Special !!
எதிர்வரும் செப்ரெம்பர் 1ஆம் திகதி
தமது முதலாவது ஆண்டை
வெற்றிகரமாக நிறைவுசெய்யும்,
**R. S. R.**
**GREEN PEKING PALACE**
ஸ்தாபனத்தார்
* தொடர்ந்தும் தங்கள் தரமான சேவையை வழங்க மகிழ்வுடன் முன்வந்துள்ளனர்:-
* அன்பான உபசரிப்பு, நியாயமான விலை நிறைவான சேவை
இவற்றுடன்
* சுவைமிகுந்த CHINESE/EASTERN உணவுவகை, எல்லாவிதமான குளிர்பான, மதுபான வகைகளைப் பெற என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரே பெயர்
**R. S. R.**
**GREEN PEKING PALACE**
4th Cross Street, Jaffna.
(சின்னக்கடை Market முன்பாக)
* விழாக்கள், வைபவங்களுக்கான ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்

**88** Day Classes 07 09-87 (8-12 மணி)
Sat. Sun. Class's 5-09-87 (9 மணி)

**89** Sat. Sun. Classes 5-09-87 (8 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | :- திரு. | கிருஷ்ணனந்தன் |
| வர்த்தகம் | : ,, | லங்கா |
| கணக்கியல் | :- ,, | வன்னியசிங்கம் |
| அளவையியல் | :- ,, | சுப்பிரமணியம் |
| தமிழ் | :- ,, | குழந்தை |
| இந்து நாகரிகம் | :- ,, | சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | :- ,, | குணராசா |
| அரசியல் | :- ,, | மகிறாப் |

1. Day classes இந்நிறுவனத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.
2. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்,
3. மாணவர்கள் முன்கூட்டியே அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**தேவை**
**பாதுகாப்புக் காவலர்**
**(SECURITY GUARDS)**
இரண்டு பாதுகாப்புக் காவலர்கள் உடனடியாகத் தேவை. முன்னாள் படை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
விண்ணப்பிக்கவும்:
ஷப்ரு,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**பிரயாண ஒழுங்குகள்**
★ குவைத் KUWAIT
✶ இதுவரை காலமும் எதிர்பார்த்திருந்த
**"BES" KUWAIT**
பிரயாண ஒழுங்கு தயார் நிலையில் இருப்பதால் இது சம்பந்தமாக PASSPORT தந்து PRE SELECTION செய்தவர்களும் PASSPORT தந்துள்ளவர்களும் உடனடியாகச் சந்திக்கவும்.
HEAD OFFICE :
**Construction & Development Company Ltd.**
37, S. DE S. Jeyasinghe Mawatha,
NUGEGODA.
Licence No. 96
தொடர்பு :
**V. P பாலசுப்பிரமணியம்**
V. P. பாலா
c/o N. V. பொன்னுத்துரை
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## முக்கிய அறிவித்தல்

**தொழினுட்பக்கல்லூரி இறுதிப்பரீட்சை—1986/87**

(உயர் கல்வி அமைச்சு)

1987 யூலை மாதத்துடன் முடிவடைந்த கழ ஆண்டுக்கான பின்வரும் பயிற்சிநெறிகளுக்கான இறுதிப்பரீட்சைகள் 1987. 09. 04 தொடக்கம் 1987. 10. 23 வரை நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரப் பரீட்சை (செய்முறை) | —1987. 09. 04 — 1987. 09. 15 |
| 2. | சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரம் (அறிமுறை); தேசிய தொழில் கற்கைகளிலான வியாபார தராதரப் பத்திரம் தொழிற்பயிற்சி நெறிப்பரீட்சைகள் (தன்னியக்கப் பொறி. இழுபொறி. திருத்துனர், குழாய் பொருத்துனர், மின்சார இணைப்பு, வானொலி திருத்துனர், வானொலியும் இலத்திரனியலும்) ஆங்கிலத் தகுதித் தேர்வு. | —1987. 09. 16 — 1987. 10. 03 |
| 3. | ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் | —1987. 10. 01 |
| 4. | கணக்கியல்/வர்த்தகத் தகுதித் தேர்வு உயர்தேசிய கணக்கியல்/வர்த்தக (நிர்வாகம் முகாமை) தகுதித் தேர்வு 4, ம் வருடம். | —1987. 10. 02 — 1987. 10. 07 |
| 5. | உயர் தேசிய கணக்கியல்/வர்த்தகத் தகுதித் தேர்வு - 2, ம் வருடம்; படம் வரைஞர். | —1987. 10. 08 — 1987. 10. 14 |
| 6. | உயர் தேசியக் கணக்கியல்/வர்த்தக தகுதித்தேர்வு - 3, ம் வருடம், | —1987. 10. 15— தொடக்கம் |
| | தொழினுட் பவியலாளர்களுக்கான தேசிய தராதரப் பத்திரம் (பொறியியல் பயிற்சிநெறிகள்) | —1987. 10. 23— தொடக்கம் |

சி. இராசேந்திரா
(அதிபர்)
தொழினுட்பக்கல்லூரி,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29-08-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org